KALKI 10.8.2003 ரூ.6.00


கல்கி



புதுவை வாசகர்களுக்கு ரூ.50,000 பரிசு!






தரம், நம்பிக்கை, நாணயத்துடன்
ஆடி
கழிவு
5-50%
ஆடிக்கு போத்தீஸ். வேறென்ன சொல்ல?
Ideopraxist
போத்தீஸ்
அழகிய ஜவுளிகளின் ஆலயம்
உஸ்மான் ரோடு, பனகல் பார்க், தி.நகர், சென்னை-17. ☎ 2431 0901

கல்கி

10.8.2003



தனுஷ் 18

72-74



4-6 கஷ்டமில்லாமல் கிடைக்குது கடாவா!

— புதுவை மாணவிகள் மகிழ்ச்சி

26-27 திகில் வீடும் பிஜிலி பாப்பாவும்

81-83 வீரமணி: பழி தீர்த்துக் கொண்டதா போலீஸ்?

95 'காம்'ராஜ்!

புதுவைச் செய்திகள்: ப்ரியன். ஆர்.சி.ஜெயந்தன்

அட்டைப் படம்: டிஜிட்டல் சண்முகம்

ரிமோட்

இல்லை... இல்லவேயில்லை!



முகத்தில் சோகமே இல்லை

இவர் மிகவும் முக்கியமான பேர்வழி தான். பேட் செய்தபோது முகத்தை அடிக்கடி க்ளோசப்பில் காட்டினார்கள். (ஈ.எஸ்.பி.என்.). அதில் அந்த சோகமோ கோபமோ புலப்படவில்லை. உலகிலேயே கிரிக்கெட்டில் பதினெட்டாம் ராங்கில் இருப்பவர் என்றார்கள். இந்தப் பந்தயம் முடிந்த கையோடு "இனி நான் இங்கிலாந்து அணியின் டெஸ்ட் போட்டிகளின் காப்டனாக இருக்கமாட்டேன்'' என்று நாஸர் உசேன் அறிவிப்பார் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. (ஒரு நாள் பந்தய கேப்டன் பதவியிலிருந்து உலகக் கோப்பை முடிந்த கையோடு இவர் விலகி விட்டது நினைவிருக்கலாம்).

சிம்ரனுக்கு டப்பிங் இல்லை!

'முதல் மரியாதை' திரைப் படத்தில் ராதா நடிப்பில் அசத்தியபோதும் இவர் சொந்தக் குரலில் பேசவில்லை என்பதுதான், இவர் தேசிய விருது பெறத் தடையாக இருந்தது என்றார்கள். 'கோவில்பட்டி வீரலட்சுமி' திரைப்படத்தில் இதேபோல் ஜாக்கெட் இல்லாமல் நடித்திருக்கும் சிம்ரன், விருதை எதிர் பார்க்கிறாரா என்பது தெரியவில்லை. என்றாலும் சொந்தக் குரலில் பேசியிருக்கிறார். பழு இல்லாமல் இருக்கிறது என்பதுதான் வியப்பான செய்தி.

திருவிளையாடலில் ஜெட் லீ இல்லை

ஏறி வந்த ஏணியை எட்டி உதைக் கலாமா? உதைக்கலாம். நீங்கள் ஜெட் லீயாக இருந்தால். ஸ்டார் விஜய்யில் 'ஒன்ஸ் அப்பான் எ டைம் இன் சைனா' திரைப் படத்தில் இவரும் சீனியர் நடிகர் ஒருவருமாக ஏணிகளில் ஏறியும், அவற்றை உதைத்தும் தாவியும் செய்த சண்டைக்காட்சி த்ரில்லாகத்தான் இருந்தது. சனிக் கிழமை களில் ஒளிபரப்பப்படும் இதுபோன்ற அதிர டிப் படங்களின் வசனத்தைத் தமிழ்ப் படுத்துவதுதான் படுத்தல். திருவிளையாடல் படத்தில் பாலையா இடம் பெற்ற ஒரு காட்சியில், வசனத்தை மட்டும் உல்டா பண்ணி இந்தப் படத்தின் ட்ரெய்லர்போல காண்பித்தது ரசிக்கும்படி இருந்தது.

பாரதிராஜாவிடம் இட்லி இல்லை

ஜெயா டி.வி.யில் சுதாங்கனுடன் 'விவாதம்' (!) நடத்தினார் பாரதிராஜா. 'உங்களுக்கு மிஞ்சியோ அல்லது உங்களுக்கு அடுத்த நடிகனாவோ இருக்க வேண்டும் என்ற லட்சியத்துடன்தான் சென்னைக்கு வந்தேன்" என்றாராம் பாரதிராஜா. யாரிடம்? சிவாஜி கணேசனிடம். அதற்கு இவர் 'கண் ணாடில உன் முகத்தைப் பார்த்திருக்கியா?"



என்றாராம். இதைக் குறிப்பிட்ட பாரதிராஜா, "மெட்ராஸுக்கு வந்தப்புறம்தான் தெரிஞ்சுது. கதாநாயகனா நடிக்க இட்லி இட்லியான முகங்கள்தான் தேவைன்னு" என்றார்.

'ஒலி'யில் லாஜிக் இல்லை

'மெட்டி ஒலி'யில் தனது தற்போதைய மனைவியின் மீது அனாவசிய சந்தேகம் கொண்டதற்குக் காரணம் இதுதான், என்று ஒருவர் தனது ஃப்ளாஷ்பேக்கைக் குறிப்பிடுகிறார். தவறாக இவர் தம் (முதல்) மனைவியைத் தமது நண்பனுடன் இணைத்துச் சந்தேகப்பட, அவன் தீக்குளிக்கிறான். இதுதான் தமது சந்தேக புத்திக்குக் காரணம் என்று கூறி பாவமன்னிப்புக் கேட்கிறார் இவர். இதெப்படி? இப்படி ஒரு ஃப்ளாஷ்பேக் கொண்டவர் (அதுவும் தமது அவசர புத்திக்காக வருந்துபவர்) தமது அடுத்த மனைவிமீது அனாவசியமாக சந்தேகப்படாமல்தானே இருந்திருக்க வேண்டும்? மாறாக, ஆதாரமன்றிச் சந்தேகப்பட்டு, மனைவியைத் துன்புறுத்துவதில் லாஜிக் இடிக்கிறதே! (சொல்லப் போனால் இதுபோன்ற கேள்வியை மற்றொரு பாத்திரம் கூட இவரைப் பார்த்துக் கேட்கிறது). ஆனால் பதில்தான் இல்லை.

- ஆதர்ஷ்

கல்கி

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

ஆசிரியர் :
சீதா ரவி

ஆசிரியர் குழு :
செ. ஏக்நாத் ராஜ்
அனுராதா சேகர்
ஆர்.சி. ஜெயந்தன்

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
22345622, 23, 24
தொலைநகல் :
044 - 22345621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
kalki@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com
கல்கி இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.330/-
ஆறு மாதம் : ரூ.165/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 62 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.2000/-

Bharathan Publications Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

ஒவ்வொரு இதழும் உங்கள் மேன்மைக்கு

காசு வாங்காத 'காந்தி' டாக்டர்கள்

புதுவைக்கு இப்போது புதிய அந்தஸ்து கிடைத்திருக்கிறது. ஆம்! நாற்பது கி.மீக்குள் அங்கு நான்கு மருத்துவக் கல்லூரிகள். காலாபட்டில் பிம்ஸ், கோரிமேட்டில் ஜிப்மர், கடலூர் சாலையில் அறுபடை வீடு, அடுத்து கடைசியாக மகாத்மா



• ஜெஸினா



காந்தி மருத்துவக் கல்லூரி. அதுவும் 'மகாத்மா காந்தி' பிரம்மாண்டமாக எழுந்து நிற்கிறார். ''எங்க கல்லூரியின் கட்டுமானத்துக்கு ஈடு இணையே கிடையாது'' என்று சவால் விடுகிறார்கள் சேலம் சுஜாதாவும் மதிவதனாவும். இந்தக் கல்லூரி

• ஷ்ரத்தா









• மேகலா



• அன்பி

யில் பாரத விலாஸே சங்கம மாகியிருக்கிறது. தில்லி மேகலா, கேரளா 'அன்பி', 'மாஹி' ஜெஸினா, கடலூர் திவ்யா, யேனாம், விஜயலட்சுமி சென்னை 'ஷ்ரத்தா' என்று எல்லாம் பசையுள்ள பார்ட்டிகள். இல்லையென்றால் மெடிக்கல் கல்லூரியில் காலெடுத்து வைக்க முடியுமா? பாலாஜி கல்வி அறக்கட்டளை தலைவர் ராஜ கோபால் பணத்தைக் கூடை கூடையாகக் கொட்டியிருக்கிறார் (முதலீடு!) பெண்கள் ஹாஸ்டல் மெஸ்ஸில் எட்டிப் பார்த்த போது, பொது மருத்துவமனை ஓ.பி.போல உள்ளே ஒரே கூச்சல்!ஒன்றுமில்லை... உற்சாக அரட்டைக் கச்சேரிதான்.

"வாங்க ஸார்... வழி தெரியாம வந்துட்டீங்களா... தமிழர் பண்பாடு.... முதலில் சாப்பிடுங்க" என்று நம்மை டைனிங் டேபிளில் உட்கார வைத்து விட்டது ஒரு கும்பல். சரவண பவன் தோற்றுப் போய் விடும். உண்ட களைப்பில் சோபாவில் சாய்ந்து கொள்ளலாம் என்றால் நம்மை கலாய்க்கத் துவங்கி விட்டார்கள். "ஸார் பொண் டாட்டி, புள்ளை குட்டியோடு ஒரு டாக்டர் கன்ஸல்டிங் ரூமில் உட்கார்ந்திருக்கிறார். ஏன் தெரியுமா? நாம் ஊசி போட்டுக் கொண்ட சிறுவன் போன்று முழிக்க, "அய்ய... அட இது கூடத்

Cyan





• விஜயலட்சுமி

தெரியாதா? அவர் "ஃபேமிலி டாக்டர்" என்றார் ஜெஸீனா. 'ஓ... கேர்ள்ஸ்... உங்களை விடறதில்லை.' "மகாத்மா காந்தி கல்லூரியில் படிக்கிறீங்களே, அவருடைய வாழ்க்கை வரலாறு புத்தகத்தின் பெயர் தெரியுமா?" என்று ஏதோ கஷ்டமான கேள்வியைக் கேட்டுவிட்டது போல மிதப்புடன் நிமிர்ந்தோம். "இதெல்லாம் ஜுஜுபி கேள்வி. 'My Experiments with Truth' இது தெரியாதாக்கும்" என்ற நக்கலடித்தார் ஷ்ரத்தா. "சரி பத்து மார்க் வைத்துக் கொள்ளுங்கள். "காந்தியின் கொள்கையில் உங்களுக்கு மிகவும் பிடித்தது?" என்று மேகலாவைப் பார்த்து அம்பு வீசினோம். "அகிம்சை... சார்... அகிம்சை..." என்று திருப்பியடித்தார் அவர். பெண்களே! உங்களை விடுவதில்லை என்று திருவிளையாடல் பாணிக்கு தாவினோம்.

"பிடித்தது?"

"கல்லூரி லெக்சர் ஹால்."

"நெகிழும் விஷயம்?"

"கல்லூரி ஆஸ்பத்திரியில் ஏழை, பணக்காரர் என்று சகலருக்கும் கொடுக்கப்படும் இலவச சிகிச்சை."

போதும், கல்லூரி புகழ் பாடியது.

"பாண்டியில் அமைதியான இடம்?"

"அரவிந்தர் ஆஸ்ரமம்."

"பாண்டியில் பிடிக்காத விவகாரம்?"

"தண்ணி போட்டு தடுமாறும் ரிக்ஷாக்காரர்கள்."

"சொர்க்கம்?"

"எங்கள் ஹாஸ்டல் தான்."

"கலபமாகக் கிடைப்பது?"

"கடாவா!"

"கடாவா?"

"ஆம் ஸார்... எங்கள் அனாடமி வகுப்புக்கு மரணமடைந்தவர்கள் உடல்கள் கிடைப்பதில் எந்தக் கஷ்டமும் இல்லை." (இந்த வகையில் 15 வயதுக்கு கீழே நோ) விட்டால் நம்மையே கடாவா வாக்கிப் படுக்க வைத்து விடுவார்கள் என்று அவசரமாக 'பை' சொல்லி விட்டோம்.



● சர்க்கஸ் நடந்து கொண்டிருந்தது. ஒரு பெரிய சிங்கத்தின் பிடரியை ஓர் இளம் பெண் அன்போடு தடவிக் கொடுத்தாள்.

சிங்கம் பூனைக் குட்டியைப் போல் அமைதியாக அவள் மீது தன் தலையை உரசிக் கொண்டிருந்தது.

"வேறு யாராவது இதுபோல் செய்யத் தயாராக இருக்கிறீர்களா?" என்று சர்க்கஸ் மேலாளர் பார்வையாளர்களைப் பார்த்துக் கேட்டார்.

ஓர் இளைஞன் முன் வந்தான்.

"உண்மையிலேயே நீ தயாரா?"

"சிங்கம் செய்ததைப் போல நானும் செய்யத் தயார்!" என்றான் இளைஞன்!

– இறையன்பு எழுதிய 'ஏழாவது அறிவு' நூலிலிருந்து

தகவல்: என். ஜரினா பானு

ஆஹா!

ரூ.50,000 பரிசு!

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச வாசகர்களுக்காக மட்டுமே **கல்கி** வழங்கும் கலக்கல் குவிஸ் போட்டி



ரூ. 50,000 மெகா பரிசு பெற நீங்கள் செய்ய வேண்டியது ரொம்ப ரொம்ப சிம்பிள்!

கீழே உள்ள கூப்பனில் இடம் பெற்றுள்ள கேள்விகளுக்கு பதில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அடுத்து வரும் 17, 24, 31 ஆகஸ்டு மற்றும், 7, 14 செப்டெம்பர் இதழ்களிலும் இதே போன்று குவிஸ் கூப்பன்கள் இடம் பெறும். ஆறாவது வார இறுதியில் ஆறு கூப்பன்களையும் நிரப்பி, உங்கள் பெயர், விலாசத்துடன் எங்களுக்கு அனுப்ப வேண்டும்.

- அனைத்து கேள்விகளுக்கும் சரியான பதில்கள் எழுதிய பாண்டிச்சேரி வாசகர் ஒருவருக்கு ரூ. 50,000 பரிசு வழங்கப்படும்.
- ஒருவருக்கு மேற்பட்ட வாசகர்கள் சரியான பதிலை எழுதியிருந்தால், இருக்கவே இருக்கிறது குலுக்கல் முறை.
- ஆறுதல் பரிசுகளாக ரூபாய் பத்தாயிரம் பெறுமானமுள்ள வானதி பதிப்பகம் வழங்கும் புத்தகங்கள் நூறுபேருக்குக் காத்திருக்கின்றன.
- உறையின் மீது 'ஆஹா! 50,000 (பாண்டி)' என்று கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- போட்டி தொடர்பாக விசாரணைகள் அனுமதிக்கப்படமாட்டாது.
- இந்தப் போட்டி பாண்டிச்சேரி யூனியன் பிரதேச கல்கி வாசகர்களுக்கு மட்டுமே.
- ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.



ஆஹா! 50,000 பரிசு! குவிஸ் போட்டி கூப்பன் - 1

1. புதுவையில் வாழ்ந்த காலத்தில் பாரதியார் வணங்கிய முழு முதற் கடவுள் : ....

2. புதுவை பெருமாள் தெருவில் வாழ்ந்த பிரபல 'தாஸ' கவிஞர் : ....

3. புதுச்சேரி என்றதும் நினைவுக்கு வரும் ஆஸ்ரமத்தின் பெயர் : ....

4. டூப்ளேயின் பிரதம ஆலோசகரான இவரது டயரிக் குறிப்புகள் மிகப் பிரபலம்: ....

5. பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் முதலில் கைப்பற்றிய கிராமம்:

....

6. பாண்டிச்சேரி அதிகாரபூர்வமாக இந்தியப் பகுதியான வருடம்: ....

அடுத்த பரிசுப் போட்டி எந்த ஊர் வாசகர்களுக்கு? விரைவில் அறிவிக்கப்படும். காத்திருங்க! கல்கி பார்த்திருங்க!

சுமி சூப்பர் மார்க்கெட்





ப்ரியமான தோழி பேரில் ரொம்ப கோபமாக இருக்கிறார் டாக்டர் பீம சத்ய நாராயணன். ஐயோ! உடனே தப்புக் கணக்குப் போட வேண்டாம். கோபம் என் பேரில் இல்லை, 'ப்ரியமான தோழி' படத்தின் பேரில். ''ஐம்பதாண்டுகளாக கௌரவமான படங்கள் எடுத்து வரும் ஏவி.எம். நிறுவனத்தின் படத்தில் முதியோரை நோகடிக்கும் காட்சி வரலாமா?'' என்று கேட்கிறார். இளைஞன் ஒருவனைப் பார்த்து, 'உன்னொத்த இளைஞர்கள் வேலையில் இருக்க, இன்னமும் நீ வேலை தேடிக் கொள்ளாமல் இருக்கிறாயே!' என்று கிழவர் கேட்க, ''உன்னொத்த கிழவர்கள் போய்ச் சேர்ந்தாயிற்று; நீ மட்டும் இன்னும் உயிரோடிருக்கிறாயே!'' என்கிறானாம் இளைஞன். இக் காட்சி திரும்பத் திரும்ப விளம்பரமாகத் தொலைக் காட்சியில் வேறு வருவது மிகுந்த வேதனை தருகிறது என்கிறார் பீம சத்யநாராயணன்.

''முதியோருக்குக் கௌரவமும் சமுதாய அந்தஸ்தும் வழங்க பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் முயன்று வருகையில்'' இது போன்ற 'ஹீரோ' வசனங்கள் அந்த நற்பணிகளையெல்லாம் ஒரே போடில் தகர்த்துவிடும்'' என்கிறார். 'சகோதர்' சமுதாயப் பணி அமைப்பின் தலைவர் இவர்.

'வேலை கிடைக்காத வெறுப்பில்தானே பேசுகிறான் இளைஞன்' என்று விளக்கம் சொன்னால், 'வெறுப்பில் பேசினாலும் பொறுப்போடு பேச வேண்டும்' என்பது சகோதரர் பதிலாக இருக்கும்.

வேலை கிடைத்து, நாட்டுக்கு உழைத்து, இப்போது ரிடையராகி பென்ஷன் வாங்கும் ஒரு முதியவரின் கதையைப் பார்ப்போமோ...? மத்திய அரசு ஊழியர் அவர். மத்திய அரசு சுகாதாரத் திட்டத்தின் கீழ், ஓய்வு பெற்ற ஊழியர் என்ற முறையில் இலவச மருத்துவ உதவி பெறுபவர். இவருக்குச் சமீபத்தில் ஹைதராபாத் அரசு மருத்துவ மனையில் பரிசோதனைகள் நடந்து அதற்குரிய கட்டணம் மத்திய அரசின் சுகாதார திட்டத்திலிருந்து பெறப்பட்டிருக்கிறது. இதென்ன பெரிய செய்தியா? என்று கேட்பீர்கள். செய்தி இதுதான்: நடந்திருப்பது ஆண்களுக்கு மட்டுமே செய்யப்படும் பிராஸ்டேட் பரிசோதனை... நோயாளியோ ஒரு பெண்! இவ்வாறு பல 'கற்பனை' நோயாளிகளின் 'அதிசய' நோய்களுக்குப் பணம் பெறப்பட்டு, மருத்துவமனைகளில் அலுவலர்கள், அதிகாரிகளின் கைக்குக் காதும் காதும் வைத்தது போல் மாறியிருப்பது தெரிய வந்துள்ளது. ஆரோக்கியம், உடம்பிலும் இல்லை; மனசிலும் இல்லை!

லூயி பிரவுன் நினைவிருக்கிறதா...? இருபத்தைந்து ஆண்டு

ப்ரியமான தோழி; ப்ரியமற்ற வசனம்!

களுக்கு முன் பிறந்த அதிசயக் குழந்தை. (அப்போது நான் பிறந்திருக்கவில்லை என்பது சத்தியம்). லூயி பிரவுன் உலகின் முதல் டெஸ்ட் டியூப் குழந்தை. ஜூலை 25 அன்று இருபத்தைந்தாவது வயதில் அடியெடுத்து வைத்தார் என்றால், பிறந்த ஆண்டை நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள்! இப்போது ஐ.வி.எஃப் முறை கருத்தரிப்பு டான்ஸில்ஸ் ஆபரேஷன் அளவுக்குச் சகஜமாகிவிட்டது. ஆனால் கால் நூற்றாண்டுக்கு முன் அது பெரிய சாதனை. அதனால்தான் இவ் வாண்டு ஜூலை 25 அன்று, அதே முறையில் பிறந்த பல குழந்தைகள் ஒன்று சேர்ந்து கொண்டாடிக் களித்தார்கள்.



• சாந்தா சின்ஹா



• லிங்டோ

தேசிய திரைப்பட விருதுகளின் பளபளப்பில் மக்ஸேஸே விருது அறிவிப்பு மங்கிப் போயிருக்கிறது. பெற்றுள்ள இருவர் நமது தலைமைத் தேர்தல் கமிஷனர் லிங்டோ; சமூக சேவகி சாந்தா சின்ஹா.

லிங்டோ, மக்களாட்சியில் தேர்தல்கள் முறையாக நடப்பதன் முக்கியத்துவத்தை நிலைநாட்டினார்.

சாந்தா சின்ஹா...? – இவர் குழந்தைகள் உரிமைக்காகப் போராடும் சமூக சேவகர். ஆந்திராவில் குழந்தைத் தொழிலாளர்கள் மிக அதிகமாக இருந்த ரங்காரெட்டி மாவட்டத்தில் அடிப்படைக் கல்வியை அர்த்தமுள்ளதாக மாற்றி, குழந்தைகள் பணிக்கு அனுப்பப்படுவதை அடியோடு நிறுத்தினார். சுமார் ஒரு லட்சம் கொத்தடிமைக் குழந்தைகளை மீட்டு, அவர்கள் புனர் வாழ்வு பெற வழி செய்திருக்கிறார்.

குழந்தைத் தொழிலாளர்கள் உருவாக ஏழ்மைதான் காரணம் என்பதை மறுக்கிறார் சாந்தா. "இல்லை; பெற்றோரின் கல்வியின்மை, அறியாமை தான் அதற்குக் காரணம்" என்கிறார். "படிப்பதற்குப் பக்கத்தில் பள்ளி இருந்தால் தானே...?" என்று கேட்கிறார்!

இனி, சுமியின் ரகசியத் தகவல் வட்டத்தை எட்டியுள்ள செய்தியொன்று:

வழக்கமாக ஆகஸ்ட் மாதத்துக்குள் ஏறத்தாழ முடிவாகிவிடும் சென்னை மியூசிக் அகாடமி இசை விழா நிகழ்ச்சி நிரல். இவ்வாண்டு இன்னமும் அகாடமி இடித்த புளி போல் இருக்கிறது. காரணம், உள்ளே நிலவும் சுசமுசாக்கள்.

செய்தி மற்றொன்று:

அமரர் கல்கியின் பாடல்களை அழகான புத்தகமாக வெளியிட இருக்கிறது வானதி. கல்கி அவ்வளவு பாடல்கள் எழுதியிருக்கிறாரா...? அவ்வளவாக இல்லாவிட்டாலும், அழகான பாடல்கள் என்கின்றனர் பதிப்பகத்தார்.

– சுமி

தித்திக்குதே



கணப்பொழுதும் காத்திருப்பதில்லை காலம். காலம் காலமாய்க் காத்திருக்கும் காதல் – இது கவிதை! இதைச் செல்லு லாய்டில் செதுக்கினால் அதுதான் 'தித்திக் குதே' திரைக்கவிதை!

பிள்ளைக் காதலோடு மொட்டுக் களாய்ப் பிரிந்து போய்விடுகிற வேணு, அனு இருவருக்குமிடை யில், பத்தாண்டுகளுக்குப் பிறகும், பட்டுப் போகாத பசுமரத்தாணி யாய்க் காதல். இருவரும் வளர்ந்த பிறகு, அருகருகே இருந்தும், அடையாளம் காண முடியாமல் தவிக்க, நாமும் தவிக்கிறோம். காரணம், சம்பவங் களில் லாஜிக் பிசகாத யதார்த்தமும், லைவ் வான உணர்ச்சிகளும் நிறைந்திருப்பதில், வேணு, அனு இரு வரும் ரத்தமும் சதை யுமாய் நெருங்கி வருகிறார்கள்.

ஒரு கட்டத்தில் தனித்தனியே அடை யாளம் கண்டு கொண்டு, பரஸ்பரம் வெளிக் காட்டிக் கொள்ளாமல் இருவருமே ரகசியம் காக்க, அய்யோ! நல்லபடியாக நகரும் படைப்பில் சினிமாத்தனம் படையெடுத்து விடுமோ என்ற படபடப்பு வந்து விடுகிறது. ஆனால், அனு தன்னை நிராகரித்தால்தான் தனது தங்கையின் திருமணம் தடைபடாது என்ற நிலையில், சீனு எடுக்கும் பகீர் முடிவு கண்டு, அவர் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளாமல் இருந்தது எத்தனை நல்லதாய்ப் போய்விட்டது, என்று இதயம் பொரும வைத்து விடுகிற அறிமுக இயக்குனர் பிருந்தாசாரதி, சினிமா ஊடகத்தைத் துல்லியமாய்ப் புரிந்து கொண்டு துடிப்பான படத்தை வழங்கி யிருக்கிறார்.


வேணு - அனு இருவரது காத் திருத்தலையும் நியாயப்படுத்த, அவர்களின் பால்யகால நட்புக் காட்சிகளை, ஆழமும் அழுத்தமு மாய்க் காட்டி விடுவதில் முழுப் படமும் கம்பீரமாய்த் தலை நிமிர்ந்து நகர்கிறது.

கொஞ்சம் ஆக்ஷன் இமேஜுடன் அறிமுகப் படத்தில் நடிக்கவும் செய்த நாயகன் ஜீவா, வேணு பாத்திரத்தின் குணாதிசயங் களிலிருந்து விலகிப் போய் விடாமல் மிக பவ்யமாய் நடித் திருக்கிறார். என்றாலும், அனுவாக வந்து நிறைவான நடிப்பில் பாராட்டு களை அள்ளிக் கொண்டு போகிறவர் ஸ்ரீதேவிதான்.

சினிமாவில் இருந்து கொண்டே ஆக்ஷன் ஹீரோக்களை விளாசுகிற தில் ஆசாமியாக விவேக் வயிற்றைக் கிள்ளு கிறார். படமோ நெஞ்சைக் கிள்ளுகிறது!

— விஷ்வல்தாசன்

• அபய் ஆவரெஜ்



ஜெ: அபாயகரமான அயோத்தி ஆதரவு!

பொது சிவில் சட்டத்தை (Uniform Civil Code) உருவாக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் சமீபத்தில் சிபாரிசு செய்திருக்கிறது. கிறிஸ்துவ சொத்துரிமை தொடர்பான ஒரு வழக்கை ஆராய்கையில் வெளியிடப்பட்ட இக்கருத்து, நமது அரசியல் சாசனத்தில் உள்ள போதிலும், பல ஆண்டுகளாகவே அரசியல் தலைவர்களால் ஓரங்கட்டி வைக்கப்பட்டு வருகிறது.

நமது நாட்டில் பல மதங்கள் தழைப்பதால், அந்தந்த மதங்களுக்குரிய தனிச் சட்டங்களே அந்தந்த மதத்துக்காரர்களைப் பெரும்பாலும் கட்டுப்படுத்துகிறது. இதனால் சமுதாய நீதி என்பது மதத்துக்கு மதம் வேறுபடுகிற குழப்பம் நிலவுகிறது என்பதோடு, சில மிகப் பிற்போக்கான அம்சங்கள் அடங்கிய மதச் சட்டங்கள் சமூக வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் புனரமைப்புக்கும் தடையாக இருந்து வருகின்றன.

இதை உணர்ந்துதான் ராஜீவ் காந்தி, தாம் பிரதமராக இருந்த காலத்தில் ஷாபானோ வழக்கின் தீர்ப்பையொட்டி நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா கொண்டு வந்தார். ஆனால், அரசியல் ரீதியான காரணங்களுக்காக அம்முயற்சி கைவிடப்பட்டது.

பொது சிவில் சட்டத்தை எதிர்க்கும் அடிப்படைவாதிகள் பல மதங்களிலும் உள்ளார்கள். இவர்கள் தங்கள் மத நூல் விதிக்கும் சட்டங்கள் மாற்றப்படக் கூடாது என்று பிடிவாதம் பிடிப்பவர்கள். அச் சட்டங்கள் மாற்றப்பட்டால் தங்கள் மதம் வலுவிழக்கும்




கல்கி

2003 ஆகஸ்ட் 10
சுபானு ஆடி 25
மலர் : 62
இதழ் : 2



தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



என்று நம்பி, தங்கள் மதத்தவரையும் நம்பச் செய்பவர்கள் இவர்கள்.


இப் பிரிவினரைத் திருப்திப்படுத்தி மகிழ்ச்சியோடு வைத்திருந்தால் வோட்டு அறுவடை சுலபமாகும். இதை உத்தேசித்துதான் பொது சிவில் சட்டம் கொண்டு வர முடியாமலிருக்கிறது.

இப்போது திரும்பவும் உச்ச நீதிமன்றமே அதை சிபாரிசு செய்ய, ஜெயலலிதா அந்த சிபாரிசை வரவேற்றிருக்கிறார். நாமும் வரவேற்கிறோம். எனினும், பொது சிவில் சட்டத்தை, காட்டமான எதிர்ப்பு ஏதுமின்றி, அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சியுடன் ஏற்றுச் செயல்படுத்தும் வகையில் கொண்டுவர வேண்டும்.

- பொது சிவில் சட்டம் மத உரிமைகளைப் பறிக்காது.
- அனைத்துத் தரப்பினரையும் சமமாக பாவிப்பதற்காகவே அது ஏற்படுத்தப் படுகிறது.
- சிறுபான்மையினருக்குப் பொது சிவில் சட்டத்தால் எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படாது. அவர்கள் நிலை உயர்ந்து மேம்படுவதற்கே அச் சட்டம் உதவும்.
- பொது சிவில் சட்டம் என்பது ஹிந்து சட்டம் அல்ல; இந்தியா தொடர்ந்து மதச் சார்பற்ற நாடாகவே விளங்கும்.

– இது போன்ற கருத்துகள் தெளிவாக எடுத்துச் சொல்லப்படவேண்டும். மக்கள் மனங்களைத் தெளிவுபடுத்தித் தயார்ப்படுத்த வேண்டும்.

இதையெல்லாம் திட்டமிடும்போதே எதிர்க்கட்சியினர் எதிர்ப்பார்கள். பொது சிவில் சட்டம் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறிப்பதாக துஷ்பிரசாரம் நடக்கும். இதைத் தவிர்க்க, ஆளும் பா.ஜ.க. கூட்டணி அரசு, இதர கட்சிகளையும் ஈர்த்து, அவர்கள் ஒத்துழைப்புடனேயே புதிய சட்டத்தை வடிவமைத்து, அதன் பிறகு நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர வேண்டும். பல்வேறு மதங்களைச் சேர்ந்த பிரபலங்களை இந்த முயற்சியில் பங்கேற்கச் செய்யலாம்.



பொது சிவில் சட்டத்தை ஆதரித்துக் கருத்து கூறியிருக்கும் தமிழக முதல்வர், அது அமைதியான முறையில் நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் பெற நல்ல யோசனைகள் கூறி தோள் கொடுத்தால் வாழ்த்துகளைப் பெறுவார்.

ஆனால், அதே மூச்சில் அவர் அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்குத் தெரிவிக்கும் ஆதரவு மிகவும் விநோதமாக இருக்கிறது.

"ராமருக்கு இந்தியாவில் கோயில் கட்டாமல் வேறு எங்கே கட்டுவார்களாம்?" என்பது அவருடைய முதல் கருத்து. இதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

"அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதை கொள்கை அளவில் ஏற்கிறேன்" — இது இரண்டாவதாக அவர் வெளியிட்டிருக்கும் தீர்மானமான கருத்து. இதுவும் ஏற்கத் தக்கதே. அயோத்தியில் ஏதேனும் ஓரிடத்தில் ராமர் கோயில் அமைவதை யாருமே எதிர்க்க மாட்டார்கள்.

"சர்ச்சைக்குரிய நிலத்தில் கோயில் எழுவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?" என்ற கேள்வி ஜெயலலிதாவுக்குக் குதர்க்கமாகப்படுகிறது. அதற்குப் பதில் கூறுவதையே தவிர்த்திருக்கிறார். இது அபாயகரமானது.

இந்த மழுப்பலில் இருக்கிற அபாயம் சிறுபான்மை இனத்தவருக்குப் பெரிய அச்சுறுத்தல். பொது சிவில் சட்டத்தை வரவேற்கும் முதல்வரின் போக்குடன் இந்த மழுப்பலையும் இணைத்துப் பார்த்து, தங்களுக்கு எதிர்ப்பும் அபாயமும் கிளம்பியிருப்பதாக சிறுபான்மையினர் எண்ணுவதும் நம்புவதும் இயல்பு.

ராமர் கோயிலை சர்ச்சைக்குரிய பூமியில் கட்டுவதை அ.தி.மு.க. கொள்கை அளவில் ஏற்கவில்லை என்று சொல்வதில் முதல்வருக்குச் சங்கடம் இருக்குமானால், இது விஷயத்தில் நீதிமன்றத் தீர்ப்பு எதுவானாலும் அ.தி.மு.க. அதை ஏற்கும் என்றாவது சொல்லியிருக்கலாம். அப்படியும் கூறவில்லை. மதில்மேல் பூனையாகவே அவர் இருக்க விரும்புவது புரிகிறது. ○



அன்னை வருகின்றார்!

“ஒரு விநாடியே என்னைப் பிரார்த்தனை செய்தவர்களின் வாழ்க்கைக்கும், நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்” என்கிறார் ஸ்ரீ அன்னை.

அன்னை சக்தி மிக்கப் பேரொளி. அன்னையை தெய்வமாக ஏற்றுக் கொண்டவுடன் அப்பேரொளியின் ஒரு பொறி, பக்தனின் ஆன்மாவை வந்தடைந்து, அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விடுகிறது.

காலத்தால் ஏற்பட்ட கர்ம வினையை அவ்வொளிக்குச் சமர்ப்பணம் செய்து விடுங்கள். அதன் பலனை அன்னையின் தெய்வீக ஒளி பூரணமாக அழித்துவிடும்.

அன்னையின் அருள் அத்தனை வலிமை வாய்ந்தது. தம்மைச் சரண் அடைந்தவர்களுக்கு அமிர்தப் பிரவாகம் போன்றது.

அன்னை உங்களைத் தேடி வருகின்றார். அவரை நீங்கள் பூரணமாக ஏற்றுக் கொள்ளுங்கள். வாழ்வு வருகிறது, பெற்றுக் கொள்ளுங்கள். வளம் வருகின்றது, வாங்கிக் கொள்ளுங்கள்.

- கர்மயோகி



* அவலில் தயாரான சர்க்கரைப் பொங்கல், காரச் சாதம்

நலம்! நலமறிய அவல்!


பாண்டிச்சேரி கடற்கரையை ஒட்டிய கேன்டீன் வீதியில் புதிதாக நடந்து போகிறவர் கொஞ்சம் பார்த்து நடக்க வேண்டும். காரணம், இடுப்பில் ஒரு முழம் துணியை மட்டும் கட்டிக் கொண்டு, உடல் முழுவதும் சேற்றைப் பூசிக் கொண்டு, இயல்பாக நடந்துபோகிற பெரிசுகளைக் கண்டு மிரள வேண்டியிருக்கும். அதுவே பெண்கள் என்றால் முகம், கை, கால்களில் பச்சைப் பசேல் பசையை அப்பிக் கொண்டு பயமுறுத்துகிறார்கள். என்னதான் நடக்கிறது இந்த வீதியில்?

சேற்றுக் குளியல், வாழை இலைக் குளியல், வெஜிடபிள் மாஸ்க் என்று தூள் பரத்தும் ஒரு டஜன் இயற்கை இல்லங்கள், இங்கே கேரளத்திற்கு இணையாக நிரம்பி வழிகின்றன. உடலில் நோய் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, நாள் ஒன்றுக்கு நானூறு ரூபாய் கொடுத்து, இங்கே தங்கி விடுகிறார்கள். பாதாள அறை தியானம், மூலிகைத் தைலக் குளியல், சமைக்கப்படாத இயற்கை உணவு, என இயற்கை மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.


கைக்குத்தல் அரிசியில் தயாராகும் அவல் அடிப்படை. இந்த அவலைக் கொண்டு சாதம் தயாரிக்கிறார்கள். தயிர் சாதம், புளி சாதம், சர்க்கரைப் பொங்கல் என்று அசத்துகிறார்கள். அவலில் மிகச் சரியான அளவு தண்ணீர் தெளித்து மண் பானைக்குள் வைத்து மூடி, கொஞ்ச நேரம் சூரிய ஒளியில் வைத்துவிட்டால் சாதம் ரெடி!

"அரிசி அவல் தவிர வரகு அவல், சோள அவல், கம்பு அவல், கோதுமை அவல் என்று இங்கே அவலின்றி அமையாது இயற்கை உணவு" என்கிறார் இங்கே எனர்ஜி ஹெல்த் ஹோம் நடத்திவரும் இயற்கை மருத்துவர் கணேசன். ●

* எனர்ஜி ஹெல்த் ஹோமில் மண் குளியல்



* டாக்டர் கணேசன்







* பன்வாஸி - மனைவி யோகிதாவுடன்..

பெண்டு நிமிர்த்தும் பன்வாஸி!

"சின்ன வயசிலேயே எங்கப்பா எனக்குக் கொடுத்த அட்வைஸ் எந்த ஒரு பெண்ணையுமே அழ வைக்கக் கூடாது. அவமானப்படுத்தக் கூடாது என்பதுதான். எனக்குச் சகோதரிகள் யாருமில்லை. ஆனாலும் கஸின்கள் ஏராளம். அப்பா - அம்மா கவனமாயிருந்தால், பையனுடைய ஒரு சிறு தவறையும் கூட அவனுடைய கண்ணைப் பார்த்தே கண்டு பிடித்து விடுவார்கள். ஆனாலும் சரியான முறையில் கண்டிக்காமல் விடுவதனால் தான் ஈவ் டீஸிங் இப்படித் தலை விரித்தாடுகிறது..." சொல்பவர் பெங்களூரிலிருக்கும் ஸ்பெஷல் போலீஸ் ஆபிஸர் பிரக்ருதி பன்வாஸி.

கடந்த எட்டு வருடமாக நாலாயிரத்துக்கும் மேற்பட்ட ஈவ் டீஸிங் ரோமியோக்களை, மதன க்ருஷ்ணர்களாகத் தங்களை நினைத்துக் கொள்ளும் 'ராங் நம்பர்'களைத் தரதரவென்று இழுத்து கிருஷ்ணன் பிறந்த இடத்திலேயே கொண்டு சேர்ப்பது ப்ரக்ருதியின் வழக்கம்!

பெங்களூரில் கல்லூரி, ஷாப்பிங் சென்டர், சினிமா ஹால், ஹோட்டல், பஸ் ஸ்டாண்டு... என பைக்கில் வலம் வரும் பன்வாஸி ஆபத்திலிருக்கும் பெண்ணுக்கு உதவிக்கரம் நீட்டுகிறார்.

ஈவ் டீஸிங் என்பது வருந்தத்தக்க செயல். இதனால் ஒரு பெண் அவமானம், பயம், மன உளைச்சல், வெறுப்பு.... என பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாகிறாள். பெண்ணைப் பெற்றவர்களுக்கு என் அட்வைஸ் - தயவு செய்து உங்கள் பெண் என்ன சொல்ல வருகிறாள் என்பதைக் கேளுங்கள். கட்டுப்பாடுகள் வேண்டாம். உங்கள் பெண்ணை நம்புங்கள். வக்கிர புத்தி கொண்ட ஓர் ஆணின் ஈனச் செயலுக்கு உங்கள் பெண்ணை ஏன் குற்றம் சொல்ல வேண்டும்?..." நிஜமான வருத்தத்துடன் கேட்கிறார் ப்ரக்ருதி.

பெண்களுக்குப் ப்ரக்ருதியின் அறிவுரை என்ன? "கூச்சல் போடணும் கூட்டத்தைக் கூட்டணும். உங்களிடம் வம்புக்கிழுத்தால் நெத்தியடியாகத் திருப்பி பளிச்சுன்னு பேசுங்கள். வாலைச் சுருட்டிக்கிட்டுப் போயிடுவான். பெண்கள் தைரியமா இருக்கணும். திரைப்பட நடிகை, பாடகி வசுந்தரா தாஸ் என் தோழி. ஒரு முறை அவர் மேடையில் பாடிக் கொண்டிருந்தபோது 'அசிங்கமாக லுக் விட்டுக் கொண்டிருந்தாராம் ஒரு பிஃப்டி ப்ளஸ். வசுந்தரா மைக்கிலேயே அந்த ஆளை செம டோஸ் விட்டாராம். அந்த ஆள் நைஸாக நழுவி விட்டானாம். தில்லாக இருக்கணும் பெண்கள்...' டிப்ஸ் கொடுக்கிறார் ப்ரக்ருதி.

சிறப்புக் காவல் அதிகாரியாகப் பணியாற்றினாலும் சம்பளம் ஏதுமில்லை. சமூக சேவகராகத் தான் செயல்படுகிறார் ப்ரக்ருதி.

இதனால் அவருக்கு அபாயமும் உண்டுதான். கடந்த வருடம் ஈவ் டீஸிங் செய்து கொண்டிருந்த கும்பலைப் பிடிக்கச் சென்றபோது ஏற்பட்ட மோதலில், இவர் காதில் விழுந்த அறையில் ஒரு பக்க காது செயலிழந்துவிட்டதாம்.'

பன்வாஸி எழுதிய 'ஈவ் டீஸிங் ஈவில்ஸ்' என்ற புத்தகம் வெளிவர இருக்கிறது.

சந்திப்பு : **லதா சேகர்**

தகவல் : **அனிதா ராமச்சந்திரன்**

ஆரணி யுவராஜ்

நினைவுச்சரம்

"பவித்ரா, என் கர்சிப் எங்கே?" என்று கேட்டேன்.

"துவைக்கப் போட்டிருக்கேன். பீரோவுல வேற இருக்கு. எடுத்துக்கங்க" என்று சமையலறையில் இருந்தவாறு பவித்ரா கூறினாள்.

நான் பீரோவை நெருங்கித் திறக்க, 'தொப்', 'தொப்'என்று இரண்டு வேட்டிகள் கீழே விழுந்தன.

"பவித்ரா, துணிகளைச் சரியா அடுக்கறதில்லையா? திறந்ததும் எல்லாம் விழுது" என்றேன்.

"சரியாதான் அடுக்கி இருந்தேன். இந்த வாலுப் பயல் சும்மா இருந்தாதானே? நேத்து சாயந்திரம் திறந்து நோண்டிக்கிட்டு இருந்தான்" என்றாள்.

அவள் வால் பயல் என்று செல்லமாகக் கூறியது எங்களது நான்கு வயது வாரிசு ஷ்யாமை. தூங்குகிற நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் எல்லாம் கொஞ்சமும் சளைக்காமல், சுற்றிச் சுற்றி வந்து எல்லாவற்றையும் இழுத்துப் போடுவான்.

"அப்பப்பா, இவனைப் பெத்த போது கூட அவ்வளவா இடுப்பு வலி இல்லை. இப்ப இவன் இழுத்துப் போடறதை எல்லாம் எடுத்து வைக்கக் குனிஞ்சு குனிஞ்சு, இடுப்பு எலும்பே உடைஞ்சு போகுது" என்று பவித்ரா புலம்புவாள்.

இப்போது அம்மாவுடன் கோவிலுக்குச் சென்றிருக்கிறான். அங்கே என்ன கலாட்டா செய்கிறானோ தெரியவில்லை. பிராகாரத்தில் இவன் முன்னால் ஓட, அம்மா பிடிப்பதற்காகப் பின்னாலேயே துரத்துவது போன்ற காட்சியை நினைத்துப் பார்த்துச் சிரித்துக் கொண்டேன்.

கைக்குட்டையை எடுத்துக் கொண்டு குனிந்து வேட்டிகளை எடுத்து, அவை இருந்த இடத்தில் வைத்து அழுத்தி உள்ளே தள்ளி விட்டு பீரோவை மூடினேன்.

அப்பா காலமாகி மூன்று வருடங்கள் ஆகிவிட்டன. எனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய் அவரை வெள்ளைச் சட்டையிலும் வேட்டியிலும்தான் பார்த்திருக்கிறேன். ஒரு பழைய புகைப்படத்தில் மட்டும் பேண்ட் அணிந்து தமது நண்பர்களோடு நின்று கொண்டிருப்பார். மற்றப் புகைப்படங்களில் கூட வேட்டிதான்.

எனக்கோ வேட்டி கட்டும் பழக்கமே இல்லை. கல்யாணத்தின் போது மிகவும் சிரமப்பட்டு வேட்டியோடு நேரத்தைக்



கழித்தேன். அதன் பிறகு கட்டவே இல்லை.

''வீட்ல இருக்கும் போதாவது கட்டேண்டா'' என்று அம்மா அடிக்கடி கூறுவாள்.

நான் தொடுவது கூட இல்லை. முன்பாவது லுங்கி கட்டுவேன். இப்போது பெர்முடாஸ்தான்.

''நாங்க மட்டும் சேலையில இருந்து சுடிதாருக்கு மாறினதுக்கே தமிழ்க் கலாச்சாரம் அழிஞ்சு போச்சு. பண்பாடு பறந்து போச்சுன்னு அலர்றீங்க. ஆனா இப்ப இருக்கிற எந்த ஆம்பளைக்காவது வேட்டி கட்டத் தெரியுதா?'' என்று கலாய்ப்பாள் பவித்ரா.

''உன்னை யாரு சேலை மட்டுமே கட்டுன்னு சொன்னது. இப்பச் சொல்லு, கடைக்குப் போய் மினி ஸ்கர்ட் வாங்கிட்டு வரேன். போட்டுக்கறியா?''





"ஜவுளிக்கடையில் புகுந்து திருடியதற்கு உனக்கு ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனை விதிக்கிறேன்!"

"ஆடி தள்ளுபடி ஏதும் கிடையாதா? எசமான்!"

— எம். வெங்கடேஸ்வரன்

என்று பதிலுக்குக் கலாய்ப்பேன்.

"வாங்கிட்டு வந்துடுங்களேன், பார்ப்போம்" என்பாள்.

அப்பாவின் வேட்டிகள் மூன்று ஆண்டுகளாக பீரோவுக்குள் சும்மாவே இருக்கின்றன. அம்மாதான் அடிக்கடி எடுத்து அடுக்கி வைப்பாள்.

"அம்மா, சும்மாவே பீரோவுல இருக்கிறதை விட யாருக்காவது கொடுக்கலாமே?" என்று ஒருமுறை கூறினேன்.

"இல்லே ஜீவா, அவரோட ஞாபகார்த்தமாதான் இதை வைச்சிருக்கேன். அவர் ஞாபகம் வர்ற போதெல்லாம் பார்த்துப்பேன். பீரோவுலதான் இடமிருக்கே. நான் இருக்கிற வரைக்கும் அதுவும் இருக்கட்டுமே" என்றாள்.

நண்பர்களைச் சந்தித்து அரட்டையடித்து நேரத்தைக் கடத்தி விட்டு, மூன்று மணிக்கு வீடு திரும்ப, வீடு பூட்டியிருந்தது.

வண்டியின் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டு அம்மா வெளியே வந்தார்.

"ஜீவா, உங்க அம்மாவுக்குத் திடீர்ன்னு மூச்சுத் திணறல் வந்துட்டது. பவித்ரா ஆஸ்பிடலுக்குக் கூட்டிட்டுப் போய் இருக்கா" என்றார்.

"எப்போ?" என்று பதறினேன்.

"இப்பதான் அஞ்சு நிமிஷம் ஆச்சு. சந்தோஷ் ஆஸ்பிடலுக்குப் போறதாச் சொன்னா" என்றார்.

சந்தோஷ் நர்ஸிங் ஹோம்.

ஓர் அறை வாசலில் ஷ்யாமுடன் கலக்கமாக நின்றிருந்தாள் பவித்ரா.

"என்ன ஆச்சு பவித்ரா?" என்று கேட்டேன்.

"கோவில்ல இருந்து வந்தப்பவே தலை வலிக்குது, களைப்பா இருக்குன்னு சொல்லிப் படுத்துக்கிட்டாங்க. ஹார்லிக்ஸ் கொடுத்தேன். குடிச்சாங்க. அப்புறம்தான் மூச்சுத் திணறுதுன்னு சொன்னாங்க" என்றாள்.

அறைக்குள் இருந்து டாக்டர் வெளியே வந்தார்.

"என்ன ஆச்சு டாக்டர்?" என்று கேட்டேன்.

"பயப்படாதீங்க. மூச்சுக் குழாயில் பிரச்னை. ஆக்ஸிஜன் வைச்சிருக்கோம். இன்னிக்கு ஒரு நாள் இங்கேயே இருக்கட்டும். அப்புறம் மருந்து, மாத்திரைகளை எழுதிக் கொடுக்கறேன். கொடுங்க சரியாயிடும்" என்றார்.

"எனக்கு ஒன்னுமில்லேடா. எல்லாம் சரியாப் போச்சு" என்றாள் அம்மா என் கலங்கிய முகத்தைப் பார்த்து.

ஒரு வாரம் கழித்து அலுவலகத்தில் இருந்தபோது ஃபோன் வந்தது.

"அத்தைக்கு மறுபடியும் மூச்சுத்திணறலுங்க" என்றாள் பவித்ரா.

ஓடினேன். மீண்டும் மருத்துவமனையில் சேர்த்தோம்.

டாக்டர் ஏதேதோ மருத்துவக் காரணங்களைச் சொன்னார். இரண்டு நாட்கள் தவிக்க வைத்து, அம்மா போயே விட்டாள். ஒரு குழந்தையிடமிருந்து வலுக்கட்டாயமாக பொம்மையைப் பிடுங்கியதுபோல் அம்மா என்னிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டாள். நான் சில மணி நேரங்கள் திக்பிரமை பிடித்தவனானேன்.

எல்லாம் ஆயிற்று. அம்மா போய் இன்றோடு நான்கு நாட்கள் ஆகிவிட்டன. ஹாலில் அமர்ந்து புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தேன்.

அக்கா பீரோவைத் திறந்தாள். 'தொப்' என்று விழுந்தது ஒரு வேட்டி.

"ஜீவா, இந்த வேட்டிகளை யாருக்காவது கொடுத்துடறியா?" என்று கேட்டாள்.

நான் சில நொடிகள் யோசித்தேன்.

"வேணாம் இருக்கட்டும். இனிமே நான் வீட்டுல இருக்கறப்ப கட்டிக்கறேன், அம்மா ஞாபகமா..." என்றேன். ○

கண்ணீர்ப் பூக்கள்

கையில் கம்யூனிஸ்ட் கொடிகளை ஏந்தி, பாண்டிச்சேரி நகரத் தெருக்களில், சுருதி குறைந்த குரலில், கோஷங்களோடு வளைய வந்து கொண்டிருந்தனர் இருபத்தைந்து பெண்கள். பத்து நாட்களுக்கு முன்பு வரை ஸ்ரீஅரவிந்தர் ஆஸ்ரமத்தின் வாசலில் மலர்களை விற்று ஜீவனம் நடத்திக் கொண்டிருந்தவர்கள். இப்போது அரவிந்தர், அன்னை சமாதிகளில் வைக்க வெளியிலிருந்து வாங்கி வரும் பூக்களை அனுமதிக்க முடியாது, என்று தடை விதித்து விட்டது ஆஸ்ரமம்.



• ''கண்ணுல பூவிழுந்து பார்வை போச்சு. இப்போ பூ விக்க முடியாம வயித்துலே மண் விழுந்துடுச்சு'' - கருப்பாயி



• உஷா தீபக்

''அமைதியாக இருக்க வேண்டிய ஆஸ்ரமச் சூழ்நிலையைக் கெடுக்கும் விதமாக, சப்தம் போட்டு, பக்தர்களைக் கூவி அழைத்து பேரம் பேசி பூ விற்பதைச் சகித்துக் கொள்ள முடியாது. அதனால் பூக்களை நாங்களே விற்கலாம் என்று இருக்கிறோம்" என்பது ஆஸ்ரமத்தின் முடிவு. "தவிர, அன்னை இதுபோன்ற வழிபாடுகளை ஒரு போதும் விரும்பியதில்லை'' என்றும் பதில் வருகிறது. ஆனால், பாதிக்கப்பட்ட பெண்கள் சொல்வதென்ன?

"ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்க்குக் கூட பூ விற்கிறோம். ஆனால் ஆஸ்ரமம் குறைந்த பட்சம் ஐம்பது ரூபாய் விலைக்குப் பூங்கொத்து விற்கத் திட்டம் போட்டுச்சாம். அப்புறம் நாங்க விக்குற பூவுலே தலைமுடி இருக்கு, நீங்கயெல்லாம் கீழ்சாதிக்காரங்க அப்படின்னு எங்க மூஞ்சிக்கு நேரா சொல்றாங்க. அப்படின்னா, இனிமே ஆஸ்ரமத்தில மேட்டுக்குடிகாரங்க மட்டும்தான் நுழைய முடியுமா?'' என்று



• பூ விற்பனை (தடைக்கு முன்பு)



• அனுமதிக்கும்வரை போராடுவோம்

கொதிக்கிறார்கள்.

'பூவுக்குத் தடை' விவகாரத்தில் உண்மையான நிலவரம் அறிய, ஆஸ்ரமத்தின் அதிகாரபூர்வ நிர்வாகி அல்லது, செய்தித் தொடர்பாளரைச் சந்திக்க முயன்றபோது, அரை நாள் முழுவதும் நம்மைப் பந்தாடிய ஆஸ்ரமம், கடைசி வரை நமது கேள்விகளைக் கண்டு கொள்ளவேயில்லை.

பூ வைத்து வழிபட இயலாதது குறித்து பக்தர்கள் என்ன நினைக்கிறார்கள்? சென்னையிலிருந்து வந்திருந்த அரவிந்தர் அன்னையின் பக்தை உஷா தீபக்கிடம் கேட்டோம். "ரொம்ப ஏமாத்தமாப் போச்சு. சமாதியில் இருக்கிற பூ அலங்காரம் மனசுக்கு அமைதியும், திருப்தியும் தருது. சமாதியில் பூவுக்கு முக்கியமான இடம் உண்டு. அங்கே பூ வைச்சு வழிபட பக்தர்களைக் கேட்காமல் தடை விதிச்சிருக்கக் கூடாது. தடை விஷயம் தெரியாமல் நான் பூ வாங்கிட்டேன். இப்பப் பூவைத் திரும்ப எடுத்துட்டு வந்துட்டேன். மனசுக்குக் கஷ்டமா இருக்கு." என்றார்.

ஆஸ்ரமம் பூ வழிபாட்டுக்குத் தடை விதித்தது ஒரு பக்கம் இருக்க, புதுவை அரசு, மாநிலம் முழுவதும் பிச்சையெடுக்க அதிரடித் தடை விதித்திருக்கிறது.






பாண்டிச்சேரி ஆளுநர் மாளிகையின் வலப்புறமுள்ள செயின்ட் லூயிஸ் தெருவில் நாற்பத்து ஏழாம் நம்பர் வீடு.

அந்தத் தெரு வழியே மிதிவண்டியிலோ, நடந்தோ செல்லும் புதுவைவாசிகள், ஒரு கணம் திகைப்போடு திரும்பிப் பார்த்துவிட்டுச் செல்லும் அந்தவீடு கடந்த மூன்று ஆண்டுகளாகப் பூட்டியே கிடக்கிறது.

பாண்டிச்சேரியை உலுக்கிய பார்வதிஷா படுகொலை நடந்தது இந்த வீட்டில்தான். பார்வதிஷா கொலை வழக்கின் முதல் குற்றவாளி கமல்ஷா, ஆயுள் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறான். கொலையை மறைக்க முயன்ற உடந்தையாளர்களில் ஒருவரான பார்வதிஷாவின் மாமியார், சிறைவாசம் முடிந்து வீடு திரும்பி விட்டார். ஆனால் பார்வதிஷாவின் கணவர் ரவிஷா சரண் அடையாமல் இன்னும் தலைமறைவாகவே வாழ்ந்து வருவதால், பாண்டிச்சேரியைப் பொறுத்தவரை பார்வதிஷா வழக்கு இன்னும் தீர்க்கப்படாத திகில் கணக்கு.

பாண்டிச்சேரியில் படப்பிடிப்பு நடத்தினால் அந்தப் படம் ஃப்ளாப்! கோலிவுட்டின் தீவிர மூட நம்பிக்கைகளில் இதுவும் ஒன்று. நீண்ட இடைவெளிக்குப் பிறகு முழுக்க முழுக்க பாண்டிச்சேரியில் படம் பிடிக்கப்பட்ட 'மௌனம் பேசியதே' மெகா ஹிட் ஆனதில், இப்போது பாண்டிச்சேரி பிஸி ஷூட்டிங் ஸ்பாட் ஆகிவிட்டது. புதுச்சேரிக்கு, சினிமாக்காரர்கள் படையெடுக்க இன்னொரு காரணம், கட்டணம் சம்பந்தப்பட்டது. தமிழகத்தில் வெளிப்புறப் படப்பிடிப்பு செய்ய, நாள் ஒன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் அரசுக்குக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். இதுவே பாண்டிச்சேரி என்றால் நாள் ஒன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் மட்டுமே. அங்கே வெளிப்புறப் படப்பிடிப்பு நடத்த, பாண்டிச்சேரி செய்தி மற்றும் விளம்பரத்துறை இயக்குனருக்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பிக்க வேண்டும். தற்போது பாண்டிச்சேரியில் ரஞ்சித் நடித்து இயக்கும் 'பீஷ்மர்' படப்பிடிப்பு முழுவீச்சில் நடந்து கொண்டிருக்கிறது.

மெட்ராஸ் டு பாண்டிச்சேரி



• 'பீஷ்மர்' • படப்பிடிப்பில்...



சிகப்பு வீடு...!



பிஜிலி பாப்பா!

இந்தியாவிலேயே முதல் முறையாக 'டெம்போ' என்ற பெயரில் ஷேர் ஆட்டோக்களை அறிமுகப்படுத்திய புதுவையில், இப்போது பிஜிலி (Bijlee) ஆட்டோக்கள் ரொம்பவே பிரபலம். பத்து பேர் அமர்ந்து பயணம் செய்யக் கூடிய இந்த ஆட்டோக்கள் மின்சார பேட்டரியில் இயங்குவதால் சுத்தமாய்ச் சத்தம் வருவதில்லை. மாசற்ற வாகனம் என்று புதுவை அரசு அங்கீகாரம் அளித்துள்ளதால், மக்கள் பிஜிலியில் பயணம் செய்ய ஆர்வம் காட்டுகிறார்கள். இந்த ஆட்டோக்கள் கண்ணில் பட்டால் "ஏய்! பிஜிலி பாப்பா வருது!" என்று செல்லமாய்க் கூப்பிடுகிறார்கள்.

குட்டிக்கு முதலில் அவன் கேட்டது புரியவில்லை. சொற்கள், அதன் அர்த்தம் தவிர்த்த வெறும் ஒலி வடிவமாகவே அவள் செவிகளுக்குள் நுழைந்தது. அவள் சிந்திக்கவோ, பதில் சொல்லவோ தொடங்கு முன், ஜக்கு தன் உணர்ச்சியின் பிடியிலிருந்து விடுபட்டுச் சுதாரித்துக் கொண்டான்.

தன்னால் அதை அவளுக்குப் புரிகிற விதத்தில் விளக்க முடியுமா என்று அவனுக்குச் சந்தேகமாயிருந்தது. மேலும் பள்ளியிலிருந்து வீடு திரும்பும் தூரத்துக்குள் சொல்லி முடிக்கக் கூடிய விஷயமும் இல்லை அது. அவள் மிரண்டு விடக் கூடும். அல்லது தன் சொற்கள் தன்னைக் கைவிட்டு, விவரிக்கும்போதே உடைந்து போய் அழத் தொடங்கிவிடலாம். சொல்ல நினைத்த விஷயத்தைக் காட்டிலும் தன் அழுகை அவளைக் கலவரப் படுத்திவிடலாம்.

ஆனாலும் தன் மனத்தின் கனத்தை அரைவினாடி இறக்கிவைத்து, மீண்டும் எடுத்துச் சுமந்து கொள்ள இது ஒரு சந்தர்ப்பம். குட்டியைக் காட்டிலும் அலம்பித் துடைத்தாற்போன்ற பரிசுத்தமான இதயம் கொண்டவர்கள் வேறு யாரும் இருக்க முடியாது. தன்னுடன் படிக்கிற பன்னீர் செல்வமோ, பாபுவோ, வினேஷோ

மெல்லினம்



மற்றவர்களோ, இவ்விஷயத்தில் குட்டியின் கால் தூசு பெற மாட்டார்கள். கேள்விகளற்று, சொல்கிற விஷயங்களால் அந்தக் கணம் மனத்தை நிரப்பிக் கொள்கிறவள் அவள். உரிய உணர்ச்சியை அதன் புனிதம் கெடாமல் வெளிப்படுத்தக் கூடியவள். அதிகாலைப் பூக்களின் மீதிருக்கும் கடைசிச் சொட்டுப் பனித்துளி போன்ற மனசு அவளுக்கு.



"நீ என்ன சொல்றே ஜக்கு? எங்கப்பா யாரை லவ் பண்ணியிருக்கார்? எனக்குத் தெரியாதே! சினிமால தானே லவ் பண்ணுவாங்க?" என்றாள் குட்டி.

அது உண்மைதான். ஜக்குவும் கூட சினிமாக்களில் தான் லவ் பண்ணுகிறவர்களைப் பார்த்திருக்கிறான். அழகழகான உடைகளில் பனி மலைகளின்மீதும் பாலைவன மணற்படிவங்களின்மீதும் ஆடிப் பாடித் திரிகிறவர்கள். அவர்களைப் பற்றியிருக்கும் வெப்ப நோயின் கடுமையை மறக்கவே அவர்கள் ஆனந்தமாக ஆடித் திரிவதாக ஜக்கு நம்பினான். அவர்களின் ஆட்டத்துக்குத் தோதாக கண்ணுக்குப் புலப்படாத தேவதைகள் யாரோ இசையால் சூழலை முதலில் குளிர்பதனம் செய்து வைத்துவிடுகிறார்கள். கவலைகளற்றுக் காடுகளிலும் நீர் நிலைகளிலும் பாலைவனப் பகுதிகளிலும் சுற்றித் திரிகிற, லவ் பண்ணுபவர்கள். வெப்பம் ஒரு நோயாக மாறி அவர்களைத் தாக்கியிருப்பது முகத்தைப் பார்த்தாலே தெரியும்.

சினிமாக்களின் ஆதாரமாக இருக்கிற வெப்ப நோய். சரியான ஜுரம் அது. பலமணி நேரங்கள் அடித்துவிட்டுத் தான் ஓய்வது வழக்கம்.

சினிமாவுக்கு அப்பாலும் அந்த நோயால் தாக்குண்டவர்கள் உண்டு என்கிற விஷயம், அவனுக்கு ஓரிரு மாதங்கள் முன்பு தான் தெரியவந்தது. அவனது பள்ளியிலேயே பத்தாம் வகுப்பு படிக்கிற பையன் ஒருவன், யாரோ ஒரு பெண்ணுக்குக் கடிதம் கொடுத்திருக்கிறான். காதல் கடிதம்!

7

காதல் கடிதமா? ஆசிரியர்களுக்கு விஷயம் தெரிய வந்தபோது பள்ளி வளாகத்தின் வெப்ப நிலை திடீரென்று ஐம்பத்தேழு டிகிரி சென்டிகிரேடாக உயர்ந்து விட்டது. ஜக்குவின் ஆறாம் வகுப்பு பி பிரிவுக்குள்தான் முதலில் அந்த வெப்பம் வந்து தாக்கியது.

இதென்ன, மார்கழி மாதத்தில் இப்படி தகிக்கிறதே, என்று வகுப்

பா. ராகவன்

பாசிரியரும் மாணவ, மாணவிகளும் 'உஸ், உஸ் என்று தமக்குள் ஊதிக் கொண்டார்கள்.

ஜக்குவின் வகுப்பாசிரியரான பழனி வாத்தியாரும், பத்தாம் வகுப்பு - சி பிரிவின் ஆசிரியர் தண்டபாணியும் நெருங்கிய சிநேகிதர்கள். ஸ்டாஃப் ரூமில் இருவரும் பக்கத்துப் பக்கத்தில் தான் எப்போதும் உட்காருவார்கள். நாளிதழ் செய்திகளில் நாட்டு நடப்பு தொடங்கி, வீட்டு விஷயங்கள் வரை எப்போதும் பேசவும் பகிரவும் அவர்களுக்குச் சங்கதி இருந்து கொண்டே இருக்கும்.

ஆகையால் தண்டபாணி மாஸ்டர் தாமறிந்த அதிமுக்கியமான அந்த விஷயத்தை முதலில் பழனி வாத்தியாருக்குச் சொல்ல முடிவெடுத்ததில், எந்த ஆச்சரியமும் இல்லை.

அவர் பாக்கெட்டில் தான் அந்தக் காகிதத்தை வைத்திருந்தார். அதற்குள்ளாகவே அவரது சட்டையிலிருந்து தீய்ந்த வாசனை வருவதை மாணவர்கள் மோப்பம் பிடித்துவிட்டார்கள். ஜக்குவின் வகுப்பறை வாசலுக்கு வந்து நின்று, பழனி மாஸ்டரை அவர் அழைக்கும்போதே பாக்கெட்டிலிருந்து அதை எடுத்துவிட்டார். உடனே வகுப்பறையில் வெப்பம் பரவத் தொடங்கிவிட்டது.

அடப்பாவி என்றார் பழனி மாஸ்டர். இனியதொரு வசந்தகாலத்தில் இப்படியான வெப்பம் படரவிட்டது, மன்னிக்கக் கூடிய குற்றமல்ல, என்று அவர் தீர்மானமாகச் சொன்னார்.

அன்றுமாலை ஜக்கு வீட்டுக்குக் கிளம்பியபோது அந்தப் பத்தாம் வகுப்பு மாணவன் பள்ளியின் மைதானத்தில் முட்டி போட்டபடியே வானம் பார்த்துக் கொண்டிருக்கக் கண்டான். ஐயோ பாவமே, எத்தனை மணி நேரமாக இவனை இப்படி நிற்க வைத்திருக்கிறார்கள்?

வெப்ப நோய்க்கிருமிகள் மிக்க அந்தக் காகிதத்தை அவன் எந்தப் பெண்ணின் கணக்குப் புத்தகத்துக்குள் ரகசியமாக ஒளித்து வைத்தானோ, அந்தப் பெண்ணின் தந்தை உடனடியாகப் பள்ளிக்கு வரவழைக்கப்பட்டார். பெண்ணுக்குத் தடுப்பூசி முதலியன உடனே போடப்பட்டு அவள் பத்திரமாக வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டாள்.

மறு தினம் தொடங்கி அந்தப் பெண் வேறு செக்‌ஷனுக்கு மாற்றப்பட்டுவிட்டாள். அந்தப் பத்தாம் வகுப்புப் பையன் ஒரு வாரம் பள்ளிக்கு வரவில்லை.

ஜக்குவுக்கு இந்தச் சம்பவம் இப்போது ஞாபகம் வந்தது. அதே கிருமி தன் தந்தையைக் கூடத் தாக்கியிருக்க முடியும், என்று அவனால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. இதைத்தான் அவன் குட்டியிடம் பகிர்ந்து கொள்ள விரும்பினான்.


அதை எப்படித் தொடங்குவது என்று தெரியாமல் தான் "உங்கப்பா யாரையாவது லவ் பண்ணியிருக்காரா?" என்று கேட்டான்.

பாவம் குட்டி. அவளுக்கு எப்படி இது புரியும்? 'நல்லவேளை! சுதாரித்துக் கொண்டோம்' என்று தன்னைத்தானே பாராட்டிக் கொண்டான் ஜக்கு.

"சும்மா கேட்டேன். உனக்கு ஒரு குட்டிப் பூனை வேணுமா? ப்ரவுன் கண் உள்ள பூனை?" என்று சட்டென்று விஷயத்தை மாற்றி, சூழலில் மீண்டும் அந்த வெப்பம் நோயுருக் கொண்டு பரவாமல் தடுக்க முடிந்தது பற்றி, தன்னைத்தானே வியந்தான்.

"பூனையா? அது ஏது?" என்று குட்டி கேட்டாள். "வாங்கியிருக்கீங்களான்ன, உங்க வீட்டுலே?"

"சேச்சே. பூனையை யார் விப்பா? நாமாத்தான் எடுத்து வளக்கணும்" என்று ஜக்கு சொன்னான்.



''மேடையில் இருந்த தலைவர் கீழே விழுந்துட்டாராமே... எப்படி நடந்தது?''

''ஒரு பேச்சாளர் அந்த அளவுக்குப் புகழ்ந்து தள்ளிட்டாராம்.''

- அதிராம்பட்டினம் யூசுப்

"அந்த கேடி முதன்முதலா நம்ம ஜெயிலுக்கு வந்திருக்கான்."

"அதுக்காக ஜெயிலில் பால் காய்ச்சிக் குடிக்கணும்னு அடம் பிடிக்கிறது நல்லா இல்லை.

- எஸ்.மோகன்



"தெரியுமா உனக்கு? எலியைப் பிடிக்கறதுக்கு மட்டும் இல்லே பூனை! நீ பூனை வளர்த்தேன்னா, நிறைய கத்துக்கலாம். அமைதியா இருக்கறது, அதிராம நடக்கறது, எல்லாம் பூனை ஜோரா கத்துக்குடுக்கும்."

"நான் சரி, நீ எப்படி வளர்ப்பே? உன் வெங்கடாஜலபதி பூனையைக் கடிச்சுடுமே?"

"யார் சொன்னா? கடிக்கக் கூடாதுன்னு நான் அதுக்கு ரூல் போட்டுட்டுத் தான் எங்க ஸ்கூல் பின்னாடி குட்டி போட்டிருந்த ரெண்டை எடுத்துண்டு வந்தேன்."

"அச்சச்சோ. அதோட அம்மா கத்துமே?"

'அதோட அம்மா இல்லை. எங்கியோ போயிடுத்து. அதனாலதான் நான் எடுத்துண்டு வந்தேன்."

சட்டென்று விஷயத்தை நாலடி தூரத்துக்கு நகர்த்தி, மாற்ற முடிந்துவிட்டதில் அவனுக்குக் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. அதே சமயம், தன் துக்கத்தைத் தொடர்ந்து ஒளித்தே வைக்க வேண்டியிருக்கிறதே என்றும் இருந்தது. பயம்தான். உயிருக்குச் சமமான ஃப்ரெண்டாக இருந்தாலும் குட்டியிடம் ஏன் சொல்லச் சொல்ல வாய் வந்து, உதட்டோடு நின்றுவிடுகிறது என்று அவனுக்கு வியப்பாக இருந்தது.

தன்னையறியாமல் ஏதோ ஒன்று சொல்ல வருவதைத் தடுக்கிறது என்று அவன் நினைத்தான். வெளியே சொல்லக் கூட முடியாத ஒரு விஷயத்தையல்லவா சுமந்து கொண்டு திரிய வேண்டியிருக்கிறது!

படிக்கத் தொடங்கியபோது அந்த வெப்பம் இன்னும் அதன் வீரியம் குறையாமல் படிக்கிறவனைத் தாக்குவதையும் அவன் கண்டான். முதல் நான்கைந்து வரிகளிலேயே அவனுக்குக் கண்கள் எரியத் தொடங்கின. ஒரு தினத்தின் செய்தியைப் படித்து முடிக்கும்போது, உடலெல்லாம் வியர்த்து விட்டது. கரங்கள் நடுங்கத் தொடங்கின. தொண்டை வறண்டு, உடனே ஓடிப்போய் ஒரு சொம்பு நிறைய நீர் எடுத்துக் குடித்துத் தீர்த்தான்.

அப்போதும் அடங்கவில்லை சூடு. காது மடல்களெல்லாம் ஜிவுஜிவுவென்று ஆகி விட்டன.

"இன்று நிர்மலாவைப் பார்க்க அவளது ஆபீசுக்குப் போயிருந்தேன். அழகிய வயலட் நிறப் புடைவையில் அவள் இருந்தாள். முந்தைய தினம் அவளது அம்மாவுடன் ரங்கநாதன் தெருவுக்குப் போயிருந்தபோது வாங்கியதாகச் சொன்னாள். முன்னூற்று நாற்பது ரூபாய்ப் புடைவை. நிர்மலாவுக்கு விலையுயர்ந்த புடைவைகள் தான் வேண்டும் என்பதில்லை. அறுபது ரூபாய் ரேஷன் புடைவையில்கூட, அவள் அழகாகத் தான் இருப்பாள். நான் எப்போது அவளுக்கு ஒரு புடைவையை வாங்கித் தரப் போகிறேன் என்று கேட்டாள். வருகிற சம்பளம் வீட்டுக்கே காணுவதில்லை என்பதை எப்படி அவளுக்குத் தெரிவிப்பேன்? காதலிப்பதற்குக் குறைந்த பட்ச அந்தஸ்து வேண்டியிருக்கிறது. அந்தஸ்து இல்லாதவர்களுக்கு வருகிற காதல் அவஸ்தைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எப்படியும் இரண்டொரு மாதங்களில் வேலை நிரந்தரமாகிவிடும். முதல் நிரந்தர சம்பளத்தில் அவளுக்கொரு பட்டுப் புடைவையே வாங்கித் தருவதாகச் சொன்னேன்."

படிக்கப் படிக்க ஜக்குவின் கண்களில் மருந்து வெப்பம் ஒரு அலை போலக் பெருகிப் பரவத் தொடங்கியது. துக்கம் அவன் தொண்டையை நிரப்பியது. உட்கார்ந்து ஓவென்று அழலாம் போலிருந்தது.

அப்பாவா! அப்பாவா காதலித்திருக்கிறார்! அப்பாவா?

யார் நிர்மலா? அம்மாவின் பெயர் அது இல்லை. எனில் யார் அது? அம்மாவுக்குத் தெரியுமா? கடவுளே! தெரிந்துவிட்டால் அம்மா நிச்சயம் செத்துத் தான் போய் விடுவாள். அம்மா இல்லாமல் நான் எப்படி இருக்க முடியும்?

அவன் அப்போது அழத் தொடங்கினான். அன்றிலிருந்து மனத்துக்குள் அழுது கொண்டே தான் இருந்தான்.

(தொடரும்)




ஸ்டைல் லட்சுமி!

பாண்டிச்சேரி மாநிலம் முழு மைக்கும் ஒரே ஒரு யானைதான்.

மணக்குள விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான பதினொரு வயது அழகிய இளைஞி லட்சுமி.

பக்தர்களோடு மிக அன்பாக நெருங்கிப் பழகும் லட்சுமிக்கு கோக், பெப்ஸி போன்ற குளிர்பானங்கள் குடிப்பதென்றால் செம குஷி. வாழைப்பழம் வாங்கித் தருவதற்குப் பதிலாக, பக்தர்கள் பலரும் லட்சுமிக்கு கூல்டிரிங்க்ஸ் தந்து உபசரிக்கிறார்கள்.

"முன்னங்கால்கள் இரண்டுக்கும் வெள்ளிக் கொலுசு அணிவித்தால்தான், கொட்டடியை விட்டே வெளியே வரும். அவ்வளவு ஸ்டைல்!'' என்று வெட்கப்பட்டுச் சொல்கிறார்கள் லட்சுமியின் பாய் ஃபிரெண்டுகளான (பாகர்கள்) செந்தில், சக்திவேல் இருவரும்.



விசேஷ காலங்களில் வேதபுரீஸ்வரர் கோவிலுக்குச் சென்று வருவது லட்சுமிக்குப் பிடித்தமான டிவோஷனல் அவுட்டிங்!





ஜோசப் அய்யங்கார்!



பிறப்பால் இவர் கிறிஸ்தவர். ஆனால் புதுவை அன்பர்கள் 'ஜோசப் அய்யங்கார்' என்றே அன்பொழுக அழைக்கிறார்கள். அப்படி என்ன செய்து விட்டார் ஜோசப்!

வள்ளலாருடைய ஜீவ காருண்யத்தால் ஈர்க்கப்பட்டு, பின்னர் இந்து சநாதன தர்மத்தின் பால் ஈடுபாடு கொண்ட ஜோசப், வேதம், உபநிஷத், இதிகாசம், ஸ்ரீவைஷ்ணவம் என்று மேதமை பெற்று நம்பர் ஒன் ஆன்மிகச் சொற்பொழிவாளராக, இந்து ஆலயங்களின் உபன்யாச மேடைகளில் ஓய்வின்றி வலம் வந்து கொண்டிருக்கிறார். வானொலி, தொலைக்காட்சி என்று இதுவரை பல்லாயிரம் சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கும் ஜோசப்பின் உபன்யாசத்தில், ஒவ்வொரு நாளும் புதுமைகள் இருக்கும் என்று நற்சான்றிதழ் தருகிறார்கள் புதுவைவாசிகள்.

பெரும்புதூர் ஜீயர் ஸ்வாமிகளிடம் 'உபந்யாஸச் சக்கரவர்த்தி' என்றும் 'ஸ்ரீ வைஷ்ணவச் சுடராழி' என்றும் பாராட்டுப் பெற்றிருக்கும் ஜோசப், கீதை, கருட புராணம், ஸ்ரீசக்கரம் பற்றிப் பேச ஆரம்பித்தால் கேட்டுக் கொண்டே இருக்கலாமாம். பாராட்டுகளைக் குவித்த இவரது சொற்பொழிவுகள், ஆயிரம் ஒலி நாடாக்களாக வெளியிடப்பட்டு கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறவிருப்பது ஒரு புறமிருக்க, ஜீயரின் வேண்டுகோளுக்கிணங்கி இவர் இன்னும் கிறிஸ்தவராகவே இருப்பது ஜோசப் மீதுள்ள நன் மதிப்பை மேலும் உயர்த்துகிறது.



டூரிஸ்ட் பெருமாள்!



புதுவைக்குச் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் சுற்றுலா வழிகாட்டிகள், சட்டமன்ற வளாகம் எதிரே உள்ள பாரதி பூங்காவில் பரிபாலனம் செய்யும் பெருமாள் கோயிலுக்கு அழைத்து வரத் தவறுவதில்லை.

பதினேழாம் நூற்றாண்டில், பிரெஞ்சுக்காரர்கள் செஞ்சியை ஆண்ட மராட்டியர்களுடன் போரிட்டு அதைப் பிடித்தார்கள். அந்தச் சமயத்தில் அங்கே இருந்த வெங்கட ரமணா கோயில் பெருமான் சிலையை, தளபதியாயிருந்த பக்தர் ஒருவர் பாண்டிக்கு எடுத்துக் கொண்டு வந்துவிட, பல காலம் பெருமான் பனி, மழை, வெயிலில் வாடி வதங்கிக் கொண்டிருந்தாராம். (சரித்திர நிபுணர்கள் யாரும் நம்மோடு சண்டைக்கு வரக் கூடாது. இது நமக்குச் சொல்லப்பட்ட வரலாறு.)

பிறகு, இன்னொரு பக்தர் அவரை பாரதி பூங்காவில் பிரதிஷ்டை செய்ய, பெருமாளுக்கு அதிர்ஷ்டக் காற்று வீசத் துவங்கிவிட்டது. இப்போது அற்புத அலங்காரத்தோடு காட்சியளிக்கும் பெருமான் புதுவையின் முக்கிய டூரிஸ்ட் அட்ராக்ஷன்.

"ராஜா தேசிங்கு வணங்கிய பெருமான். இங்கிருந்து செஞ்சிக்கு சுரங்கப் பாதை உண்டு. 'அதில் குதிரையில் அமர்ந்து கூட செல்லலாம். உள்ளே பெரிய பெரிய வண்டுகளும், விஷப் பூச்சிகளும் இருந்ததால் மூடிவிட்டார்கள்" என்று சங்கு சக்கரங்களுடன் உலா வரும் கதையை நம்புவதும் நம்பாததும் உங்கள் இஷ்டம்.

பெருமான் இந்தக் கதைகளையெல்லாம் மந்தகாசச் சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி நாளில் "ஆன்மீகம்" தெய்வீக மாதஇதழும் ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களும் இணைந்து நடத்தும், அன்பர்கள் இஷ்டப்படும் ஹோம பூஜையில், நேரிலேயே கலந்து கொள்ளும் வாய்ப்பு !

பேரன்புடையீர், வணக்கம் ! எடுத்த முயற்சிகள் வெற்றியடையவும், சங்கடங்களின்றி சந்தோஷமாக வாழவும், செய்தொழிலில் லாபம் பெறவும், மகப்பேறு பெற்று மகிழவும், திருமணத்தடைகள் நீங்கி, சுதூகலம் பெறவும், கடன் தொல்லையிலிருந்து விடுபடவும், பிள்ளைகள் கல்வியில் முதல் நிலை பெறவும், தீராத நோய்களிலிருந்து நிவாரணம் பெறவும், நவகிரஹ தோஷங்களிலிருந்து விலகி நலம் பெறவும், பிரிந்த குடும்பத்தினரும், தம்பதியினரும் ஒன்று சேரவும், உத்தியோகம் மற்றும் அயல்நாடு செல்லவும் நினைக்கும் ஒவ்வொருவருக்காகவும், **மாத மாதம் பௌர்ணமி அன்று திருவல்லிக்கேணியில் சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கவேண்டி, காலை 06.00 முதல் 10.00 வரை "ஆன்மீகம்" தெய்வீக மாத இதழ்** சார்பாக கீழ் கண்ட விவரப்படி சிறப்பான ஹோமங்களை நடத்தவிருக்கிறோம்.

ஸ்ரீ துர்கா ஸூக்த - பஞ்ச ஸூக்த ஹோமம்

துர்கை நாமங்களைச் சொல்பவர்களுக்கு சத்ரு பயம், செய்வினைக் கோளாறுகள் அணுகமுடியாது துக்கத்தை போக்ககூடியவள் துர்கை. துர்கையின் மந்திரங்கள் சொல்லி யாகங்கள் செய்பவர்களுக்கும் அந்த யாகத்தில் கலந்து கொள்பவர்களுக்கும், துஷ்ட சக்திகளிடமிருந்து காத்து சகல சௌபாக்கியங்களையும் தரக்கூடியவளாம். எப்போதும் ஜெயத்தையே தருபவளும் தான் துர்கை. எனவே இந்த மாத **ஸ்ரீ துர்கா ஸூக்த - பஞ்ச ஸூக்த ஹோமத்தில்** பங்கு கொண்டுபலன்களை அடைய அன்புடன் அனைவரையும் அழைக்கிறோம்.


ஆடி	12.08.03	செவ்வாய்	நினைத்தகாரியங்கள் சித்தியாக	ஸ்ரீ துர்கா ஸூக்த - பஞ்ச ஸூக்த ஹோமம்
ஆவணி	10.09.03	புதன்	தீராத வியாதிகள் விலக	ஸ்ரீ தன்வந்திரி ஹோமம்
புரட்டாசி	10.10.03	வெள்ளி	சத்ரு பயம் விலக	ஸ்ரீ நரஸிம்ம ஸுதர்சன ஹோமம்
ஐப்பசி	08.11.03	சனி	செல்வம் பெருக	ஸ்ரீ லக்ஷ்மி குபேர ஹோமம்
கார்த்திகை	08.12.03	திங்கள்	நவகிரஹ ப்ரீதி உண்டாக	ஸ்ரீ நவகிரஹ ஜெயாதி ஹோமம்
மார்கழி	07.01.04	புதன்	சகல காரியம் ஜெயப்ரதம் உண்டாக	ஸ்ரீ மஹாபீட பூஜையும், வாயு ஸூக்த ஹோமமும்
தை	06.02.04	வெள்ளி	திருமண பாக்கியம் கை கூடி வர	ஸ்ரீ ஸ்வயம்வரகலா பார்வதி ஹோமம்
மாசி	06.03.04	சனி	வீடு அலுவலகம் வாஸ்து தோஷங்கள் விலக	ஸ்ரீ வாஸ்து ஹோமம்
பங்குனி	05.04.04	திங்கள்	வழக்கு விவாஜயங்களில் வெற்றிகிட்ட	ஸ்ரீ ஸூக்த ஜெயாதி ஹோமம்
சித்திரை	சித்ரா பௌர்ணமியன்று	செய்வினை விலக	ஸ்ரீ ஸுதர்ஸன ஹோமம்
வைகாசி	வைகாசி விசாக பௌர்ணமியன்று	கல்வி செல்வம் உண்டாக	ஸ்ரீ நீல சரஸ்வதி ஹோமம்
ஆனி	ஆனி பௌர்ணமியன்று	தடைகள் அனைத்தும் விலக	ஸ்ரீ ராஜ கணபதி மஹாமந்த்ர ஹோமம்

ஜோதிட சாஸ்த்திரசிம்மம், வாஸ்து சாஸ்த்திர விற்பன்னர், யோக ஆஞ்சனேய சக்தி பீடாதிபதி பூஜ்யஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா அவர்களின் தலைமையில், வேத சாஸ்திரங்களில் பாண்டித்யம் பெற்ற வித்வான்களைக்கொண்டு, **ஸ்ரீ யோக ஆஞ்சநேயர் சக்தி பீடம், 177 / 84, வெங்கட்ரங்கம் பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5ல்** சிறப்பு ஹோமங்கள் மேற்கண்ட விவரப்படி ஒவ்வொரு மாதங்களிலும் நடைபெற இருக்கின்றன.

மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு மாதங்களில் நடைபெறும் ஒரு ஹோமத்தில் பங்குபெற கட்டணம் ரூ. 500- எல்லா ஹோமங்களிலும் பங்கு பெறவும், முன்பதிவு செய்யவும் கட்டணம் ரூ. 4500, செலுத்தி, நேரில் கலந்து கொள்ளலாம். நேரில் கலந்துகொள்ள இயலாதவர்கள் பெயர், நட்சத்திரம், இராசி, கோத்ரம் முதலியவைகளைக் குறிப்பிட்டு, என்ன பரிகாரத்திற்காக ஹோமம் செய்ய வேண்டும் என்பதையும், தங்களது விலாசத்தையும் எழுதி அனுப்பவும், பிரசாதங்கள் தபால்மூலம் அனுப்பப்படும்.

வைகானச தர்ம சாஸ்திரம், ஜோதிடம், வாஸ்து என ஒரு கோடியே 25 லட்சம் கிரந்தங்களை எழுதியவரும் ப்ருகு, அத்ரி, காஸ்யபர், மரீசி ஆகிய மகரிஷிகளுக்கும் குருவானவருமான 'ஸ்ரீ விகனச மகரிஷி' யின் அபூர்வ புகைப்படத்துடன் ஹோமத்தில் வைத்து பூஜிக்கப்பட்ட அட்சதை, மஞ்சள் ரட்சை, குங்குமம், ஹோம பஸ்மம், 3x3 கனத்த செம்புத் தகட்டினாலான யந்திரத்துடன் வெள்ளியால் செய்யப்பட்ட லக்ஷ்மி டாலரும் மஹாஹோமத்தில் பங்குபெறுபவர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

ஸ்ரீ விகனச மகரிஷியின் பூஜிக்கப்பட்ட படம், இருக்கும் வீடுகளிலோ, அலுவலகங்களிலோ எந்த விதமான தோஷங்களும் அண்டாது என்பது உறுதி.



எடுத்த முயற்சிகளில் வெற்றிகளை உண்டாக்கும் ஹோமத்திற்காக 'Homadharisanam' எனும் பெயரில் ரூ. 500/ அல்லது ரூ. 4500, - Cheque/D.D./M.O. மூலம் அனுப்ப வேண்டிய முகவரி

ஹோம தரிசனம்

எண் 13, பொன்னம்பல வாத்தியார் தெரு, (ஸ்ரீ காபாலீஸ்வரர் கோயில் அருகில்) மயிலாப்பூர், சென்னை - 4.

Tel & Fax : 2461 6466, E-mail:siva siva @ vsnl.net



சென்றவாரம் சொல்லப்பட்டவை பிறவியில் ஏற்படும் இரைப்பை பாதிப்புகள். இனி, வளர்ந்த நிலையில் இரைப்பையில் ஏற்படும் நோய்களைப் பற்றிப் பார்ப்போம். இரைப்பையின் சுருங்கி விரியும் தன்மை பாதிக்கப்பட்டாலும் நோய்கள் ஏற்படுகின்றன.

- புகையிலை, மது, கஞ்சா பழக்கம்
- மிக அதிகமாக மருந்து மாத்திரை சாப்பிடுவது
- உயிர்ச் சத்து பி1 குறைபாடு
- தைராய்டு, பாரா தைராய்டு பாதிப்பு





நண்டோ... கரையானோ...

- கணைய பாதிப்பு
- நீரிழிவு
- சிறுநீரகப் பாதிப்பு

போன்றவற்றால் இரைப்பையின் சுருங்கி விரியும் தன்மை குறைந்து, நோய்களுக்கு அழைப்பிதழ் வைக்க ஆரம்பித்துவிடும்.

இந்நிலையில் அதீத வயிற்றுவலி, துர்நாற்றத்துடன் வாந்தி ஏற்படும். ஏப்பம், நெஞ்சு கரிப்பு, அதிக வியர்வை, தலைசுற்றல் போன்றவை இலவச இணைப்பாக வெறுப்பேற்றும்.

இரைப்பையின் இன்னொரு மிகப் பெரிய பிரச்னை, அமிலச் சுரப்புதான். 'hurry, curry, worry' இந்த மூன்று விஷயங்கள் உங்கள் வாழ்க்கையில் இருந்தால், இரைப்பையில் அமிலச் சுரப்பு அதிகமாகி, புண் ஏற்பட, வாய்ப்பு இருக்கிறது. கவனம் தேவை.

இரைப்பையில் அதிகமாகச் சுரக்கும் அமிலம், மேலே ஏறி, அன்னக் குழாயை பாதிப்பதோடு, கீழேயும் இறங்கி, முன்சிறு குடலையும் பீடித்துவிடும்.

டியோடினம் பகுதியில் (முன் சிறு குடல்) அல்ஸர் வந்து, அது ஆரம்ப நிலையில் இருந்தால் மருந்து கொடுத்தே குணப்படுத்திவிடலாம். நோயை முற்றவிட்டுவிட்டால், அமிலமானது அதிகமாகப் பெருகி, டியோடினத்தில் ஓட்டை போட்டு, குடலைவிட்டே வெளியேறி வந்துவிடும். இந்த நிலை உயிருக்கே அபாயமாகிவிடும். இதற்கு எமர்ஜென்ஸி ஆபரேஷன் செய்ய வேண்டியிருக்கும். இந்த டியோடினல் அல்ஸர் பெர்ஃபோரேஷனை முற்றவிட்டால், அல்ஸர் புண்ணாகி, புண், புற்று நோயாகிவிடும். எனவே கவனம் தேவை.


இரைப்பையில் உருவாகும் மிகக் கொடிய நோய் புற்று நோய் என்பதால் தனி பாராவாகப் பிரித்துச் சொல்ல வேண்டியிருக்கிறது. கான்ஸரின் அடையாளமாக நண்டைச் சொல்வது ஏன் என்பது உங்களுக்கும் தெரிந்திருக்கலாம். தெரியாதவர்களுக்காக இந்த நண்டு புராணம்.

நண்டு இருக்கும் வங்கு வலையை ஒரு பக்கமாக மூடிவிட்டால், அது தோண்டித் துளைத்துக் கொண்டு, மறுபக்கமாக வெளியேறி விடும். புற்று நோயும் அப்படிப்பட்டதுதான்.

'புற்று நோய்' என்றால் என்ன?

5

வணக்கத்துக்குரிய வயிறே...



டாக்டர் எஸ். அஷோக்



கிராமங்களில் பார்த்திருப்பீர்கள். "கரையான் வீட்டுலே புத்து வைச்சடுச்சா? அவ்வளவுதான்" என் பார்கள். கரையான் புற்றை எப்படி இலேசில் அகற் றவோ, அழிக்கவோ முடியாதோ, கேன் ஸரையும் இலேசில் துப்புரவாக அகற்றி விட முடியாது. எனவே இந்தப் பெயர்.

வளர்ச்சி விதியைப் புறக்கணித்து, கட்டுப் 'பாடற்ற நிலையில், பலனற்றுப் பல்கிப் பெருகி வளரும் செல்களின் ராட்சஸத் திரள்தான் புற்று நோய்.

'எச் பைலோரி' என்ற கிருமிகள் இரைப்பையைத் தாக்கினாலும் புற்று நோய் ஏற்படும். இதற்கு விசேஷ சிகிச்சை உள்ளது.

என்டாஸ்கோப்பி, பேரியம், சி.டி. ஸ்கேன், அல்ட்ரா சவுண்ட் போன்ற பரிசோதனைகளில் இரைப்பையின் உட்புற, வெளிப்புறப் புற்று பற்றி துல்லியமாக அறிந்து சிகிச்சை தரப்படும்.

புற்றுநோய் உள்ள தொண்ணூறு சதவிகித இரைப்பையை நீக்கிவிட்டு ஆகாரம் போகும் பாதையை மாற்றியமைப்போம்.

அறுவைச் சிகிச்சை மூலம் குணமாகாத நிலையில் கிமோதெரபி உதவும். இன்ட்ரா ஆபரேடிவ் ரெடியோ தெரபி மூலம் கண்ணுக்குத் தெரியாமல் நுணுக்கமாகப் பதுங்கியிருக்கும் புற்று நோய் செல்களை முற்றிலுமாகத் தகர்க்கலாம்.

என்னென்ன செய்தால் இரைப்பைப் புற்றுநோய் வராமல் தடுக்கலாம்?

- தவறான உணவுப் பழக்கம் கூடாது.
- நஞ்சு உணவைச் சாப்பிடக் கூடாது.
- மது, புகையிலை கூடவே கூடாது.
- மாவுச் சத்து அதிகமாகச் சாப்பிடக் கூடாது.
- 'நைட்ரேட்' அதிகமுள்ள மீன், மட்டன், சிக்கன் அதிகமாகச் சாப்பிடக் கூடாது.
- அவசரமான வாழ்க்கை கூடாது.

என்று நிறைய கூடாது'கள் இருக்கின்றன. "நெகடிவ்வாகவே சொல்றீங்களே டாக்டர். என்ன செய்யணும்னு சொல்லுங்க" என்றால், பூண்டு, வெங்காயம், நார்ச்சத்து நிரம்பிய காய், கீரை, கனிகளை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுங்கள். நார்ச்சத்துதான் ஆரோக்கியத்தின் வேர்ச் சத்து! முடிந்தவரை, டின் ஃபுட்ஸ் போன்ற ரசாயனக் கலப்பு மிகுந்தவற்றைத் தவிர்த்து, இயற்கைப் பொருள்களைச் சாப்பிடுங்கள். சுற்றுச் சூழல் அமைதியாகவும், மாசு விளைவிக்காததாகவும் இருக்கட்டும்.

நண்டோ, கரையானோ... வந்த பின் அவதிப்படாமல், இருப்பதைப் பொன் போல காப்பாற்றிக் கொள்ளத் தெரிய வேண்டும். ஏனென்றால் இது சாதா பை அல்ல! இரைப்பை!

அடுத்த வாரம் சிறுகுடல் விசிட்... காத்திருங்க!


டாக்டர் அஷோக் அவர்களுக்கு,

என் கணவருக்கு (65) மலத்துடன் ரத்தம் போகிறது. ஒரு டாக்டர், அவருக்கு 'பேரியம் எனிமா டெஸ்ட்' செய்ய வேண்டும் என்கிறார். வேறொரு டாக்டர், 'கலனோஸ்கோப்பி டெஸ்ட்' செய்ய வேண்டும் என்கிறார். இருவருமே அவருக்கு புற்றுநோய் இருக்குமோ என சந்தேகிக்கிறார்கள். அவருக்கு எந்த பரிசோதனை அவசியமானது எனக் கூறுவீர்களா?

- வி. சரோஜா, சென்னை - 5

'பேரியம் எனிமா டெஸ்ட்' என்பது நிழலைப் பார்த்து யூகிப்பது போன்றது. 'கலனோஸ்கோப்பி டெஸ்ட்' என்பது நேரில் பார்த்துத் தெளிவடைவது. உங்கள் கணவருக்கு 'கலனோஸ்கோப்பி டெஸ்ட்' செய்து பார்ப்பதே சிறந்தது. பைல்ஸாக இருந்தாலும், புற்று நோயாக இருந்தாலும் பயப்பட வேண்டாம். நவீன அறுவை சிகிச்சை முறைகள் இருக்கின்றன. தகுந்த மருத்துவரிடம் ஆலோசனை பெறவும்.





"'கேளுங்க கேளுங்க'ன்னு ஆரம்பிக்கிற விளம்பரம்தான் கேட்டிருக்கோம். இது என்னங்க 'தேடுங்க, தேடுங்க! தேடிக்கிட்டே இருங்க'ன்னு ஒரு விளம்பரம்?"

"அதுவா, சந்தனக் கடத்தல் வீரப்பன் ஆரம்பிச்சுருக்கும் எஃப்.எம். ரேடியோவாம்!"


- ஜி. சுந்தரராஜன்

"ஆனாலும் மாநகராட்சி ரொம்பதான் ஓவராப் போவுது!"

"ஏன்... என்னாச்சு?"

"பீச்சுல மணல் வீடு கட்டறதுக்குக் கூட பர்மிஷன் வாங்கி மழை நீர் அறுவடை செய்யணுமாம்!"

- ராஜமோகன்



தேடுங்க...தேடுங்க... தேடிக்கிட்டே இருங்க!



"எதிர்வீட்டு மாமியாரும், மருமகளும் 'தி.மு.க., ம.தி.மு.க.' மாதிரி..."

"எப்படி...?"


"அவர்களுக்கிடையே பிரிவிருந்தாலும், அடுத்த வீட்டாலப் பிரச்னைன்னா ஒண்ணா சேர்ந்துடுவாங்க..."

- நாமக்கல் பாலு

"போன பிறவில பல பேரோட வாழ்க்கையை நீங்க கெடுத்திருக்கீங்க."

"பலே! போன ஜென்மத்துலேயும் நான் அரசியல்வாதிதானா...?"

- சீர்காழி வி.ரேவதி



கஷ்டமடா சாமி!

“வீடு நல்லாத் தானிருக்கு. ஆனா... வாடகை தான்..” என்று இழுத்தான் ராமு. பொதுப்பணித் துறையில் வேலை. தஞ்சாவூரிலிருந்து சென்னை, அரும்பாக்கம் அலுவலகத்துக்கு மாற்றல் ஆகியிருந்தது. வீடு பார்த்தபின் மனைவி மக்களை அழைத்து வர வேண்டும். அவன் பார்த்த வீடு பட்ஜெட்டில் அடங்கவில்லை. முந்நூறு ரூபாய் அதிகம். மாதாந்திர பட்ஜெட்டில் எதைக் குறைக்க முடியும்? மளிகையா? கேபிளா, பாலா?

ராமுவின் அண்ணன் சொன்னார், “அந்தத் தெருவுல ஒரு எக்ஸ் எம்.எல்.ஏ, ஒரு தொழிலதிபர் அப்புறம் ஓர் அரசியல் தலைவர் எல்லாம் இருக்காங்க. அதனால என்ன சௌகரியம்னு கேக்கிறியா? அவங்க இருக்கிறதாலே தண்ணீர், மின்சாரம் இதெல்லாம் தடங்கலில்லாமல் கிடைக்கும். வேற எங்க வீடு பார்த்தாலும் தண்ணிக்கே உனக்கு நிறையச் செலவாகும். அப்புறம் நாள் பூரா செக்யூரிடி இருப்பாங்க. திருட்டு பயமே இருக்காது. அதையெல்லாம் யோசிச்சுப் பாத்தா..”



அடுத்த வாரமே பால் காய்ச்சிக் குடியேறினான் ராமு. திரிமூர்த்திகள் தயவில் வாழ்க்கை சீராக ஓடும் என்று வண்ணக் கனவு!

ஒரு மாதம் கழித்து வீட்டுக்கு அண்ணன் வந்திருந்தார். தெருக் கோடி பம்



■ ஆர். ரகோத்தமன் ■

பில் பழுப்பு நிற தண்ணீரை அடித்து குடங்களை, சைக்கிளில் வைத்துக் கொண்டு வந்த ராமு ''வாங்கண்ணே'' என்று வரவேற்றான். உடலில் வியர்வை ஆறாய் வழிந்தோடியது.

''இங்கேயே தண்ணிக் கஷ்டமா? சரி... ஃபேனைப் போட்டுக்கிட்டு உட்காரு.''

''கரண்டும் இல்லை அண்ணே. அடிக்கடி வரும். போகும்'' என்றவனை நம்ப முடியாமல் பார்த்தார்.

''அண்ணே, நாம்ப போட்டது தப்புக் கணக்கு. இங்கே இருக்கிற பெரிய மனுஷங்க குடிக்க கார்ப்பரேஷன் தண்ணியை எதிர்பார்க்கிறதில்லை. மினரல் வாட்டர்ல தான் சகலமும்! அது மட்டுமல்ல. கரெண்ட் இல்லாட்டியும் அவங்களுக்குக் கவலை இல்லை. ஜெனரேட்டர், இன்வர்டர் இதெல்லாம் வைச்சிருக்காங்க. திருட்டு பயம் இல்லைங்கறது என்னமோ உண்மை தான். ஆனா அவங்க வீட்டு நாய்கள் விடாமல் குரைச்சுத் தூங்க விடாமல் செஞ்சுடுது. காசைக் கொடுத்து தேள் கொட்டிக்கிட்ட கதையாயிடுச்சு. வாங்க இரண்டு குடம் தண்ணி பிடிச்சுக்கிட்டு வரலாம்.''

— அண்ணனிடம் ஒரு காலி குடத்தை நீட்டினான் ராமு. ○

நடக்குமென்பார்? நடக்கும்!

மேஷம் : இந்த வாரம் உங்களை டென்ஷன் பண்ணிக் கொண்டிருந்த குழப்பங்கள் பிரச்னைகள் விலகும். புதிய முயற்சிகள் கை கொடுக்கும். தெய்வபலம், தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வேலை விஷயமா வெளியூர் / வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. கொடுக்கல் வாங்கல் கைகொடுக்கும். எதிர்பார்த்த நிதி உதவி வந்து சேரும். குடும்பத்துல நிம்மதி பிறக்கும். சிலர் புதிய வீடு, வாகனம் வாங்க வாய்ப்பிருக்கு.

ரிஷபம் : மனசுல தன்னம்பிக்கையும், துணிச்சலும் பிறக்கும். எந்தக் காரியத்தையும் தைரியமா நின்னு வெற்றிகரமா முடிப்பீங்க. அலுவலகத்தில் சிறு சிறு பிரச்னைகள் வந்து இம்சை பண்ணும். மேல் அதிகாரிகளிடம் சுமுகமா பேசி வருவது நல்லது. என்னதான் பணம் வந்தாலும் செலவு கணக்கில்லாம இருக்கும். பெண்களுக்கு இது உற்சாகமான வாரம். சட்டம், காவல், இராணுவம் ஆகிய துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு முன்னேற்றம் உண்டு.

மிதுனம் : உங்க ராசிநாதன் புதன் மூன்றாமிடத்தில் குருவுடன் கூடி சஞ்சாரம் என்பதால் கல்வி கேள்வி ஆராய்ச்சிகளில் முன்னேற்றம் உண்டு. புதியவங்க அறிமுகம் கிடைக்கும். புதுவேலை தேடற வங்களுக்கு இது நல்ல நேரம். வேலை விஷயமா வெளியூர் / வெளி நாடு போக வாய்ப்பிருக்கு. சினிமா, நாடகம், சங்கீதம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்கு பெயர் புகழ் உண்டு. குடும்பத்துல சுப காரிய முயற்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு.



கடகம் : சூரியன் ஜென்மராசியில் சுக்கிரனுடன் அமர்ந்து குரு, புதன் தன குடும்பஸ்தானத்தில் சஞ்சாரம் என்பதால் பண நடமாட்டம் அதிகமாக இருக்கும். முக்கியமானவங்க ஆதரவு கிடைக்கும். குடும்பஸ்தானமாகிய இரண்டாமிடத்தில் குரு புதன் சஞ்சாரம் என்பதால், குடும்பத்தில் குதூகலமான திருப்பங்கள் அமையும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு அதுக்கான வாய்ப்புக் கூடிவரும். கல்யாணம் ஆகாதவங்களுக்கு இப்போ தடபுடல் ஏற்பாடுகள் நடக்கும்.


சிம்மம் : திட்டமிட்டபடி எடுத்த காரியங்களை வெற்றிகரமா செய்து முடிப்பீங்க. இதுவரையிலிருந்துவந்த குழப்பங்கள், பிரச்னைகள், வீண் அலைச்சல், போன்றவை விலகும். வேலை விஷயமா வெளியூர் / வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. கொடுக்கல் வாங்கல் கைகொடுக்கும். எதிர்பார்த்த அரசு உதவிகள் கிடைக்கும். பூர்வீகச் சொத்து விவகாரங் களில் உங்களுக்குச் சாதகமான தீர்ப்பு வரும். குல தெய்வ பிரார்த்தனை நன்மை தரும்.

கன்னி : பெண்களுக்கு இது அதிர்ஷ்ட வாரம். நினைச்சதையெல்லாம் முடிக்கப் போறீங்களே! நகை, நட்டு, ஆடை, அலங்காரப் பொருட்கள்னு வீட்ல சேர்த்து வைக்கப் போறீங்க. சிலர் புதிய வீடு, மனை வாங்க வாய்ப்பிருக்கு. கொடுக்கல் வாங்கல் சுமுகமாக இருக்கும். கடன் தொல்லை கள் படிப்படியா குறையும். சட்டம், காவல், இராணுவம் போன்ற துறை களைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு. வேலை விஷயமா சிலர் வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. சுயமாகத் தொழில் செய்றவங்களுக்கு எதிர்பாராத அதிர்ஷ்டம் உண்டு.

துலாம் : இதுவரை நிலவி வந்த தடைகள் குறுக்கீடுகள் இப்போது மாயமாகும். பண நடமாட்டம் தாராளமாக இருக்கும். புதியவங்க அறிமுகம் கிடைக்கும். அவங்களால நன்மை உண்டு. குடும்பஸ்தானமாகிய இரண்டாம் இடத்தில் கேது அந்த வீட்டின் அதிபதி ஐந்தில், குரு பார்வை பெற்றிருப்பதால்


அக்னிசர்மா பக்கம்






குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். கணக்கில்லாமல் செலவு வந்தாலும் பல வழிகள்ல பணம் வந்து பாக்கெட்டை நிரப்பும். இதுவரை விரோதமாக இருந்தவங்க மனம்மாறி சுமுகமாக இருப்பாங்க.


விருச்சிகம் : எந்தவிதமான சிக்கலான காரியத்தையும் இந்த வாரம் சாமர்த்தியமா சமாளிப்பீங்க. குடும்பத்துல சுபகாரிய நிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்பிருக்கு. சொத்து விவகாரங்கள்ல அனுகூலம் உண்டு. சிலர் வீடு, மனை வாங்குவீங்க. பிரிந்து போனவங்க இப்ப ஒன்னு கூடுவாங்க. கலைத் துறையைச் சேர்ந்தவங்களுக்குப் புகழ், பாராட்டுக் கிடைக்கும். இதுவரை பாக்ய ஸ்தானத்தில் சஞ்சாரம் செய்த குரு பத்தாமிடம் என்பதால் எதிலும் நிதானம், கவனம் தேவை.




தனுசு : இந்த வாரம் உங்க பெயர் புகழ் கூடும். முக்கியமானவங்க சந்திப்பு நிகழும், பணநடமாட்டம் தாராளமா இருக்கும். வேலை விஷயத்தில் இருந்த குழப்பங்கள் விலகும். புதிய பொறுப்புகள், இடமாற்றம், பதவி உயர்வு ஆகியவை சிலருக்குக் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல் சுமுகமா இருக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் சிறு சிறு பிரச்னைகள் வந்தாலும் உடனுக்குடன் நிவாரணம் ஆகும்.




மேஷ ராசிக்காரரான கிரணுக்கு வாகன ராசியிருக்காம்.




மகரம் : இந்த வாரம் எதிர்ப்புகள் மறையும். எதிரிகள் அடங்கிப் போவார்கள். தெய்வ பலம் கூடும். முன்னபின்ன தெரியாதவங்ககிட்ட அதிகமா வாய் கொடுக்க வேண்டாம். புதிய முயற்சிகளைக் கொஞ்சம் ஓரங்கட்டுங்க. வரவேண்டிய பணம் வரவாகும். பூர்வீகச் சொத்து விவகாரங்கள்ல அனுகூலமான இருப்பம் உண்டு. பெண்கள் தங்கள் எண்ணம் நிறைவேறப் பெறுவாங்க. மாணவர்கள் உழைப்பு வீண் போகாது. கொடுக்கல் வாங்கல்ல நிதானம் தேவை. எலக்ட்ரானிக்ஸ், இயந்திரம், கமிஷன், இன்டஸ்ட்ரீஸ் போன்ற துறைகளைச் சேர்ந்தவங்களுக்கு முன்னேற்றம் உண்டு.




கும்பம் : குடும்பத்தில் இதுவரை இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் விலகும். கல்யாணம் போன்ற சுபகாரிய முயற்சிகள் வெற்றி பெறும். பணநடமாட்டம் தாராளமா இருக்கும். பொன், வெள்ளி, ஆபரணம் ஆகிய இனங்கள் ஆதாயம் தரும். சினிமா, நாடகம் போன்ற கலைத் துறையைச் சேர்ந்தவங்க முன்னணிக்கு உயருவாங்க. எதிர்பார்த்த பண உதவி வந்து சேரும். கொடுக்கல் வாங்கல் கைகொடுக்கும். தொழில் சம்பந்தமாக வெளிநாடு போக வாய்ப்பிருக்கு. மனசுல துணிச்சலும் தன்னம்பிக்கையும் பிறக்கும். பெண்கள் தாங்கள் நினைத்ததைச் சாதிச்சுக்குவீங்க.




மீனம் : எவ்வளவு சிக்கல் வந்தாலும் எடுத்த காரியத்தை வெற்றிகரமா செய்து முடிப்பீங்க. அலுவலகத்தில் குழப்பங்கள், குறுக்கீடுகள் நீடிக்கும். அதுக்காக ரொம்ப கவலைப்படவேண்டாம். பிரச்னைகள் மெதுவாக சுமுகமாகும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடறது நல்லது. எதிலும் நிதானம் அவசியம். ரியல் எஸ்டேட், மருத்துவம், இன்டஸ்ட்ரீஸ், கெமிக்கல்ஸ், அச்சகம் போன்ற துறைகளில் ஆதாயம் உண்டு. குடும்பத்துல ஒற்றுமை நிலவும்.



ஆகஸ்ட் 6 முதல் 12 வரை







சிவகாமியின் சபதம்

பத்தொன்பதாம் அத்தியாயம்

அன்னையின் ஆசி


மறுநாள் பாண்டியன் நெடுமாறன் புவனமகாதேவியிடம் விடைபெற்றுக் கொள்வதற்காக அந்த மூதாட்டியின் அரண்மனைக்குச் சென்றான்.

மகேந்திர பல்லவரின் பட்டமகிஷி அகமகிழ்ந்து முகமலர்ந்து நெடுமாறனை வரவேற்றாள்.

அச்சமயம் அங்கிருந்த மங்கையர்க்கரசி வெளியேற யத்தனித்த போது, "குழந்தாய்! ஏன் போகிறாய்? பாண்டிய குமாரனுடன் நான் பேசக் கூடிய இரகசியம் ஒன்றும் இல்லை" எனக் கூறி அவளைப் போகாமல் நிறுத்தினாள்.

பிறகு நெடுமாறனை உட்காரச் சொல்லி, "அப்பனே! எல்லா விவரமும் அறிந்து கொண்டேன். வானமாதேவி நேற்றிரவே வந்து கூறினாள். இருந்தாலும் அந்த உத்தமியின் மனத்தை நீ ரொம்பவும் கலக்கிவிட்டாய்!" என்றாள். நெடுமாறனுடைய மௌனத்தைக் கண்டு, 'நீ காஞ்சிக்கு வந்தது முக்கியமாக எனக்குத்தான் பெரிய அனுகூலமாகப் போயிற்று. இந்தப் பெண்ணைத் தகுந்த வரனுக்கு மணம் செய்து கொடுப்பதாக இவளுடைய தந்தைக்கு நான் வாக்குக் கொடுத்திருந்தேன்

அமரர் கல்கி



அது விஷயத்தில் நான் பிரயத்தனம் செய்ய இடமில்லாமல் நீங்களே முடிவு செய்து கொண்டு விட்டீர்கள். எனக்கு அது விஷயமான பொறுப்பு இல்லாமல் போயிற்று" என்றாள் புவனமகாதேவி.

"தாயே! அப்படிச் சொல்ல வேண்டாம். தங்களுடைய சுவீகாரப் பெண்ணின் கலியாண விஷயமாகத் தங்களுடைய பொறுப்பு தீரவில்லை. தாங்கள் பிரயத்தனம் செய்வதற்கு இடம் இருக்கிறது. கொஞ்சம் மங்கையர்க்கரசியைக் கேட்டு விடுங்கள், அவள் என்னை மணந்து கொண்டு தங்களுடைய பொறுப்பைத் தீர்த்து வைக்கப் போகிறாளா என்று!"

இவ்விதம் நெடுமாறன் சொன்னதும், புவனமகாதேவி, "அவளைப் புதிதாய்க் கேட்பானேன்? ஏற்கெனவே எல்லாம் அவள் என்னிடம் சொல்லியாயிற்று" என்று கூறிக் கொண்டே திரும்பிப் பார்த்தாள்.

திரும்பிப் பார்த்த தேவி, மங்கையர்க்கரசியின் கண்களில் கண்ணீர் ததும்பி நிற்பதைக் கண்டு திடுக்கிட்டு, "இது என்ன? குழந்தைகள் அதற்குள்ளே ஏதேனும் சண்டை போட்டுக் கொண்டீர்களா?" என்று நெடுமாறனைப் பார்த்து வினவினாள்.

"சாதாரணச் சண்டை போடவில்லை, அம்மா! பெரிய யுத்தம்! வாதாபி யுத்தத்துக்கு நான் போகவில்லையே என்று இங்கே அரண்மனைக்குள்ளேயே யுத்தம் ஆரம்பித்தாயிற்று. இவ்வளவு தூரம் என்னைப் பைத்தியம் பிடிக்க அடித்துவிட்டு, என் சொந்தத் தமக்கையே எனக்கு விஷங் கொடுத்துக் கொல்ல நினைக்கும் வரையில் கொண்டு வந்து விட்டு, இப்போது என்னை மணந்து கொள்ள மாட்டேனென்று சொல்லுகிறாள்! இதன் நியாயத்தை நீங்களே கேளுங்கள்!" என்றான் நெடுமாறன்.


புவனமகாதேவி மங்கையர்க்கரசியைப் பார்த்தாள். "ஏதோ அனாவசியமான தடையை இவர்களே ஏற்படுத்திக் கொண்டார்கள் என்று தெரிந்து கொண்டாள். "குழந்தாய்! பாண்டிய குமாரன் சொல்வது வாஸ்தவமா? உன்னைத்தேடி வந்திருக்கும் மகத்தான பாக்கியத்தை நீயே வேண்டாமென்று மறுதலிக்கிறாயா?" என்று கேட்டாள்.


மங்கையர்க்கரசி விம்மிக் கொண்டே வந்து அவள் பாதத்தில் நமஸ்கரித்து, "அம்மா! இவருக்கு நான் என் உள்ளத்தைப் பறிகொடுத்து இவரை என் பதியாக வரித்த போது இவர் சமணர் என்பது எனக்குத் தெரியாது..." என்று சொல்லி மேலே பேச முடியாமல் தேம்பினாள்.

நெடுமாறன் பெருங் கவலைக்குள்ளானான். "இது என்ன? கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே?" என்று அவன் திகைத்து நிற்கையில், புவனமகாதேவி அவனைப் பார்த்து, "அப்பனே! இந்தக் குழந்தை சைவர் குலத்தில் பிறந்தவள். சிவபெருமானையும் பார்வதியையும் வழிபடுகிறவள் என்று உனக்குத் தெரியுமல்லவா? அதற்கு ஒன்றும் தடை செய்ய மாட்டாயே?" என்று கேட்டாள்.

நெடுமாறன் அந்தச் சங்கடமான நிலையிலிருந்து விடுபட வழிகிடைத்தது என்று உற்சாகத்துடன், "அம்மா! அப்படிப் பட்ட மூர்க்கன் அல்லன் நான். சமண சமயத்தில் நான் பற்றுக் கொண்டவனானாலும் சைவத்தை வெறுப்பவன் அல்லன். என் ஆருயிர் நண்பனான குலச்சிறை அபாரமான சிவபக்தன். நான் சுரமாய்க் கிடந்தபோது இங்கே வந்து திருநாவுக்கரசர் பெருமானிடம் திருநீறு வாங்கி வந்து எனக்கு இட்டான். அதை நான் ஆட்சேபிக்க வில்லை. மதுரையில் இருக்கும் போது அவன் காலை, மத்தியானம், மாலை மூன்று வேளையும் ஆலயத்துக்குச் சென்று மீனாக்ஷி அம்மனையும் சுந்தரேசுவரரையும் தரிசித்து விட்டு வருவான். அம்மாதிரியே இவளும் செய்யட்டும். நான் தடை சொல்லவில்லை!" என்றான். அப்போதுதான் மங்கையர்க்கரசியின் முகம் முன்போல் பிரகாசமடைந்தது.

அந்த அபூர்வமான காதலர் இருவரையும் புவனமகாதேவி தன் எதிரில் தம்பதிகளைப் போல் நிற்கச் செய்து ஆசி கூறி






வாழ்த்தினான்.

இன்னும் சிறிது நேரம் மேலே நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்து விட்டு, நெடுமாறன் அவ்விருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு சென்றான்.

அவன் சென்ற பிறகு புவனமகாதேவி மங்கையர்க்கரசியை அன்போடு அணைத்துக் கொண்டு, "குழந்தாய்! நீ கவலைப்படாதே! நீ சில நாளாக அடிக்கடி கண்டு வரும் கனவைப் பற்றிச் சொன்னாயல்லவா? உன் கனவு நிச்சயம் பலிக்கும். நெடுமாறன் சிவபக்தியில் சிறந்தவனாவான். அந்தப் புண்ணியத்தை நீ கட்டிக் கொள்



அருள்வாக்கு



ஸ்வாமி என்றால் என்ன? 'ஸ்வம்' என்கிற வார்த்தைக்கு 'உடைமை', 'சொத்து' என்று அர்த்தம். 'ஸ்வம் என்பதே தெலுங்கில் 'ஸொம்மு' என்றாகியிருக்கிறது. 'ஸொம்மு' என்றால் 'சொத்து'. ஸ்வந்தம் - நமக்குச் சொந்தமானது - அதுவே நம் சொத்து. கோயிலைச் சேர்ந்த சொத்தைக் கேரளத்தில் 'தேவஸ்வம்' என்கிறார்கள் அல்லவா? உடைமைக்குச் சொந்தக்காரர் யாரோ - அந்த உடையவர் தான் 'ஸ்வாமி'. ஸ்வாமி என்பதற்கு நேர் தமிழ் வார்த்தை 'உடையார்' என்பது. முன் காலத்தில் கோயில் சுவர்களில் வெட்டப்பட்ட கல்வெட்டுகளிலெல்லாம் 'திருச்சிற்றம்பலமுடையார்', 'திருவேங்கடமுடையார்', 'திருநாகேச்சுரமுடையார்', சுபாலீச்சுரமுடையார்' என்பது போலவே 'உடையார்' என்ற பெயரில்தான் தெய்வங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

குருவும் ஸ்வாமியும் ஒன்று என்பதால் தான் வைஷ்ணவர்கள் ஸ்ரீராமானுஜரை 'உடையவர்' என்றே சொல்கிறார்கள்.

'ஸ்வாமி' என்றால் சொத்துக்கு உரிமைக்காரர் என்றேன். எந்தச் சொத்து? சகலப் பிரபஞ்சமும்தான். அதிலுள்ள நாமும் அவன் சொத்துதான். உள்ளதனைத்தும் அவன் ஒருவனுக்கே உடைமையாகும்: 'எல்லாம் உன் உடைமையே' என்று தாயுமானவரும் பாடினார். நம் சொத்து பிறர் சொத்து என்றெல்லாம் பாத்தியதை கொண்டாடுகிறோமே; உண்மையில் இந்தச் சொத்தெல்லாம், அவற்றுக்குப் பாத்தியதை கோரும் நாம், பிறர், எல்லோருமே அவனுடைய சொத்துதான். அவன் இல்லாவிட்டால் இந்தப் பிரபஞ்சமும் இல்லை, நாமும் இல்லை. நாம் பாத்தியதை கோருகிற சொத்துகளும் இல்லை.

எல்லாவற்றையும் செய்கிற ஒரே ஒருத்தருக்குத்தான் அவையெல்லாம் சொந்தம். அதனால்தான் அவர் உடையவர் – ஸ்வாமி – என்று அழைக்கப்படுகிறார். நாமும் அவரது உடைமைகள்தான். நம் சொத்து என்று நாம் நினைத்துக் கொண்டிருப்பதை நம் இஷ்டப்படி விநியோகிக்க உரிமை பெற்றிருக்கிறோம் அல்லவா? அப்படியே ஸ்வாமியின் சொத்தாகிய நாமும் நம்மை அவன் இஷ்டப்படி நடத்தட்டும் என்று விட்டு விட்டால் நமக்கு எந்தப் பாரமும் இல்லை, ஒரே ஆனந்தம்தான்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்.

வாய்!" என்று ஆசி கூறினான்.

நெடுமாறனிடமும் மங்கையர்க்கரசியிடமும் இந்தக் கதையைப் பொறுத்த வரையில் நாமும் இப்போது விடைபெற்றுக் கொள்ள வேண்டும். அப்படி விடை பெறுமுன், நெடுமாறன் விஷயத்தில் புவனமகாதேவியின் வாக்கு முழுதும் உண்மையாயிற்று என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறோம். பிற்காலத்தில் நெடுமாறன் ஸ்ரீ சம்பந்தப் பெருமானின் பேரருளினால் சிறந்த சிவநேசச் செல்வனானான். யுத்தம் சம்பந்தமான அவனுடைய கொள்கையும் மாறுதல் அடைய நேர்ந்தது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, வாதாபிப் புலிகேசியின் மகன் விக்கிரமாதித்தன் தென்னாட்டின் மீது படையெடுத்து வந்து பாண்டிய நாட்டை அடைந்தபோது நெல்வேலிப் போர்க்களத்தில் அவனைப் பாண்டியன் நெடுமாறன் முறியடித்துத் தமிழகத்தின் சரித்திரத்தில் அழியாப் புகழ் பெற்றான்.

(தொடரும்)

சிரித்து வாழவேண்டும் - 2

குகனுக்கு

நாடகத்தில் ஒரே ஒரு காட்சியில் சில நிமிடங்கள் மட்டும் வயிற்று வலிக்காரராக வந்த என்னைச் சிறந்த நடிகன் என்று பாராட்டி, பரிசுக் கோப்பை அளித்து கௌரவித்த வி.ஐ.பி. யார் தெரியுமா?

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்தான்.

அதற்கு முன் நான் எம்.ஜி.ஆரைப் பார்த்தது இல்லை. எனவே, அவரை எனக்கு அடையாளம் தெரியவில்லை. எம்.ஜி.ஆர். எனக்குப் பரிசு கொடுத்தபோது அதை வாங்கச் சென்ற நான், என் பக்கத்தில் இருந்த இன்னொரு நடிகரிடம், 'இவரு யாரு?' என்று கேட்ட எனது அறியாமையை நினைத்து, நான் பலமுறை சிரித்திருக்கிறேன்.



அன்று இரவு படுத்தவுடன், சுமார் ஒன்றரை மாதத்துக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் என் மனத்திரையில் ஓடியது. வழக்கம்போல, நான் ரயில்வே ஆபீசிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தேன். வழியில் ஒரு கூரைக் கொட்டகை. வெளியில் ஒரு போர்டு. ''தேவி நாடக சாலை' என்று அதில் எழுதப்பட்டிருந்தது. உள்ளே சிலர் உரக்கப் பேசிக் கொண்டிருப்பது வெளியில் கேட்டது. ஏதோ நாடகத்தின் ஒத்திகை நடந்து கொண்டிருந்தது.

நாடகத்தின் ஒரு கதாபாத்திரம் பேசிய வசனங்கள் எனக்கு ரொம்பவும் பரிச்சயமானவை போல இருக்கவே, வசனங்களைக் கவனித்தேன்.

உள்ளே நடப்பது ராமாயண நாடக ஒத்திகை என்பதும், வசனம் பேசிக் கொண்டிருக்கும் கதாபாத்திரம் குகன் என்றும் நான் கண்டுபிடித்து விட்டேன். அந்தக் கொட்டகையின் நுழை வாயிலுக்குப் போய் உள்ளே எட்டிப் பார்த்தேன்.

நாற்காலியில் ஒருவர் உட்கார்ந்து கொண்டிருந்தார். எதிரே நடிகர்கள் நின்று கொண்டிருந்தனர். அதில் ஒடிசலான ஒருவர் நின்று கொண்டு "அஞ்சன வண்ணன்... நின் ஆருயிர் நாயகன்' என்று கம்பராமாயணத்தில் குகன் சொல்கிற வரிகளைப் பேசிக் கொண்டிருந்தார். "ஓ.கே... எங்கே இன்னொரு தடவை சொல்லுங்கள்'' என்று அவரை இயக்கிக் கொண்டிருந்தார் நாற்காலிக்காரர்.

குகனாக நடித்தவர் வசனம் பேசக் கேட்ட எனக்கு உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. ஒரு கட்டத்தில், இனியும் பொறுத்துக் கொள்வது முடியாத காரியம் என்று தோன்றியது.

நாற்காலியில் அமர்ந்திருந்தவரை நெருங்கினேன். சில நிமிடங்கள் காத்திருந்துவிட்டு, மென்மையான குரலில் "குகன் எத்தனை கம்பீரமான கதாபாத்திரம்! கம்பராமாயணத்து வரிகளை, குகன் பாத்திரம் சொல்கிறபோது குரலில் கம்பீரமான ஏற்ற, இறக்கம் வேண்டாமா? என்ன அற்புதமான வரிகள் அவை! குகனைப் போன்ற ஆஜானுபாகுவான பர்சனாலிடி இல்லாமல் போனாலும், வசனம் பேசுவதிலாவது வீரம் வேணாமா? இவர் என்னவோ, பஜனை கோஷ்டியில் கடைசி வரிசை ஆசாமி, கடனே என்று பாடுவதைப் போல வசனம் பேசுகிறாரே!" என்றேன்.

சட்டென்று என்னைத் திரும்பிப் பார்த்தவர், ஒன்றும் பேசாமல் இருந்தாலும், அவரது பார்வைக்கு நீ யார்? உனக்கு இங்கே என்ன வேலை! உனக்கு நாடகம், நடிப்பு பற்றி என்ன தெரியும்? பெரிசாய்க் குறை கண்டு பிடிக்கிறாயே!' என்று



படம் உதவி: ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

அர்த்தம் புரிந்து கொள்ள முடிந்தது. அடுத்த விநாடியே அவர் என்னை அலட்சியப்படுத்திவிட்டு, அந்த நடிகரைப் பார்த்து, "நீங்க வசனம் பேசுங்க!" என்றார்.

'பளார்' என்று அறைந்தது போல உணர்ந்தேன். அந்த நடிகர் டைரக்டருக்கு மிக வேண்டியவராக இருக்கலாம்; நாடகத்துக்கு நிதி உதவி செய்திருக்கலாம்; அல்லது நடிக்கத் தகுதி இல்லாத அவருக்கு, நடிக்க வாய்ப்புக் கிடைக்க, திறமை தவிர வேறு ஏதாவது ஒன்று தான் காரணமாக இருக்கும் என்று மட்டும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அதற்கு மேல் அங்கே நிற்கப் பிடிக்காமல் வெளியேறினேன்.

தெருவோடு போய்க் கொண்டிருந்த என் கவனத்தை ஈர்த்தது, உள்ளே போய், வசனம் பேசப்பட்ட முறையைப் பார்த்து, கோபப்பட்டு விமர்சனம் செய்யத் தூண்டியது எது?

கம்பராமாயணத்தில் ராமன், லட்சுமணனை விட குகன் என்கிற கதாபாத்திரத்தின் மீது எனக்கு இருந்த மிகவும் ஆழமான மதிப்பும், மரியாதையும் தான் என்றால் நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால் அதுதான் நிஜம். எனக்கு குகன் மீது அப்படி ஓர் அபார மதிப்பு ஏற்படக் காரணமானவர், நான் படித்த பள்ளிக் கூடத்தின் தமிழாசிரியர்தான்!

நான் தாராபுரம் போர்டு ஹை ஸ்கூல் மாணவன். அங்கே எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்களில், இன்றைக்கும் என் நெஞ்சில் நிறைந்து இருப்பவர் தமிழாசிரியர்தான்!

கம்பீரமான தோற்றம்; ஆழமான தமிழ்ப்புலமை. மாணவர்கள் மீது ஆழ்ந்த அக்கறை. படு சுவாரசியமாகப் பாடம் எடுப்பது எப்படி, என்று எல்லா ஆசிரியர்களுக்கும் பாடம் எடுக்கும் தகுதி அவருக்கு உண்டு என்றால் அது மிகையில்லை. அதுவும் அவர் கம்பராமாயணம் நடத்தினால் நேரம் போவதே தெரியாது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், கம்பராமாயணத்தில் அவர் குகப்படலம் நடத்தியதைக் கேட்டது முதல்தான் எனக்கு குகன் மீது அப்படி ஒரு பிடிப்பே ஏற்பட்டது.

ராமனை நாட்டுக்குத் திரும்ப அழைத்துப் போக வரும் பரதனை, போரிட வந்திருப்பதாக, தவறாக குகன் நினைத்துப் பேசுகிற காட்சியை அவர் நடித்து, நடத்தியது இன்னமும் என் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது. ஓர் இடத்தில், (மக்கள்) 'நாய்குகன் என்று என்னை ஏசாரோ?' என்று வரும். அதைச் சொல்கிறபோது, காலால் தரையை ஓர் உதை உதைத்துவிட்டு, தலையைக் கம்பீரமாக உயர்த்திச் சொல்கிறபோது, ஆஜானுபாகுவான அவரது தோற்றமும், நடிப்பும், குகனை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்திவிடும்.

மரியாதை

படம்: யோகா



நாகேஷ்

அப்படி அனுபவித்து குகப்படலம் படித்தவன் நான். யாரோ ஒரு ஒல்லிக்குச்சி உடம்பு கொண்ட ஆசாமி, குரலில் ஏற்ற, இறக்கமில்லாமல் கம்பரது வரிகளைச் சொல்வதை எப்படிச் சகித்துக் கொள்ள முடியும்? எனவேதான், அந்த நாடகத்துக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லா விட்டாலும் கூட, வலியப் போய் விமர்சனம் செய்தேன்!

அங்கே நான் உதாசீனப் படுத்தப்பட்டதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை. அதே சமயம் அங்கே நின்று பிரச்னை கிளப்பவும் எனக்கு விருப்பமில்லை. எனது தார்மிகக் கோபத்துக்கு, ஆக்க பூர்வமான ஒரு வடிகால் தேடினேன். அதனால்தான் நான் வேலை பார்த்து வந்த ரயில்வே அலுவலகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கும் சென்று, இங்கே கல்சுரல் கிளப் ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டேன். எனது தேடல் என்னை ம.ராவிடம் கொண்டு சேர்த்தது.

நடிப்புக்காக பரிசு வாங்கிவிட்டேனே யொழிய, நடிப்புக்கும் எனக்கும் துளியும் சம்பந்தமே கிடையாது. பள்ளிக்கூட நாடகத்தில் நடித்த அனுபவம், அல்லது சினிமாக்கள் நிறைய பார்த்து, நாமும் சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை வந்தது என்பதெல்லாம் இல்லை. எங்கள் குடும்பம் ரொம்பவும் ஆசார மான கன்னடம் பேசும் பிராமணக் குடும்பம். அப்பாவுக்கு ரயில்வேயில் வேலை. பூர்வீகம் மைசூர். தாராபுரத்தில் ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தார் என் அப்பா. அம்மாவுக்கு, தன் குடும்பம்தான் உலகம். நன்றாகச் சமைப்பது, பூஜைகள் செய்வது, குடும்பத்தைப் பரா மரிப்பது போன்ற விஷயங்களுக்காகவே தமது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துக் கொண்ட பாரம்பரிய அம்மா அவர்.

ஆனால், என்னை வளர்த்தது எல்லாம் என்னுடைய அக்கா கெங்கு பாய் தான். ஒரு தாயைப் போன்ற பாசத்தை என் மீது பொழிந் தவர் என் அக்கா. தொண்ணூறு வயசாகி விட்டது. இன்னமும் இருக்கிறார்.

என் அப்பா ரொம்பக் கண்டிப்பானவர். நான் நன்றாகப் படிக்கணும்; நல்ல மார்க் வாங்கணும் என்று எப்போதும் சொல்லும் டிபிகல் அப்பா.

தாராபுரத்தில் அக்ரஹாரத்தில் கடைசி வீடு எங்களுடையது. எங்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் ராமகாந்த ராவ் என்று ஒருத்தர் இருந்தார். பள்ளிக்கூட ஆசிரியர். அவருக்கு கோபால் என்று பையன். தினமும், பையனை விடியற் காலை நாலரை மணிக்கெல்லாம் எழுப்பி விட்டு விடுவார். பையனும், எழுந்த வுடன் சத்தம் போட்டுப் படிக்க ஆரம்பித்து விடுவான். நிசப்தமான விடியற்காலை நேரத்தில், எதிர்வீட்டு கோபால் படிப்பது ஊருக்கே கேட்கும். எதிர்வீட்டில், விடியற் காலை எழுந்து, சப்தம் போட்டு ஒரு பையன் படிக்கிறான் என்றால், மற்ற அப்பாக்கள் சும்மா இருப்பார்களா? என் அப்பாவும் என்னை தினமும் நாலரை மணிக்கு எழுப்பி விட்டு விடுவார். எழுந்திருக்காவிட்டால் அடிதான்!

எதிர்வீட்டுப் பையன் அக்பர், அசோகர் என்று உரக்கப் படிப்பது, எனக்குப் படிக்கத் தொந்தரவாக இருக்கும் என்பது ஒரு பக்கம். 'மனசுக்குள்ளேயே படிக்காதே! உரக்க வாய்விட்டு சத்தம் போட்டுப்படி... இல் லைன்னா நீ முழிச்சிக்கிட்டு இருக்கியா? தூங்கிட்டியான்னு எனக்குத் தெரியாது" என்ற அப்பாவின் தொல்லை இன்னொரு பக்கம். எனவே, எதிர்வீட்டு சத்தத்தைவிட அதிகக் குரல் எடுத்து $(a+b)^2 = a^2+2ab=b^2$ என்று நான் உரக்க சொல்லிக் கொண்டிருப்பேன்.

இந்த மாதிரிக் கூத்து பல நாள் அதிகாலை யில் நடந்திருக்கிறது. நான், கோபால் உட்பட, எங்கள் தெருவிலிருந்து ஏழெட்டுப் பேர் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சை எழுதினோம்.

ரிசல்ட்?

பரீட்சை எழுதிவிட்டு நான் காத்திருந்தது மாதிரி நீங்களும் ஒரு வாரம் காத்திருங்களேன்.

(தொடர்ந்து சிரிப்பேன்)

''பரத நாட்டியத்துக்கும் அரசியலுக்கும் சின்ன வித்தியாசம் தானா-எப்படி?''

''இதுக்கு 'ஜதி' முக்கியம்! அதுக்கு 'ஜாதி' முக்கியம்!''

— தஞ்சை தாமு



வட்டமேஜை



வாங்க சுமி, வாங்க!

📝 'மீண்டும் சுமி' என்ற விளம்பரத்திற்காகத்தான் நீண்ட இடைவெளி விட்டாரோ சுமி? வாங்க மிஸ், வாங்க!

சென்னை, அய்யாறு வாசுதேவன்

📝 'இடையறா விழிப்பே ஜனநாயகத்தின் பரிசு' என்ற ஆக்டன் பிரபுவின் கூற்றை நிலைபெறச் செய்யும் சாதனங்கள் பத்திரிகைகளும், செய்தித் தாள்களும். அவற்றின் விமர்சனங்களைக் கண்டனங்களாகக் கருதாது, நல்லாட்சிக்குத் துணை செய்யும் சீரிய கருத்துகளெனக் கருத வேண்டும். பத்திரிகைகளின்மீது தொடுக்கும் போர், ஜனநாயகத்தைச் சீர் குலைக்கும்.

சென்னை,
இராஜகோபாலன்

📝 ஜெ.வின் தாயுள்ளம் குறித்த கேள்விக்கு, தாசின் பதில் குபீர்ச் சிரிப்பை வரவழைத்தது.

ஆர். பிரகாஷ், பொன்மலை

📝 ஜான் சாலமனின் 'எள்ளுப் பொடியும் தேங்காய் சட்னியும்' அற்புதம். காசு இல்லாதவனை கால் தூசிகூட கண்டு கொள்வதில்லை என்ற நியாயத்தை நிலை நாட்டிய கதை.

கோவை, டேனியல் ஜூலியட்

📝 பக்கத்துக்குப் பக்கம் வண்ணக் கலவையாய் வாரித் தூவப்பட்ட வெளிநாட்டுத் துணுக்குகள், கல்கியின் அழகையும் சிறப்பையும் இரட்டிப்பாக்கிவிட்டன.

கும்பகோணம், புலவர் எஸ்.கே.மூர்த்தி

📝 ஜி.எம். குளறுபடிகளால் இந்தியாவில் பெரிய பிரச்னையே நடந்தது நினைவில்லையா? ஜி.எம். முறையில் உருவாக்கப்பட்ட பி.டி. பருத்தி, கொய்யா, பூசணி சைசுக்கு வருவதும், பூசணி தேங்காய் சைசுக்கு வருவதும், சிவப்பு முட்டைக் கோஸ் என்று வண்ணம் காட்டுவதும், எல்லாமே ஒரு வகையான வக்ர முன்னேற்றம்தான்.

திருநெல்வேலி, ஸ்வாமி

📝 'கொஞ்சம் நெருங்கி' சிறுகதை மிக அருமை. கணவனும் மனைவியும் கருத்தொருமித்து, தங்களது நிழலையும் பிறருக்கு அளிப்பதில் சுகம் கண்டது நெகிழச் செய்தது.

மதுரை, இரா. சக்கரபாணி

📝 ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பதை அழகாகப் படம் பிடித்துக் காட்டியது 'ஆய்வறிக்கை சோறு போடுமா?' தலையங்கம்.

பொள்ளாச்சி, சி.ஆர். நாகராஜன்

📝 'உயிரலைகள்' உணர்வு பூர்வமான சிறுகதை. 'குற்ற உணர்வு உறுத்தி வந்தே வாட்டும்' என்பதை நயமாக வெளிப்படுத்தியுள்ளார் ஆரணி யுவராஜ்.

மேலகிருஷ்ணன்புதூர்,
கே.எல்.புனிதவதி



புதுவையில் இப்போது இது எல்லோரையும் படபடக்கச் செய்யும் விவகாரம். கடற்கரையில் காந்தி சிலையை ஒட்டி கடல் அரிப்பைத் தடுக்க போடப்பட்டிருந்த பாறாங்கற்களின் மேல், மணலைப் போட்டு நிரவும் வேலை நடக்கிறது. "ஏன்? எதற்கு" என்று தலையைப் பிய்த்துக் கொள்கிறார்கள். அங்கே சமதளமாகச் செய்துவிட்டால், பிறகு பஜ்ஜி, பான்பராக், பானிபூரி என்று கடைகள் வந்து, அந்தப் பகுதியே நாறிப் போய் விடுமே என்ற கவலைதான் மக்களுக்கு. "பயப்பட வேண்டியதில்லை. அழகாகச் செய்து அதில் செடி கொடிகளை நட்டு அழகு செய்யப் போகிறோம்." என்று ஆறுதல் சொல்கிறார்கள் அரசு அதிகாரிகள்.

இந்தக் கடற்கரைப் பகுதி ஒன்றுதான் எங்களுக்குச் சுத்தமான காற்று கிடைக்கும் பகுதி. நகரைச் சுற்றிப் பாருங்கள். நகரத்தில் குப்பை என்று சொல்லுவதற்குப் பதிலாக, குப்பையில் நகரமா என்று வியந்து போவீர்கள். இந்த நிலையில் கடற்கரைக்கு எந்த பாதிப்பும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது" என்று ஜாகிங் செய்துகொண்டே வந்த ரவீந்திரன் மூச்சிறைப்போடு நம்மிடம் சொன்னார்.

காலை வேளையில் சூரியனின் கதிர்கள் எட்டிப் பார்ப்பதற்கு முன்னாலேயே கான்கிரீட் நடைபாதைகளில், தொந்தியும் தொப்பையுமாக நடைபோடுகிறார்கள். அழகுக்கு மேலும் அழகூட்ட வேண்டுமென்று டீன் ஏஜ்களும் கடற்கரைக்கு வருகை தருகின்றன. ரத்த அழுத்தத்தைக் குறைக்க வாக்கிங் போகலாம் என்று அங்கு போனால்,






நமக்கு அழுத்தம் மேலும் எகிறுகிறது. (ஆசிரியரே! இந்த வரியை சென்சார் செய்ய வேண்டாம்). நடந்து களைத்துப் போகிறவர்களுக்குச் சுகமாகச் சாய்ந்து பராக்குப் பார்க்க, சிமெண்ட் பெஞ்ச் அழகாகக் கட்டி வைத்திருக்கிறார்கள். ஒரு மூலையில் டூப்ளேயின் சிலை முன்பு குனிந்தும், நிமிர்ந்தும், படுத்தும், பாய்ந்தும் பலவிதமான உடற்பயிற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஒரு ஓரமாக பெட் பாட்டில்களில் கலர் கலராக வைத்து விற்றுக் கொண்டிருக்கிறார்கள். "சார் சர்க்கரை வியாதிக்கு பாகற்காய்ச் சாறு ரொம்ப நல்லது. சாப்பிட்டுப் பாருங்க" என்று சொல்கிறார் இளைஞர் முரளி. காலையில் மூன்று மணிக்கே எழுந்து மூலிகைச் சாறுகளை தயார் செய்கிறாராம். அருகம்புல், காரட், வாழைத்தண்டு, இஞ்சி, வல்லாரை, மணத்தக்காளி என்று பல்வேறு மருத்துவ குணம் கொண்ட சாறுகளுடன், முளைகட்டிய பயறு, வேகவைத்த கொண்டைக் கடலை ஆகியவற்றையும் விற்கிறார் முரளி. இவருக்கு உதவியாக குணா. ஒன்றரை வருடமாக கடற்கரையில் மூலிகைச் சாறு விற்று வரும் முரளிக்கு மழைக் காலத்தில் பிஸினஸ் அவுட்!

"உங்கள் ஆரோக்கியத்துக்கு தினசரி ஐந்து ரூபாய் கூடச் செலவழிக்கக் கூடாதா? நான் விற்கும் சாறுகளைக் குடித்தால் நூறு வயது வரை கூட வாழலாம்" என்று வலையைப் போடுகிறார் முரளி. இதற்கிடையில் பாகற்காய் சாற்றைக் குடித்துவிட்டு 'விழித்துக்' கொண்டு நின்ற ரவிக்குமாரைப் பார்த்ததும் "நூறு வயது.. நமக்கு வேண்டாம்பா!" என்று விட்டோம் ஜூட்.

மூலிகைச் சாறு; விழுங்கினால் நூறு!





ஆனந்தமாக

நாம் ஆனந்தமாக இருக்கும்பொழுது, நிறைவைப் பற்றிக் கவனம் செலுத்துவதில்லை. அப்படிக் குறை நிறைகளை நாம் கவனிக்கிறோம் என்றால், நாம் ஆனந்தத்தில் முழுமையாக ஆழ்ந்திருப்பதில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

நிறை மறைந்திருக்கிறது; குறை வெளிப்படையாகத் தன்னைக் காட்டிக் கொள்கிறது.

இவ்வுலகம் வெளித் தோற்றத்திற்குக் குறைகளோடு காணப் பட்டாலும், அடிப்படையில் நிறைகளுடனே விளங்குகிறது. ஞானிகள் வெளித் தோற்றத்தில் மனத்தை நிறுத்திக் கொள்ளாது, உள்ளாழ்ந்து, உன்னித்துக் கவனிப்பர். எல்லாம்

செயின்ட் லூயிஸில் ஒருவர் குருஜியிடம் பன்னிரண்டு ரோஜாப் பூக்களைக் கொடுத்த போது, எல்லார் கண்களிலிருந்தும் நீர்த் துளிகள் உருண்டோடின. அவர் பெயர் மைக். அவர் மனைவி விளக்கினார்:

"எங்கள் இருபத்திநான்கு வருட மண வாழ்க்கையில் ஒரு தடவை கூட என் கணவர் மைக் உடம்பு வலி என்று குறை சொன்னதில்லை. எந்த உபாதை வந்தாலும் பொறுத்துக் கொண்டு வேலையைப் பார்க்கப் போய்விடுவார். அப்படிப்பட்டவர் தோளில் வலி என்றதும் கொஞ்சம் சீரியஸ்தான் என்று புரிந்து கொண்டேன்.

குடும்ப டாக்டரைப் பார்த்த போது, நரம்பியல் நிபுணரிடம் போகச் சொன்னார். ஸ்கேன் எடுத்துப் பார்த்தபோது நரம்புகள், தசை எல்லாமே கிழிபட்டிருப்பது தெரிந்தது. எக்ஸ்ரேயில் அறுவைச் சிகிச்சைதான் வழி என்று புரிந்தது.

ஜூன் 13 காலை பத்து மணிக்கு ஆபரேஷன் நிச்சயமாயிற்று.

ஜூன் 12ஆம் தேதி ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சொற்பொழிவும், தியான வகுப்பும் நடைபெறும் என்று அப்போதுதான் ஒரு கடிதம் கைக்கு வந்து சேர்ந்தது. அறுவைச் சிகிச்சைக்கு முன்பு குருஜியுடன் மாலைப் பொழுதைக் கழிக்கத் தீர்மானித்தோம்.

அவர் பேச்சைக் கேட்ட பிறகு அவரிடம் நேரில் சென்று பேசலாம் என்றால், சுமார் முந்நூறு பேர் கொண்ட நீண்ட க்யூ. மைக் வலியால் துடித்துக் கொண்டிருந்தார். ஆனாலும் பொறுமையோடு காத்திருந்தோம்.

முற்றிலும் புதியவரிடம் என்ன பேசுவது? 'நலமா?' என்று கேட்பதா? 'உங்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி' என்பதா? இத்தனை பேர் இருக்கும்போது நம்மைக் கூப்பிட்டுப் பேசுவாரா?

எங்கள் முறை வந்த போது, 'ஹலோ' சொல்லிவிட்டு, மறுநாள் மைக்குக்கு நடக்கப் போகும் அறுவைச் சிகிச்சையைப் பற்றிச் சொல்லிவிட்டு, இருப்பிடத்துக்குத் திரும்பி விட்டோம்.

குருஜி பின்னால் திரும்பி,

தெள்ளத் தெளிவாகவே இருக்கிறது. மெய்யுணர்வு எனப்படும் பூர்ண பிரக்ஞையில் எண்ணிலடங்காத காரியங்கள் நிகழ்கின்றன. அப்படியிருந்தும், மெய்யுணர்வானது முழுமையாக எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் நிறைவாக நிலைத்திருக்கிறது. சத்சங்கத்தில் இருப்பவர்கள் கீதை அறிந்து, தம் ஆத்ம உணர்வில் நிலை பெற்றிருங்கள்.

நமக்கு விவேக ஞானத்திலிருந்து என்றும் விடுமுறை இல்லை என்று உணர்வதே ஆனந்தம் தரும்.

– ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்

இருக்கும்பொழுது...

யாரிடமோ ஒரு ரோஜா மலர் இருக்குமா என்று கேட்டுக் கொண்டிருந்தார். மைக்கைக் கூப்பிட்டு, அந்த ரோஜாவை, இரவு தம் அருகே வைத்துக் கொண்டு படுக்குமாறு கூறினார். "எல்லாம் சரியாகிவிடும்" என்றார்.

வீடு திரும்புகையில் 'ஸ்ரீஸ்ரீ எத்தனை நல்ல சுவாமிஜி' என்று பேசிக் கொண்டோம்.

மறுநாள் மைக்கை மருத்துவமனையில் சேர்த்தோம். ஆபரேஷன் ஒரு மணி நேரம் பிடிக்கும் என்றார் மருத்துவர். இருபது நிமிடங்கள் கழித்து, அவர் என்னை அருகே வருமாறு சைகை செய்தார். அவர் முகம் அதிர்ச்சியைக் காட்டியது. "மைக்கைக் கொன்று விட்டீர்களா?" என்று கேட்டேன்.

டாக்டர் தலையைக் குலுக்கிவிட்டுக் கொண்டு, "என்னால் சரியாக விளக்க முடியவில்லை. மைக்கின் தோள் பட்டையைப் பிரித்த போது, ஸ்கேனில் தெரிந்த மாதிரி தசையோ, நரம்போ அறுபடவே இல்லை! ஸ்கேனை மறுபடி பார்த்துவிட்டேன். அதில் கிழிபட்ட மாதிரி தெரிவது, உண்மையில் இப்போது இல்லவே இல்லை. என் உதவியாளர் தோள் பட்டையை மூடித் தையல் போட்டுக் கொண்டிருக்கிறார்!" என்றார்.

செயின்ட் லூயிஸில் உள்ள ஆர்ட் அஃப் லிவிங் மையத்தில் மார்ட்டினாவைக் கூப்பிட்டுச் செய்தியைச் சொன்னோம்.

உடனே வரச் சொன்னார். அங்கே போனபோது, மைக் ஒரு நாற்காலியில் உட்கார எல்லாரும் உதவினார்கள். ஸ்ரீஸ்ரீ அறைக்குள் நுழையும் போதே எனக்குத் தொண்டையை அடைத்துக் கொண்டு, என்னால் பேசவே முடியவில்லை.

குருஜி மைக்கிடம் இரண்டே இரண்டு கேள்விகள்தான் கேட்டார்: "எல்லாம் சரியாகிவிட்டதா?" மைக் விவரம் சொன்னதும், "எம்.ஆர்.ஐ.ஸ்கேன் என்றால் என்ன?" என்று விசாரித்தார்.

ஒருவர் முன் வந்து ஸ்கேன் பற்றி விளக்கியதும், குருஜி, "ஓ, நான் பார்ப்பதையே படமாக எடுத்துத் தரும் இயந்திரம் கூட இருக்கிறதா, என்ன?" என்று கேட்டார்.

– கேத்தி சாம்பியன்

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்

தொலைந்த காலம்


அந்த மத்திய சிறைச்சாலையின் அகன்ற கதவுகளுக்கு நடுவிலிருந்த சிறிய கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தேன்.

தூரத்து அரசமரத்தடியில், எனக்காகக் காத்துக் கொண்டிருந்த அக்காவைப் பார்த்து கையை ஆட்டினேன். அவள் சிரித்தபடி என்னை நோக்கி வந்தாள்.

என் அருகில் வந்த அக்கா, என் கைகளைப் பிடித்துக் கொண்டு, "போகலாமா?" என்றாள்.

நான் ஒன்றும் பேசாமல் வேட்டியை இறுக்கிக் கட்டியபடி நடந்தேன். செக் போஸ்ட்டைக் கடந்து, அந்த நீண்ட சாலையில் நடந்து, மெயின் ரோட்டிற்கு வந்தபொழுது சந்தோஷமாக இருந்தது.

ரோட்டில் வேகமாக விரையும் வாகனங்கள்... போஸ்டர்களில், சிரிக்கும் விக்ரம், விஜய்... டீக் கடையில் 'தினத்தந்தி' படித்தபடி வேலையற்ற இளைஞர்கள்... கடவுளே... இதையெல்லாம் பார்த்து எத்தனை நாட்களாகிறது. கடைசியாக மூன்று வருடங்களுக்கு முன் கோர்ட்டில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, அம்மா மயங்கி விழ, குடும்பமே கதறி அழ... ஜீப்பில் ஏறி மத்திய சிறைக்கு வந்தபோது பார்த்தது.



பஸ் ஸ்டாப்பிற்கு வந்து நின்றபடி, "அப்பா இப்ப எப்படி இருக்காருக்கா?" என்றேன். எனக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மறு வாரம் பக்கவாதம் வந்து படுத்த படுக்கையானவர் இன்னும் அப்படியேதான் இருக்கிறார்.

"ம்...இருக்காரு. பேப்பர் வெய்ட்.... பேனா ஸ்டாண்ட் மாதிரி. நாம எடுத்து வச்ச இடத்துல அப்படியே இருப்பாரு."

"பேசறாரா?"

"ம்...குழறலா பேசுவாரு. நமக்கு ஒண்ணும் புரியாது. அம்மாவுக்குக் கொஞ்சம் புரியும்."

"அவரோட கனவுகள எல்லாம் ஒரே நாள்ல மிதிச்சு, நசுக்கிட்டேன்... ப்ச்..."

"அத விடு. நடந்தத எல்லாம் மாத்த முடியுமா என்ன?"


"தம்பி நல்லாருக்கானா?"

"ம்...அவனுக்கு இன்னக்கி எக்ஸாம். அதான் வரல."

பஸ் வந்தவுடன், பேச்சை நிறுத்திவிட்டு, ஏறினோம். அவ்வளவாகக் கூட்டமில்லை. அக்காதான் டிக்கெட் எடுத்தாள்.

சற்றுத் தள்ளி முன்னால் நின்று கொண்டிருந்த பெண்ணுக்கு நல்ல களையான முகம். என் நிலை மறந்து, அனிச்சைச் செயலாக உற்றுக் கவனித்தேன். பின்னால் நின்ற அக்கா இதைக் கவனித்துவிட்டு, சிரிப்புடன் பெருவாக,

"இப்பதான்டா எனக்கு சந்தோஷமா இருக்கு. ஜெயில் வாழ்க்கை உன்னோட மென்



அமரர் கல்கி நினைவு
இளமைச் சிறுகதைப்
போட்டியில் 7,500/- ரூபாய்
இரண்டாவது
பரிசு பெறும் சிறுகதை

கதாசிரியர் முப்பத்தைந்து வயதுக்குட்பட்டவர்
என்பதால் கூடுதல் பரிசு ரூ. 500/-

மையான ரசனைகளை எல்லாம் அழிச்சிருக்குமோன்னு நினைச்சுகிட்டிருந்தேன்" என்றாள்.

"போக்கா..." என்று வெட்கத்துடன் சிரித்தேன்.

"இருபத்தேழு வயசுல பாக்கலாம். தப்பில்ல. லதாவுக்குக் கூட கல்யாணம் நிச்சயமாயிடுச்சுடா. போன வாரம் வந்து பத்திரிக்கை கொடுத்துட்டுப் போனா" என்ற அக்காவின் முகம் சோகமானது.

லதா, அக்காவிடம் பாட்டு கிளாசுக்கு வரும் பெண். அப்பொழுது நான் பி.ஏ மூன்றாம் வருடம். அவ்வப்போது திருட்டுத்தனமாகப் பார்த்துக் கொள்வோம். எப்பொழுதாவது தூணைக் கட்டிக் கொண்டு வெட்கத்துடன் பேசுவாள். அக்காவுக்கு இது அரசல் புரசலாகத் தெரியும்.

ஜி.ஆர். சுரேந்தர்நாத்

படித்து முடித்து, வேலை கிடைத்து... ஒரு அழகான மாலையில், அவளின் கல் வைத்த காது ஜிமிக்கிகள் அசைவதைப் பார்த்துக் கொண்டே சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அதற்குள் என்னென்னவோ நடந்து விட்டது.

ம்ஹும்... வெள்ளத்தில் பெருமரங்கள் எல்லாம் அடித்துக் கொண்டு போகும் பொழுது, சிறு பூக்கள் எந்த மூலைக்கு?

அடுத்த ஸ்டாப்பில், இருக்கைகள் காலியாக, நானும், அக்காவும் அருகருகே அமர்ந்தோம்.

"சதீஷ் வீட்டுக்கு வந்துட்டுப் போறானா?"

"ம்... லோக்கல்ல இருந்தா வருவான். மாசத்துக்கு இருபது நாள் டூர்லதான் இருப்பான். இங்க இருக்கறப்ப உன்ன வந்து பாத்துட்டு, வீட்டுக்கும் வருவான். ஆனா எந்த ஊர்ல இருந்தாலும், மாசா மாசம் கரெக்டா ரெண்டாயிரம் ரூபாய்க்கு ட்ராஃப்ட் அனுப்பிச்சிடுவான்."

"பாவம்... இது வேற அவனுக்குச் செலவு!"

"என்ன பாவம்... சாவற வரைக்கும் உனக்கு அவன் கடன்பட்டிருக்கான்" என்றாள் அக்கா.

நண்பனுக்கு உதவி செய்வதை நான் கடனாக நினைத்துச் செய்யவில்லை. கடமை என்றுதான் செய்தேன். அதனால் தானே எனது இளமைக் காலத்தைச் சிறையில் தொலைத்துக் கொண்டிருக்கிறேன்.

நானும், சதீஷும் ஒரே எஞ்சினியரிங் காலேஜில் படித்தோம். ஒரே வகுப்பு.

சதீஷும், பி.ஈ.கம்ப்யூட்டர் சயன்ஸ் படிக்கும் ப்ரியாவும்,

"எனக்கு ரஹ்மான் மியூசிக் பிடிக்கும்."

"எனக்கும் ரஹ்மான் பிடிக்கும்."

"எனக்கு ஜெஃப்ரி ஆர்ச்சர் பிடிக்கும்."

"எனக்கும் ஜெஃப்ரி ஆர்ச்சர் பிடிக்கும்."

"எனக்கு உன்னைப் பிடிச்சிருக்கு."

"எனக்கும் உன்னைப் பிடிச்சிருக்கு"

என்று காதலிக்க ஆரம்பித்தனர்.

நாங்கள் கடைசி வருஷப் பரீட்சையை முடித்து, எதிர்காலக் கனவுகளில் மூழ்கிக் கிடந்த விடுமுறைக் காலத்தில்தான், அந்த மாபெரும் விபத்து நிகழ்ந்தது.

ப்ரியாவின் வீட்டுக்கு அவர்களின் காதல் விஷயம் தெரிய வந்தது. ஒரே எதிர்ப்பு. ஜாதி, அந்தஸ்து குறுக்கீடுகள்.

ப்ரியாவும், சதீஷும் பதிவுத் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தனர்.

நாங்கள் நண்பர்கள் ஐந்து பேர் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து முடித்தோம்.

நண்பன் ஒருவன் காரோடு, பெங்களூர் புறப்படத் தயாராக, ரிஜிஸ்ட்ரார் அலுவலக வாசலில் காத்திருக்க... நாங்கள் திருமணத்தை முடித்துக் கொண்டு, அலுவலக வளாகத்தை விட்டு வெளியே வர, சரேலென்று அந்த டாடா சுமோ ஜீப் எங்கள் முன்னால் வந்து நின்றது. வேக வேகமாகக் கதவைத் திறந்து கொண்டு ஆட்கள் இறங்கினர். கூடவே ப்ரியாவின் அப்பாவும், அண்ணனும்.

எனக்கு விஷயம் புரிய, வேகமாகச் செயல்பட்டேன். "நீங்க அவங்கள தடுங்கடா." என்று நண்பர்களிடம் கூறிவிட்டு, "ப்ரியா...சதீஷ்... சீக்கிரம்..." என்று ப்ரியாவின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு காரை நோக்கி ஓடினேன்.

"நன்றி கெட்ட நாயே..!" என்று ப்ரியாவின் அப்பா எங்களை நோக்கி செருப்பை விட்டெறிந்தார். சதீஷையும், ப்ரியாவையும் அவசரமாகக் காரில் திணித்தேன். பின்னாலேயே ஓடி வந்த ப்ரியாவின் அண்ணனை இறுகப் பிடித்துக் கொண்டு, "பாபு... காரை எடு. நிக்காம போயிகிட்டே இரு" என்று டிரைவர் சீட்டிலிருந்த நண்பன் பாபுவிடம் கூற, அவன் அதிவேகமாகக் காரை சீறவிட்டுப் பறந்தான்.

ப்ரியாவின் அண்ணன் ஜீப்பில் ஏறி அவர்களைத் துரத்த முற்பட்டான். அவனைப் பிடித்து இழுத்துப் போட்டேன். அதற்குப் பிறகு ஆள் நடமாற்றம் அதிகமில்லாத, அந்த சாலையில் மூன்று நிமிடம் உக்கிரமான சண்டை. இரு தரப்பிலும் அடி...ரத்தம்...

எங்கிருந்துதான் அவ்வளவு ஆவேசம் வந்ததோ? வேகமாக எழுந்து, தாவி ப்ரியாவின் அண்ணனைப் பிடித்து, வீழ்த்தினேன். அவன் மீண்டும் எழுவதைத் தடுக்கும் உத்வேகத்துடன், அருகில் கிடந்த பெரிய கருங்கல்லை ஏதோ ஒரு வெறியில் தூக்கி, கொஞ்சமும் தயக்கமின்றி ஓங்கி அவன் தலையில் அடிக்க... அவன் "அம்மா..." என்ற அலறலுடன் செயலிழக்க...

பல ஆயிரம் முறை அந்த சபிக்கப்பட்ட நிமிடங்களை நினைத்துப் பார்த்திருக்கிறேன். ஏன் அப்படிச் செய்தேன்? நண்பனுக்கு உதவும் எண்ணம் மட்டும்தானா? இல்லை காலம் காலமாக, ஜாதி... அந்தஸ்தைக் காரணம் காட்டி, காதலைப் பிரிக்கும் இந்த சமூகத்தின் மீதான கோபத்தின் வெளிப்பாடா? இல்லை, பின் விளைவுகளைப் பற்றி யோசிக்காத இளம் வயதின் வெற்று ஆவேசமா? தெரியவில்லை.

"நம்ப ராஜாவுக்கு மகாராணியைக் கண்டாலே ரொம்ப பயம் போல..."

"எப்படி கண்டுபிடிச்சே?"


"அந்தப்புரம் போகும்போது கூட மெய்க்காவலர் பின்னோடு வரணும்ங்கிறாரே!"

— சுதா

பிறகு சம்பவங்கள் வேகமாக நடந்தன. போலீஸ்... கைது... கொலை வழக்கு. விஷயம் தெரிந்து, ஒரு வாரம் கழித்து சதீஷும், ப்ரியாவும் வந்தனர். ப்ரியாவின் அப்பா, தனது மகளும் இறந்து விட்டதாகக் கூறி, மகனோடு சேர்த்து அவளுக்கும் தெப்பக்குளத்தில் கருமாதி செய்தார். சதீஷின் வீட்டிலும் அவர்களைச் சேர்க்கவில்லை.

தனியாக வீடு பார்த்து தங்கிக் கொண்ட சதீஷ், என் குடும்பத்தினரோடு சேர்ந்து வக்கீல், ஜெயில்... என்று அலைந்தான்.

எங்கள் இன்ஜினியரிங் தேர்வு முடிவுகள் வர... நாங்கள் ஃபர்ஸ்ட் கிளாஸில் பாஸ் செய்திருந்தோம். நான் தகவல் அறிந்து சிரித்துக் கொண்டேன். சதீஷுக்கு ஒரு தனியார் பாய்லர் கம்பெனியில் மெயின்டனென்ஸ் இஞ்சினியர் வேலை கிடைத்தது. கம்பெனி பாய்லர்களை நிறுவுவதற்காக, மாதத்தில் பல நாட்கள் வட இந்தியாவில் சுற்றும் வேலைதான். இருப்பினும் குடியிருப்பு வசதியோடு, நல்ல சம்பளத்தில் வேலை. மேலும் புதிய வாழ்க்கையைத் துவக்கவேண்டும். எனது குடும்பத்திற்கும் உதவவேண்டுமென்று அந்தப் பணியில் சேர்ந்தான். அவர்களின் சந்தோஷமான மண வாழ்க்கைக்குச் சாட்சியாக பெண் குழந்தை பிறந்தது. என் நினைவாக 'பாலா' என்று பெயரிட்டான். ஒரு முறை ஜெயிலுக்கு அழைத்து வந்து குழந்தையைக் காண்பித்தான்.



இடையில், நான் குற்றத்தை ஒப்புக் கொள்ள... கீழ்க்கோர்ட்டில் வழக்கு விரைவாக நடந்து, எனக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. ஹை - கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

“ஒரு நிமிஷ ஆவேசம். உன் வாழ்க்கையே வீணாப் போயிடுச்சு பாத்தியா?”

“நான் ஒண்ணும் அப்படி நினைக்கலைக்கா. ஆவேசம் தப்புதான். ஆனால், சதீஷ் கல்யாணம் பண்ணிக்கிட்டு, சந்தோஷமா வாழ்ந்துகிட்டிருக்கான் இல்லையா? அதனால், என் வாழ்க்கை வீணாப் போனதாகத் தோணலைக்கா'' என்றபடி வீட்டைச் சமீபித்தேன்.

எனக்கு மனசு படபடவென்று அடித்துக் கொண்டது. அம்மா வாசலிலேயே உட்கார்ந்திருந்தாள்.

“நல்லாருக்கியா பாலு?” என்றாள் கண் கலங்க.

படுக்கையில் அப்பா. அப்பாவின் அந்த கம்பீரமான சிரித்த முகம் காணாமல் போய், வலது பக்கக் கன்னமும், தாடையும் கோணிக் கொண்டிருந்தது. பொங்கி வந்த அழுகையை, எச்சிலை விழுங்கி அடக்கினேன். “என்னங்க... பாலு வந்திருக்கான்” என்று கண்களை மூடிக் கொண்டிருந்த அப்பாவின் இடது காதில், சத்தமாகக் கத்தினாள் அம்மா.

கண்களைத் திறந்து என்னைப் பார்த்த அப்பாவின் கை, கால்கள் இலேசாக அசைந்தன. கண்ணீர் வழிய, குழறலாக ஏதோ சொன்னார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அழுதபடி, முகத்தை மூடிக் கொண்டு, அறையை விட்டு ஓடி வந்தேன்.

என் பின்னாலேயே வந்த அக்காவின் தோளில் சாய்ந்து கொண்டு கதறி அழுதேன்.

“ஏய்... என்னது... சின்னப் பிள்ளையாட்டம்” என்று என் கண்களைத் துடைத்தாள் அக்கா.

“பாக்கக் கண்றாவியா இருக்குக்கா. எப்படி இருந்த மனுஷன்... என்னாலதான்...”

என்னைக் குறித்து மிகப் பெரிய கனவுகள் அப்பாவுக்கு இருந்தன. தன் சக்திக்குமீறி, ரிட்டயர்மெண்ட் பணத்தையெல்லாம் அக்காவுக்குக் கூட திருமணம் செய்து வைக்காமல், என் படிப்புக்காகச் செலவழித்தார். நான் படிப்பை முடித்துவிட்டு, குடும்பத்தைத் தூக்கி நிறுத்துவேன் என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தார்.

பார்த்துப் பார்த்து போட்ட கோலம், ஒரு நிமிட மழையில் அழிவது போல், எல்லாம் கலைந்து போயிற்று.

ஞாயிற்றுக்கிழமை. காலையில் சீக்கிரமே எழுந்து, பஸ் பிடித்து, சதீஷ் வேலை செய்யும் ஊருக்குச் சென்று விட்டேன். நான் சென்ற பொழுது சதீஷ் தன் குவார்ட்டர்ஸ் வாசலில் அமர்ந்து பேப்பர் படித்துக் கொண்டிருந்தான்.

என்னைப் பார்த்தவுடன் ஓடி வந்து,

“பாலு...” என்று கட்டிப்பிடித்துக் கொண்டான்.

“எப்படா வந்த பரோல்ல?” என்றான்.

“போன வாரம். நாளைக்கு மறுபடியும் போகணும்.”

“அடக்கடவுளே... இந்தச் சமயம் பார்த்து



வீட்டுக்கு ஒரு மலர்!

● 'வாழ்க நலமுடன்' மருத்துவ மலர் ஒவ்வொரு இல்லத்திற்கும் வழிகாட்டி நூல்.
கோவை - 22, வ.கே. ராமன்

● பக்கத்துக்குப் பக்கம் பயனுள்ள தொகுப்புகள். படிப்பதற்குச் சுகமாக இருந்தது. கதை, கட்டுரைகள், கவிதைகள் அற்புத விருந்து. பாதுகாக்க வேண்டிய பயனுள்ள மலர்.
தூத்துக்குடி - 4, ஏ.எஸ். காந்தி

● தங்களின் மருத்துவ மலர் கண்டேன். பிரமித்துப் போனேன். தெளிவான விளக்கங்களுடனான கட்டுரைகள் அருமை. ஒவ்வொரு வீட்டுக்கும் இந்த மலர் வேண்டும்.
கூந்தலூர், ஜி. ஜெயராமன்

● 'கல்கி மருத்துவ மலர்' ஆக்கபூர்வமான உடல் நல கையேடாக விளங்குகிறது. பாராட்டு!
பொள்ளாச்சி, க. அம்சப்ரியா

நான் ஊர்ல இல்லாமப் போய்ட்டேனே... நாக்பூர் போயிருந்தேன். நேத்து நைட்தான் வந்தேன். பேப்பர் படிச்சுட்டு, உங்க வீட்டுக்கு ஃபோன் பண்ணலாம்னு நினைச்சுகிட்டிருந்தேன்'' என்றான் வாசலைப் பார்த்துக் கொண்டே.

"ப்ரியா வீட்டுல இல்ல...?" என்று நான் கேட்டதும் சதீஷின் முகம் மாறியது.

"அவங்கம்மா வீடு வரைக்கும் போயிருக்கா" என்றான்.

"இப்ப ராசி ஆயாச்சா? ஒரு குழந்தை பிறந்தா போதும். மனசு மாறிடுவாங்க. என்ன, வாசலையே பாத்துகிட்டிருக்க... யாராச்சும் வரணுமா?"

"இல்ல... நீ டிஃபன் சாப்டுட்டியா?"

"இல்ல. காலைல எழுந்திரிச்சவுடனே வந்துட்டேன்."

"சரி வா.. போய் டிஃபன் சாப்டுட்டு வந்துடலாம்" என்று சதீஷ் கூறிக் கொண்டிருக்கும் பொழுதே, வாசலில் ஒரு கார் வந்து நிற்க, சதீஷ் தவிப்புடன் எழுந்து நின்றான்.

கார் டிரைவர் கையில் ஒரு குழந்தையோடு எங்களை நோக்கி வர... அந்தக் குழந்தை டிரைவரிடமிருந்து இறங்கி, "டாடி..." என்று சதீஷை நோக்கி ஓடி வந்தது. சதீஷ் உற்சாகமின்றி குழந்தையைத் தூக்கிக் கொண்டான்.

"இதுதான் பாலாவா?" என்றேன் ஆர்வத்துடன்.

எங்களருகில் வந்த டிரைவர், "சார்... போன தடவை மாதிரி லேட் பண்ணக் கூடாதாம். கரெக்டா ஆறு மணிக்குக் கொண்டு வந்து விட்டுரணுமாம். இல்லன்னா கோர்ட்ல கம்ப்ளைண்ட் பண்ணுவாங்களாம்'' என்று கூறிவிட்டு நகர, நான் அதிர்ச்சியுடன் சதீஷைப் பார்த்தேன்.

சதீஷ் தன் குழந்தையை இறுக்கமாக அணைத்துக் கொண்டு, "உனக்குத் தெரிஞ்சுகூடாதுன்னு உங்க வீட்டுல கூட யாருகிட்டயும் சொல்லாம மறைச்சு வச்சிருந்தேன். நான் மிடில் கிளாஸ் பேக் கிரவுண்ட்ல வளர்ந்தவன். அவ ஹை சொசைட்டி. ஆரம்ப கால மோகத்துக்குப் பிறகு மோதல் ஆரம்பிச்சிடுச்சு. அவளோட ஆடம்பர ஆசைகளை என்னால் நிறைவேத்த முடியல. நானூறு ரூபாய்க்கு நெயில் பாலீஷ் இருக்குங்கற விஷயமெல்லாம் கல்யாணத்துக்குப் பிறகுதான் எனக்குப் தெரியும் பாலு... வாக்குவாதங்கள்.... சண்டை..... கண்ணீர்... குழந்தை பிறந்த பிறகு அவங்க வீட்டோட ராசியாயிட்டா. அவங்ககிட்ட அவ பணம் வாங்குறது எனக்குப் பிடிக்கல. மோதல் அதிகமாகி... அஞ்சு மாசத்துக்கு முன்னாடி இரண்டு பேரும் பிரிஞ்சிட்டோம். சீக்கிரம் விவாகரத்து கிடைச்சிடும். இன்டெரிம் ஆர்டரா சண்டேஸ்ல மட்டும் நான் குழந்தையைப் பாக்கலாம்னு கோர்ட்ல சொல்லியிருக்காங்க..."என்றான்.

நான் "கடவுளே..!" என்று வேதனையுடன் முகத்தைப் பொத்திக் கொண்டேன்.

மேற்கொண்டு சதீஷ் சொன்ன வார்த்தைகள் எதுவும் காதில் விழவில்லை.

வயசுக்கோளாறு மயக்கத்திற்காக, என் இளமை காலத்தைத் தொலைத்த வேதனை, சாகும்வரை மனத்தில் வலித்துக் கொண்டேயிருக்கும். ○

பா.சத்தியமோகன்




ஏற்கப்படாமல் உணரப்படாமல்
திருப்பித் தரப்படும் அன்பு
வலி மிகுந்தது

ஏற்கப்படா அன்பை அடுத்தபடி
எதில் பொருத்துவேன் என
துடிக்கிறது அவ்வலி

ஒரு நாய்க்குட்டி கிடைத்தாலும்
தென்றல் கிடைத்தாலும்
பூ கிடைத்தாலும் புல் கிடைத்தாலும்
செலவழிக்க வேண்டியதே அன்பு.

ஏற்காமல் உணராமல்
காட்டப்பட்ட அன்பை
உதறும் மனிதர்கள்மீது
மீண்டும் போர்த்து உன் அன்பை
தினமும் உலகின் இருளைத் தழுவும்
தெய்வீகக் காலையைப் போல.

ஏற்கப்படாத அன்பு





ஆத்தங்கரை பெத்தாங்!

• இரும்புக் குண்டை உருட்டி .... அட, பாயிண்ட்!



அரியாங்குப்பம் சுண்ணாம்பாற்றுக் கரையில் பெரிய சைஸ் இரும்பு கோலிகளை உருட்டி விளையாடிக் கொண்டிருந்தார்கள் அறுபது வயது இளைஞர்கள். அட! விளையாட்டு புதுசா இருக்கே! என்று விசாரித்தால், கிட்டத்தட்ட நம்ம ஊர் கோலிக் குண்டு மாதிரிதான், ஆனால் கொஞ்சம் பிரெஞ்சு டச் இருக்கிறது.

''பெத்தாங்குன்னு பேரு. சின்னதாக புன்னை மரக்கொட்டை இருக்கும். அதை முதல்லே உருட்டி விடுவோம். அப்புறம் ஒவ்வொரு டீமும் அந்தக் கொட்டை பக்கத்துலே இரும்புக்குண்டை உருட்டி விடணும். யாரு ரொம்ப நெருக்கமா உருட்டி விடுறாங்களோ, அந்த குண்டை எதிரணி குறிவைச்சு அடிச்சிட்டா, பாயிண்ட்'' என்று விளக்கம் கிடைத்தது.

சர்தாங்!

சோ எழுதிய வால்மீகி ராமாயணம்

மஹாபாரதம் பேசுகிறது

அல்லயன்ஸ் நூற்றாண்டு சிறப்பு வெளியீடுகள் **100** தலைப்புகளில் **100**
என். ஸ்ரீநிவாஸன் எழுதியது புத்தகங்கள்!

முதன்முறையாகத் தமிழில் வெளிவரும்

என்சைக்ளோபீடியா

1. நம்மவர் செய்த விந்தைகள் 100
2. அவர்கள் செய்த விந்தைகள் 100
3. உலக மகா கொடுங்கோலர்கள் 100
4. உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவுகள் 100
5. விந்தை உயிரினங்கள் 100
6. அரண்மனை ரகசியங்கள் 100
7. உலகப் புகழ் பெற்ற கட்டடங்கள் 100
8. நம்ப முடியாத உண்மைகள் 100
9. வியப்பூட்டும் உண்மைகள் 100
10. தாவர உலகிலே! 100
11. விந்தைத் தாவரங்களும் மூலிகைத் தாவரங்களும் 100
12. யார் என்ன சொன்னார்கள்? 100
13. நீருலகிலே! 100
14. பாலூட்டிகள் வரிசையிலே! 100
15. தமிழ் வளர்த்த பெருமக்கள் 100

தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ.100/-

Dr. சுப்ரமண்ய ஸ்வாமி

எழுதிய

ராஜீவ் காந்தி கொலை

விடை கிடைக்காத
வினாக்களும் கேட்கப்படாத
கேள்விகளும்
(தமிழாக்கம் - சுதாங்கன்)

பரபரப்பான அரசியல்வாதியின்
பரபரப்பான புத்தகம்

விலை ரூ. 125/-

25000க்கும் மேற்பட்ட பழமொழிகளைக் கொண்டது 'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் தொகுத்த

தமிழ்ப் பழமொழிகள் (4 தொகுதிகள்) ரூ. 300/-

காஞ்சீ மஹா ஸ்வாமிகள் ஸ்ரீ சந்திர சேகரேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் திரு அவதாரத்தில் தொடங்கி - திரு அவதாரம் நிறைவு வரை - ஓவியர் சில்பியின் ஏராளமான படங்கள் - புகைப்படங்களுடன் - இரண்டு தொகுதிகள் - (ஸ்ரீ சாம்பமூர்த்தி ஸாஸ்த்ரிகள், குப்புஸ்வாமி ஐயர், பி.என். பரசுராமன் எழுதியது)

பூஜ்யஸ்ரீ மஹா ஸ்வாமிகள் வரலாறு (ரூ.500/-)

'சொல்லின் செல்வன்' பி.என். பரசுராமன் எழுதிய நூல்கள்

விதுர நீதி	ரூ. 30/-	சனத்குமாரரின் உபதேசங்கள்	ரூ. 25/-
நீதி சதகம்	ரூ. 21/	பீஷ்மர் சொன்ன தத்துவக் கதைகள்	ரூ. 60/-
விபூதி ருத்ராட்சம் மகிமை	ரூ. 37/-	வைராக்கிய சதகம்	ரூ. 16/-
சித்தர்கள் சரித்திரம்	ரூ. 35/-	யட்சப் பிரச்னம் ப்ரச்னோத்ர ரத்னமாலிகா	ரூ. 25/-
துணுக் துணுக்	ரூ. 21/-	சித்ரகுப்தன் கதைகள்	ரூ. 18/-
அஷ்டாவக்ரர் உபதேசங்கள்	ரூ. 33/-	வாரியார் சொற்பொழிவில் கேட்டவை	ரூ. 60/-
மஹரிஷிகள் வரலாறு A.V. சுகவனேஸ்வரன்	ரூ. 65/-	An Introduction to the Vedas (Ka.Sri.Sri)	ரூ. 60/-

அல்லயன்ஸ் கம்பெனி

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)
244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலாப்பூர்
சென்னை - 6000 004. ✆ 24941314

நாணல் மனம்


காற்று முடியைச் சிலுப்பியது. லாரியின் தடுப்பைப் பிடித்து நின்றிருந்தான் மாசிலான். கரடு முரடான மண் பாதையில் செல்வது போலக் குலுங்கியது லாரி. பீடித் தொழிலாளர்களை ஏற்றிக் கொண்டு நான்கு லாரிகள் வேலூருக்குப் போய்க் கொண்டிருந்தன. போராட்டமோ, போகும் இடமோ அவன் மனத்தில் இல்லை. கண்மணியின் வதங்கிச் சுருண்ட முகம், தூக்கத்தைத் தேக்கிய கண்களோடு அவள் கையசைத்து நின்றது. இவைதான் மறுபடியும் மறுபடியும் நினைவில் வருகின்றது.

அவன் மனத்தில் அலைகள் சுழித்தன. அப்பன் சின்ன வயசிலேயே சொல்லிக் கொண்டுதானிருந்தான், அவனை படிக்கச் சொல்லி. தச்சு வேலை கற்றுக் கொள்ளவும் ஒரு வாய்ப்பு வந்தது. எதிலும் மனம் ஒட்டவில்லை. பீடித் தொழிலோ ஊரே செய்கிற தொழில். வெளியில் சுற்றாமல் வீட்டிலேயே செய்யலாம். அவன் பீடி வேலையைக் கற்றுக் கொண்டான்.

போகப் போக அந்த வேலையின் சிரமங்கள் புரியத் தொடங்கின. புகையிலை நெடி இருமலை வரவழைக்கிறது. சில நேரங்களில் அது காசமோ, ஆஸ்துமாவோ கொண்டு வரும். ஒரே இடத்தில் உட்கார்ந்து உடம்பு கூம்பிப் போவது போல இருக்கிறது. முரட்டு வேலைகளுக்குப் பழக்கப்படாத கைகள் சின்ன வேலை என்றாலும் சலிக்கின்றன. ஓய்வே இல்லாமல் இலை நனைப்பு, இலை வெட்டு, பீடிசுற்றல், மூடுதல், கட்டுதல் என்று முழு நாளும் வேலை.

மாசிலானுக்குச் சில நேரங்களில் வேலை செய்யவே வெறுப்பு வரும். இப்போது நினைத்து என்ன செய்ய என்றிருந்துவிடுவான். காய்ந்த இலைகளில் உடைசல் இருந்தாலோ, பூஞ்சை பிடித்திருந்தாலோ பாதி கழிந்துவிடும். ஒரு கிலோ இலைக்கு ஓராயிரம் பீடி கேட்கிறார்கள் முதலாளிகள். அவ்வளவு எங்கே உருவாகிறது? சுற்றும் போது வீணாகும் புகையிலை கணக்கில்தான் ஏறும்.

வாரம் ஒரு முறை கூலி கிடைக்கும் என்றாலும், இலை வெட்டியவர்களும், பீடி வாய் மூடியவர்களும் மாசிலானிடமிருந்து கூலியைப் பெற காத்துக் கொண்டிருப்பார்கள். எல்லாருக்கும் போக அவனிடம் மிஞ்சுவது ஏமாற்றமாகவே இருக்கும். மழைக் காலம் என்றாலோ, பீடி காயாது என்பதால்



மந்தமான வேலைதான்.

கண்மணி, அவள் வீட்டில்தான் இலைகளோடு இருந்தாள் என்றால், மாசிலானுடன் வந்த பிறகும் அப்படியே ஆகிவிட்டாள். வைராக்கியத்துடன் அவளை கூட்டிக் கொண்டு வந்தாயிற்று. ஆனால் அவளுக்கு விருப்பமான எதையும் வாங்கித் தர முடியவில்லை. ஒரு சினிமாவுக்குக் கூட பக்கத்து ஊர்களுக்கு அழைத்துக் கொண்டு போக முடியாதிருந்தது. கண்மணியை நினைக்க பரிதாபமாகத் தோன்றியது. எத்தனையோ பேர் அவள் வயசொத்த வாலிபர்கள் அவளைச் சுற்றினார்கள் என்பது மாசிலானுக்குத் தெரியும். அவள் மீது ஒருதலைக் காதலுடன் இருந்த ஒருவன் விஷம் குடித்துச் சாகவும் முயற்சி செய்தான். அவளைச் செழிப்பாக வைத்துக் கொள்ள முடியவில்லையே என்ற ஏக்கம், குற்ற உணர்வாகவே அவனுள் மாறியது.


லாரியின் குலுக்கல்களில் நினைவுக்கு மீண்டான் மாசிலான். லாரிகள் ஓடும் சப்தம் பெரும் உறுமலுடன் கேட்டது. வாகனங்கள் எர்த்தாங்கல்லைத் தாண்டி விட்டிருந்தன. இன்னும் கொஞ்ச நேரத்தில் குடியேற்றம் வந்துவிடும்.

"என்னாடா மாசிலான், உம்முனு கீற? ஊட்டு நெனப்பா?'' சேகர் அவனிடம் கேட்டு, கரிப்பற்களுடன் சிரித்தான்.

"ஸ்டிரைக்கு முடிவுக்கு வந்துடுமாண்ணே?"

"யாருக்குடா தெரியும்?"

மாசிலான் வானத்தை வெறித்தான். மேகக் கூட்டம் சேம்பள்ளி மலை மீது ஊர்ந்து கொண்டிருந்தது. பெரும் பனிப் பாறைகளைப் போன்றிருந்தன அவை. லாரி திடீரெனக் குலுங்கியது. ஒலிப்பான்களின் சத்தம் இரைச்சலாய்க் கேட்டது. வெடிச் சத்தம் போல ஏதோ அருகில் கேட்டது. என்ன நடக்கிறது என்று அவன் நிதானிப்பதற்குள், லாரி ஏரிக்கரைப் புளிய மரத்தின் மேல் மோதிச் சரிந்தது. எல்லாரும் தடுமாறி விழுந்தார்கள். மண்ணில் உடல் பட்டதும் பெரும் மூட்டைகள் போல ஆட்கள் தன்மேல் விழுந்து புரண்டதையும், மரண ஓலத்தையும் கடைசியாய்க் கேட்டான் மாசிலான்.



4

கண்மணியின் அழுகை மாசிலானை எழுப்பிவிட்டது. சிறுநீரின் கவிச்சியும், மருந்து நெடியும் அங்கு காற்றில் வீசின. சுற்றிலும் முனகல்களும், பேச்சொலியும் என சன நடமாட்டத்தின் இரைச்சல். கண்மணியையும், உறவினர்களையும், பெற்றவர்களையும் பார்த்ததும், எழ முயன்றான். கண்களில் குளம் போல நீர் தேங்கி வழிந்தது. முழங்கை வரைக்கும்

அழகிய பெரியவன்

எடுத்து விட்டிருக்கிற தனது வலது கையைப் பார்த்தான். வெள்ளை காயத் துணியையும் மீறி இரத்தம் கசிந்து இறுகி விட்டிருந்தது. உடல் காயம் போன்று வலித்தது.

அவன் கையைப் பற்றிக் கொண்டு பொங்கினாள் கண்மணி. முந்தானையால் இறுகப் பொத்தியிருந்தும், அழுகை மட்டுப் படாமல் பீறிட்டது. அம்மா மார்பில் அடித்துக் கொண்டு அழுதாள். பேச்சு வராமல் கேவினான் மாசிலான். அதிர்ச்சியில் நிலை குலைந்து மகளின் பக்கத்தில் நின்றார்கள் அவன் மாமனும் மாமியும். எல்லாரும் தலை ஒரு வேடமும் துணியொரு வேடமுமாக, போட்டது போட்டபடி ஓடி வந்திருந்தனர். மாசிலான் இருந்த லாரி, எதிரில் வந்த பேருந்துக்கு வழிவிட்டு ஒதுங்கியதில், நிலை தடுமாறி புளியமரத்தின் மேல் மோதியிருந்தது. மூன்று பேர் நசுங்கிச் செத்து விட்டதாகவும், சிலருக்கு மாசிலானுக்கு ஆனதைப் போலவே கைகால்கள் போய்விட்டன என்றும் சொன்னார்கள். அவனின் அம்மாவுடைய அழுகை அதிகமானதும் நர்ஸ் வந்து அதட்டினாள். எல்லாரும் வெளியே போனார்கள். கண்மணி, படுக்கை அருகிலேயே உட்கார்ந்து கொண்டாள். மாசிலானுக்கு இன்னும் அழுகை அடங்கவில்லை. வழியெல்லாம் அழுது தீர்த்திருந்தாள் போலிருந்தது. அவள் கண்கள் சிவந்து கிடந்தன. முகம் வீங்கியிருந்தது.

கண்மணி எழுந்து புடைவையால் அவன் கண்களை ஒற்றித் துடைத்தாள். அவள் முகம் அவனுக்கு அருகில் வந்ததும் அவனுக்குப் பழக்கமான அவளின் வாசம் எழுந்து நெஞ்சையடைத்தது. இன்னொரு பாட்டம் பெய்யக் கிளம்பும் மழைபோல, கண்ணீர் நெஞ்சுக்குள்ளிருந்து மேலேறிக் கொண்டு வந்தது அவனுக்கு.

"ஏம்மே! இனிமே நான் எப்படி உன்னக காப்பாத்..."

சட்டென்று அவன் வாயை உள்ளங்கையால் இறுக மூடினாள் கண்மணி. அவன் முகத்துக்கு அருகில் இன்னும் குனிந்து சொன்னாள்.

"நீ பொளச்சி வந்ததே எனக்குப் போதும்யா. உன்ன நான் பாத்துக்குவேன்."

அவனின் வலது தோளை ஆறுதலாய் அழுத்திக் கொண்டு கண்கள் கலங்கச் சொன்னாள் கண்மணி.

(முற்றும்)



அமரர் கல்கி நினைவு இளமைச் சிறுகதைப் போட்டியில் பிரசுரத்துக்குத் தேர்வான கதைகள்

தலைவனுக்காக
– படுதலம் சுகுமாரன்

ஃப்ரெண்டு வீடு
– தரணி (அறிமுக எழுத்தாளர்)

சுகமாக முடியும் கதைகள்
– எஸ். குமார்

பூர்வீக வீடு
– வி.ஜி.செல்வகுமார்

ஏக்கம்
– ஆனந்த் ராகவ்

கனவுகளைக் கலைக்காதீர்கள்
– ஃபெமினா

விதை புதிது
– ஐஷ்வர்யன்

பின்விளைவுகள்
– திருவரங்கம் இசைப் பித்தன்

தந்தையானவன்
– வடுவூர் சிவ. முரளி

நீ நீயாகவே
– ஐஷ்வர்யன்

புக் பேங்க்

திருவேங்கடப்பாவை -
கோவி. மணிசேகரன்

மரபுக் கவிதைகளில் எட்டடித்தரவு கொச்சகக் கலிப்பாவில் கவி புனைவது அத்தனை எளிதல்ல. வாசிக்க எளிமையாகத் தெரிந்தாலும் அதன் இலக்கண உள் வயணங்கள் கடினமானவை. அப்படிப் புனையப்பட்ட, 'நெடுவரையின் உச்சி மேலாய்' என்று திருமங்கை மன்னன் பாடிப் பரவிய, வேங்கடவனைப் பாடும் பாவையிது. பக்தி இலக்கியத்தின் மகுடத்தில் மற்றுமோர் மயிலிறகு.

வேங்கடேஸ்வரம், 12, 4வது தெரு, மதுரவாயல், சென்னை - 102.

தமாஷா வரிகள் - ஜே.எஸ்.ராகவன்

எழுத்தில் அரிதான, ஆனால் 'ரிச்'சான சுவை 'நகை'ச்சுவைதான். தமிழ் நாட்டில் தண்ணீருக்கு அடுத்தபடியாக எழுத்தில் பஞ்சமிருப்பதும் இதற்குத்தான். அந்தப் பஞ்சத்தைத் தீர்த்து வைக்கிற விதமாக 'கலகலவென, கண்ணில் நீர் வர'ச் சிரிக்கும் விதமாய், வரி போட்டு எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு.

அல்லயன்ஸ், 244, ராமகிருஷ்ணா மடம் சாலை, மயிலை, சென்னை - 4. விலை ரூ.50/-



தவளையின் பிரார்த்தனை - 2 பாகங்கள் - (அந்தோணி டி மெல்லோ) தமிழில் - பாரி காண்டீபன்

மதங்கள், கடவுள், துறவு, வழிபாடு. எல்லாம் வாழ்வின் உண்மைகளோடு எத்தனை தூரம் ஒத்துப் போகும் என்பதைப் புரிய வைக்கும் சின்னச் சின்ன கதைகள். மத நூல்களிலிருந்து நிதர்சன உலகிற்கு இறக்குமதி செய்து உருமாற்றம் செய்யப்பட்டவை.

கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை - 17 விலை 150/-

கறுப்புச் சூரியனும் சிவப்பு நிலாக்களும் - சோம.இராசேந்திரன்

மென்மையும் வன்மையும் போட்ட முடிச்சு. மெல்லிய தென்றலாய்த் துவங்கி போகப் போக சூறாவளியாய் முகத்தில் அறைந்து நியாயம் கேட்கும் கவிதைகள். பார் அதிரப் பாடிய பாரதி தூவிய விதைகள், மழை மண்ணை நனைத்தால் துளித்தெழும் என்று நிரூபிக்கும் கவிதைகளின் தொகுப்பு.

சாரல், 189, அபிபுல்லா சாலை, தி.நகர், சென்னை - 17. விலை ரூ.35/-

இஸ்லாத்தில் தீவிரவாதமா? - எஸ்.செய்யது முஹயித்தின் சாஹிபு

அன்பையும், அருளையும், கருணையையும் மட்டும் கூறவில்லை இறைவன். மத மாற்றத்தையும், மத வெறியையும், தீவிரவாதத்தையும் அறவே கூடாது என்றும், அவற்றை நினைப்பவன் உண்மையான முஸ்லிமே அல்ல என்றும் திட்டமாகக் கூறுகிறான். இஸ்லாத்தைப் பற்றி தவறான எண்ணங்களைப் போக்க, 'மற்றவர்' வாசிக்க வேண்டிய நூல்.


சின்ன ஹாஜியார் பப்ளிகேஷன்ஸ், 4/1, ஜே. ஹாஜி தெரு, நாகூர். விலை ரூ.12

தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் திருக்குறள் விளக்கம் - கவிஞர் மணிவேலன்

பாத்திரப் படைப்பைக் கூறும் தொல் காப்பியமும், நெறிகளைக் கூறும் குறளும் இணைந்து வாழ்வியலைக் கூறும் நூல். மேலோட்டமாக வெறும் இலக்கண நூலாகத் தெரிந்தாலும், ஆழ்ந்து வாசித்தால் வாழ்க்கை முறைகளின் வகைகளைக் கூறும் இலக்கியம் என்பது புரியும்.

கண்ணம்மாள் பதிப்பகம், 11, தமிழ் நகர் 2ம் தெரு, தஞ்சை. விலை ரூ.75/-

- விஷ்வக்





சந்தோஷம்

இரண்டாவது படமும்
செம ஹிட் ஆனதுதான்!
சைலண்டா
மனசுக்குள்ளேயே
கொண்டாடிக்கிட்டேன்.

நடிப்பு

'துள்ளுவதோ இளமை'யிலும்
சரி, 'காதல் கொண்டேன்'
படத்திலும் சரி, நான் நடிக்
கவே இல்லை. டைரக்டர்
என்ன சொல்லிக் கொடுத்தாரோ
அதைத்தான் பண்ணினேன்
ஐயாம் எ டைரக்ட்ரஸ்
சைல்டு.



தனுஷ் 18!



பிடித்த காட்சி

'எனக்கு மட்டும் எல்லாமே ஏன் தப்புத் தப்பா நடக்குது'' என்று அழுவேனே... அந்த க்ளைமாக்ஸ் காட்சிதான்.

விசிறி

கமல், ரஜினி ரொம்பப் பிடிக்கும். ஹாலிவுட் நடிகர் டாம் ஹாங்க்ஸின் விசிறி நான்.



ப்ளஸ்பாயிண்ட்

என்னோட உயரமும் ஒல்லியான தேகமும்தான். 5'9" உயரம். எடை... ஸாரி, சொல்ல மாட்டேன். குதியாட்டமா டான்ஸ் பண்ண ரொம்ப உதவியா இருக்கு.

படிப்பு

செயின்ட் ஜான்ஸில் பள்ளி இறுதி முடிச்சதுமே, அண்ணா ஷூட்டிங்குக்குக் கூட்டிட்டுப் போயிட்டாரு. இப்ப பி.ஸி.ஏ. பண்றேன். (அஞ்சல் வழிதான்)

பொழுதுபோக்கு

வீட்டிலிருந்தால் எப்பவும் வீடியோ கேம்ஸ் விளையாடிக்கிட்டிருப்பேன். ஃப்ரெண்ட்ஸ்கூட கிரிக்கெட், ஸ்னூக்கர் விளையாடுவேன். நிறைய சினிமா பார்ப்பேன். ஆனா இப்ப எதுக்குமே நேரமில்லை.

பாராட்டு

'காதல் கொண்டேன்' பார்த்துட்டு வெளியே வந்த அப்பா கஸ்தூரி ராஜா, இலேசாக அணைத்து, முதுகில் தட்டிக் கொடுத்தார். அண்ணன் செல்வராகவன், அதுகூடச் சொல்லலை. அடுத்த படம் பற்றிப் பேச ஆரம்பித்துவிட்டார்.

வெற்றி ரகசியம்

ஸ்பெஷலா பண்ணணும்னு நினைச்சு எதையும் பண்ணலை. ஸ்க்ரிப்டுக்கு என்ன வேணும்னு நினைக்கிறாங்களோ, அதை மட்டும் பண்றேன்.



ரசித்த காட்சி

என்னை நடுவில் வைத்துக் கொண்டு திவ்யாவும், ஆதியும் 'லவ்வானு கேளு' என்று பேசிக் கொள்வார்கள். அதை நான் ரொம்ப ரசித்தேன்.

அழுகை

'காதல் கொண்டேன்' படத்தைப் பார்த்துட்டு, எங்க பாட்டி அழுத அழுகைதான். 'தோ பாட்டி. நான் சாகலை. உயிரோடதான் இருக்கேன்'னு பக்கத்துலே போய் தேற்றினாலும், அவங்க அழுகை நிற்கவேயில்லை.

ஜூலை 28ம் தேதி 18வது பிறந்த நாள் கொண்டாடிய நடிகர் தனுஷ் சொன்ன பதினெட்டு 'ஓபன் சீக்ரெட்ஸ்'!

ஜாலி

பாலுமகேந்திராவின் 'அது ஒரு கனா காலம்' படத்தில் சோகமான தனுஷ் கிடையாது. லவ், தமாஷ் ஜாலி!



காதல்

அது ஓர் அற்புதமான உணர்வு. அதை எல்லாருமே ஏதோ ஒருவரிடம், ஏதோ ஓர் அளவில், சில மணித் துளிகளாவது அனுபவித்திருப்பார்கள் என்றே நினைக்கிறேன்.

புதுமை

'டாக்டர்ஸ்' படம் முழுக்க முழுக்க எக்ஸ்பெரிமென்டலான படம். மருத்துவக் கல்லூரி மாணவர்களைப் பற்றி கதை. அதுலே ஜெயிச்சுட்டா, பெரிய விஷயம்தான்.

இயக்குநர்

ஒரு படம் ஓடினாலும், ஓடாவிட்டாலும், ஸ்கிரிப்டும், டைரக்டரும்தான் காரணம். மற்ற விஷயங்கள் சும்மா சப்போர்ட் பண்ணும் அவ்வளவுதான்.

விசேஷம்

ஆமா, வீட்ல விசேஷம்! எங்க பெரிய அக்கா டாக்டர் விமல் கீதாவுக்குக் கல்யாணம் நிச்சயமாயிருக்கு. மாப்பிள்ளை பேரு சிவகுமார். கனடாவுலே டாக்டரா இருக்கார்.



இனி வெளிவரவிருப்பவை

'திருடா திருடி', 'ட்ரீம்ஸ்', 'டாக்டர்ஸ்', 'காசிமேடு' எஸ். எஸ். ஸ்டான்லி படம் என அரைடஜன். எல்லாமே இருபது வயதுப் பையனுக்குள்ள வேஷங்கள்.

ஆட்டோகிராஃப்

நான் ரொம்ப சாதாரண ஆளு. என்கிட்டே இவ்வளவு அன்பு வைச்சு, ஆட்டோகிராஃப் கேட்கிறது ரொம்ப கூச்சமா இருக்கு. என் ஆட்டோகிராஃபில் இடம் பெறும் வாசகம் என்ன தெரியுமா? 'Be yourself'

சந்திப்பு : அனு

ராசிக்கல் மோதிரம் வாங்க ராசியான கடை P.R. ஜுவல்லரி


P.R. JEWELLERY

GOLD, SILVER, DIAMOND & BIRTH STONES
Old No. 102, New No. 138, USMAN ROAD,
T. NAGAR, CHENNAI - 600 017.
PH: 24344442, 24327764 TUESDAY HOLIDAY
(10.00 AM to 1.30 — 3.30 PM to 8.00 PM)

PROPRIETOR : P. RAVINDHIRAN

எங்கு ஜோதிடம் பார்த்தாலும் **P.R.** ஜுவல்லரிக்கு வந்து ரூ.400/-க்கு ராசிக்கல் வாங்கி பயன் பெறுங்கள். கல் ஒரிஜினல் என முழு உத்திரவாதம் தருகிறோம்.

ராசி	ராசிக்கல்	வெள்ளி மோதிரம் விலை	
மேஷம், விருச்சிகம்	பவழம் -	2 CARAT	400/-
ரிஷபம், துலாம்	வைரம் -	5 CENT	2250/-
மிதுனம், கன்னி	மரகத பச்சை -	20 CENT	400/-
கடகம்	முத்து -	2 CARAT	400/-
சிம்மம்	மாணிக்கம் -	20 CENT	400/-
தனுசு, மீனம்	புஷ்பராகம் -	1 CARAT	400/-
	கனகபுஷ்பராகம் -	½ CARAT	1000/-
மகரம், கும்பம்	நீலம் -	20 CENT	400/-



எங்களிடம் நியூமராலஜிபடியும் கல் மோதிரங்கள் கிடைக்கும்.

TOPAZ, MOONSTONE, AMETHYST, TARQUISE, TIGER EYE, BLOOD STONE, OPAL, AQUAMARINE.

மதர் மோதிரம், மதர் டாலர் தங்கத்திலும், வெள்ளியிலும் ரெடியாக கிடைக்கும்.

தங்கத்தில் ஒவ்வொரு ராசிக்கும் மோதிரம் ரூ. 1800/- முதல் 5000/-ம் வரை உடனே கிடைக்கும்.

அனைவரும் அணியக்கூடியது கார்னெட் வெள்ளி மோதிரம் விலை ரூ. 400/- இதை அணிவதால் படிப்பு, ஞாபக சக்தி, வேலை வாய்ப்பு, வியாபாரம், செல்வ வளம் பெருகும்.

தபால் மூலம் மோதிரம் 1க்கு ரூ 450/-

M.O. (or) D.D. அனுப்பவும்.

தபால் எழுதினால் முழு விவர பாம்லட் இலவசமாக அனுப்புகிறோம்.

குறிப்பு : தினசரி காலை ராஜ் டீவியில் 6.55 மணிக்கு சிறப்புப் பேட்டியை பார்க்கவும்

கடகராசி - முத்து * சிம்மராசி - மாணிக்கம் * தனுசு ராசி, மீனராசி - புஷ்பராகம் * மகரராசி, கும்பராசி - நீலம் *

மேஷ ராசி, விருச்சிக ராசி - பவழம் * ரிஷப ராசி, துலாம் ராசி - வைரம் * மிதுன ராசி, கன்னி ராசி - மரகத பச்சை

ஜீவநதி

காட்சி : 52

பகல் / வீட்டு மாடி.

பாத்திரங்கள்: *சுசீலா, கண்ணன். மொட்டை மாடியில், கட்டைச் சுவருக்கு அருகில் நிற்கிறாள் சுசீலா. கண்ணன் நாற்காலியில் அமர்ந்திருக்கிறான். தரையில் சில புத்தகங்கள்... சுசீலா முகம், வாட்டமும் தீர்மானமும் கொண்டதாக இருக்கிறது.*

சுசீலா: ஏதேனும் ஒரு முடிவுக்கு வந்தாகணும் கண்ணன். நான் வந்துட்டேன். இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் எத்தனை நாளைக்கு?

கண்ணன்: சரியான முடிவுக்கா. ஏதேனும் ஒரு நாள், இந்த முடிவுக்கு நீங்க வரணும்னு எதிர்பார்த்தேன். என்ன பண்ணப் போறீங்க?

சுசீலா: சண்முகம், நோட்டீஸ் விட்டிருக்கிறார். நான் வாழ வரலையாம். அதனால, என்னை ஏன் விவாகரத்து பண்ணக் கூடாதுன்னு கேட்கிறார்.

கண்ணன்: என்ன பதில் தரப் போறீங்க?

சுசீலா: வக்கீல் மூலமா பேசணும். அது பிறகு. அதுக்கு முன்னால சண்முகத்தைப் பார்த்து நாலு வார்த்தை கேட்கணும்னு ஆசையா இருக்கு.

கண்ணன்: தனியாகவா போகப் போறீங்க.

சுசீலா: ஏன்? போனால் என்ன? என்னை யார் கடிச்சுத் தின்பாங்க?

கண்ணன்: அதுக்கு இல்லக்கா. மரியாதையுள்ள மனுஷர்கிட்ட எதுவும் பேசலாம். சண்முகம், அப்படிப்பட்ட மனுஷர் இல்லியே.

சுசீலா: *(நகத்தைக் கடிக்கிறாள்...)* என்ன பண்ணட்டும், கண்ணன்?

கண்ணன்: எப்போ போறதா இருக்கீங்க?

சுசீலா: நாளைக்கே போகலாம்னு இருக்கு.



கண்ணன்: நாளைக்கு வெள்ளிக் கிழமை. ஒரு நாள் பொறுத்துக்கோக்கா. சனிக்கிழமை எனக்கு விடுமுறை. நாளை மறுநாள் போகலாம். நானும் வர்றேன்.


சுசீலா: உனக்கு எதுக்கு சிரமம். உன்னை ஏதானும் பேசினா எனக்குத் தாங்க முடியாது.

கண்ணன்: என்னால முடியும்ங்கா. பைத்தியக்காரர்கள் பேச்சைப் பொருட்படுத்துவாங்களா, என்ன? அக்கா, எனக்குச் சொல்லலாம்னா, சொல்லுங்க. என்னதான்

உங்களுக்குள்ள பிரச்னை?

சுசீலா: *(சங்கடத்துடன் அங்கும் இங்கும் நடக்கிறாள்... பிறகு பேசுகிறாள்)*

என்னன்னு சொல்றது? புருஷன் பெண்ஜாதிக்குள்ள ஏற்படற சில பிரச்னைகளை மற்றவங்களுக்குச் சொல்ல முடியாது, கண்ணன். சொல்லக் கூடாதுன்னு இல்லை. சொன்னா, புரிஞ்சுக்க முடியாது. சில உணர்ச்சிகளை வார்த்தையாலே சொல்ல முடியறது இல்லை. நுட்பமா, மனசுக்கு மட்டுமே புரிகிற விரிசல்கள். விரிசலை ஒட்டுப் போட முடியுமா? போடக்கூடும். ரெண்டு பேருக்கும் ரெண்டு



பிரபஞ்சன்

18

பேர் மேலயும் மரியாதையும் அன்பும் இருக்கணும். இருந்தா சாத்தியம். எங்களுக்குள்ள அது சாத்தியம் இல்லை. என்னை, அவர் உணர்ச்சி உள்ள மனுஷியாவே நினைக்கலை கண்ணா. *(அமைதி, கல்லைப் போல நிற்கிறது)*

கண்ணன்: அக்கா, ஏதேனும் ஒரு சின்ன விஷயம், உங்க ரெண்டு பேருக்கும் பொதுவா இருக்கும்னா, அதை வச்சு பேசிப் பார்க்கலாமே.

சுசீலா: என்னன்னு பேச? எதுக்காகப் பேச?

கண்ணன்: திரும்பவும் சேரத்தாங்கா. பிரியறதுக்கு நிறைய காரணம் இருக்கு. சேர்றதுக்கு ரெண்டு கூடவே இருக்காதா?

சுசீலா: நான் இது பற்றிச் சிந்திச்சிருக்க மாட்டேன்னா நினைக்கிறே? இழுக்கிறது பெண்ணாத்தானே இருக்கா? அதனால, நிறைய யோசிச்சுப் பார்த்துட்டேன். முடியாது. இனி முடியாது. பிரிவு ஒண்ணு தான் எங்களுக்கு நிம்மதி. நீ நாளை மறு நாளைக்கு புறப்படற வழியைப் பாரு.

காட்சி : 53

இரவு / வீடு.

பாத்திரங்கள்: *சுசீலா, கண்ணன், சண்முகம், சண்முகத்தின் தாய் தந்தையர் வேதகிரி, விசாலம்.*

(சுசீலா, கண்ணன் இருவரும் சண்முகத்தின் வீட்டுக்குள் நுழைகிறார்கள். வேதகிரி அவனைக் கண்டு வரவேற்கிறார்.)

வேதகிரி: வாம்மா... வாம்மா... சுசீலா, சௌக்கியமா? வாங்க, கண்ணன். உட்காருங்க.

(இருவரும் அமர்கிறார்கள்.)

அறைக்குள்ளிருந்து வெளியே வரும் விசாலம், சுசீலாவைக் கண்டும் பேசாமல் அறைக்குள்ளேயே திரும்பிச் செல்கிறாள்.

வேதகிரி: என்னம்மா, ஏதாவது சங்கதி?

சுசீலா: சங்கதிக்கா குறைச்சல்? உங்க பிள்ளை, தொடர்ந்து ஏதேனும் உருவாக்கிக்கிட்டு இருக்காரே!

வேதகிரி: என் பிள்ளைதானே. செய்வானே. அவனுக்கு முதல் எதிரியே நான் தாம்மா. நீ ரெண்டாவது தான்.

(சுசீலா சிரிக்கிறாள்.)

சுசீலா: எங்க அவர்?

வேதகிரி: வர்ற நேரம்தான். என்ன பண்ணினான்?

சுசீலா: நோட்டீஸ் விட்டிருக்கார்.

வேதகிரி: என்னன்னு?

சுசீலா: நான் வாழ விரும்பலையாம். ஆறு மாசத்துக்கு மேல பிரிஞ்சு இருக்கேனாம். அதனால, விவாகரத்து பண்ணினா என்னன்னு கேட்கிறார்.

வேதகிரி: மடையன். உலகத்திலேயே சிறந்த மடையன். ஒரு பழமொழி. நாய்க்கு முழு தேங்காயைக் கொடுத்தா, என்ன பண்ணும். புரட்டிக்கிட்டே இருக்கும். அது மாதிரி இவன். இவனுக்கு நீ கிடைச்சிருக்கே. சார், தப்பா நினைப்பாரோ? என்னடா, ஒரு அப்பன், மகனை இப்படிப் பேசறானேன்னு. என்ன பண்ண? நியாயம்னா எல்லோர்க்கும் பொதுதானே?

(உள்ளிருந்து விசாலம்...)

விசாலம்: உங்களைத்தானே. இங்க வாங்க. *(வேதகிரி எழுந்து போகிறார்)*

விசாலம்: என்ன நம்ம பிள்ளையைப் பத்தி நீங்களே இப்படிப் பேசறீங்க?

வேதகிரி: உன் பிள்ளையை நீ மெச்சிக்கோ. அவன், என்னைப் பொறுத்த வரைக்கும் ஒரு அயோக்கியன்தான். எனக்கு அவன் தப்பை மன்னிக்க முடியாது.

விசாலம்: அழகுதான். இது நியாயமா இருக்கா?

வேதகிரி: எனக்கு அநியாயம் தெரியாது. *(திரும்ப வந்து அமர்கிறார் வேதகிரி... வாசலில், ஸ்கூட்டர் வந்து நிற்கும் சப்தம். சண்முகம் தோன்றுகிறான். சுசீலாவைப் பார்த்து இலேசாக அதிர்ச்சியடைகிறான். கண்ணனைக் கண்டு எரிச்சல் அடைகிறான். ஒரு சோபாவில் அமர்கிறான்.)*

> ''தியேட்டருக்குப் படம் பார்க்க வந்தவங்களை எதுக்கு தனி ரூமுக்குக் கூட்டிட்டுப் போறாங்க?''
>
> ''நாலைஞ்சு பேர்தானே, அதனால் படத்தை சிடிலயே போட்டுக் காட்டுறாங்களாம்!''
>
> — வசந்தி வள்ளுவன்

சுசீலா: சண்முகம். உங்க நோட்டீஸ் கிடைச்சுது. *(விசாலம் வந்து ஆக்ரோஷமாக)*

விசாலம்: நல்லா இருக்கு. புருஷன் பேரைச் சொல்றியே... நீ பெண்தானா?

வேதகிரி: சொல்றதுக்குத் தான் பேர். நீ சொல்லும்மா.

சுசீலா: உங்க நோட்டீஸ், நான் தப்பு செய்யறதாச் சொல்லுது. அது பொய்ன்னு உங்களுக்கே தெரியும்.

சண்முகம்: மனைவி, புருஷனோட இருக்கணும். இருந்தாதான் மனைவி.

சுசீலா: நான் இருக்கத்தான் வந்தேன். இருக்கத்தான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். இருக்கத்தான் என்னைப் பெத்து வளர்த்தவங்களை விட்டு வந்தேன். என்னை மதிக்க உங்களுக்குத் தெரிஞ்சதா?

சண்முகம்: என்ன மதிக்கணும்? புருஷன், பெண்டாட்டியை மதிக்கணுமா?

சுசீலா: ஆமா, மதிச்சு ஆகணும். நான் மரியாதையை எதிர்பார்க்கிறேன். மரியாதைங்கிறது, அன்பின் அடிப்படையில் வரவேணும். உங்ககிட்ட அன்பு இல்லை. அதனால மரியாதையும் இல்லை.

சண்முகம்: வந்த விஷயம்?

சுசிலா: சமாதானம் பேச வரலை. உங்க நோட்டீசுக்கு, என் வக்கீல் பதில் கொடுப்பார். நாம் நீதிமன்றத்துல பேசலாம். உங்க மனசாட்சியைச் சில கேள்விகள் நான் கேட்கணும். என்னை, உங்க மானேஜர் வீட்டுக்கு அழைச்சுகிட்டுப் போனீங்களே, அது எதுக்கு? சொல்லுங்க உங்க அப்பா, அம்மா தெரிஞ்சுக்கட்டும். *(வேதகிரி அதிர்ச்சியுடன் அவளைப் பார்க்கிறார்.)*

சண்முகம்: மேல் அதிகாரி, வாழ்த்தணும்னு சொன்னார்.

சுசிலா: அதுக்குத்தானா? *(சண்முகம், அவள் கண்களைத் தவிர்க்கிறான்.)*

ஈரோட்டுக்காரன் பெண்ணையும் கொடுத்துக் கார் வாங்கித் தரான்னும்



சொன்னீங்களே... ஏன், அந்தப் பார்ட்டியை விட்டீங்க. நாங்க கார் வாங்கித் தரோம்னு சொன்னோமா?

(சண்முகம் மௌனம்)

கார் வாங்க ஆசைன்னா, நீங்க உங்க சம்பாத்தியத்துல வாங்குங்க. பொண்டாட்டி வாங்கித் தரணுமா? எதுக்குத் தரணும்? உங்களோட வாழறதுக்கு, இது என்ன கூலியா? எது எதுக்குக் கூலி தரணும், நான்? *(சண்முகம் மௌனம்)*

ஒரு பட்டியல் கொடுத்திட்டா, எனக்குச் சௌகர்யம். எந்த எந்த வேலைக்குக் கூலி தரணும். சொல்லுங்க. *(சண்முகம் எங்கோ பார்க்கிறான்.)*

அப்புறம், கண்ணன் யார்னு கேட்டு என்னைச் சித்ரவதை பண்ணீங்க. என்ன பதில் சொன்னா, உங்களுக்குத் திருப்தியா இருக்கும்?

சண்முகம் : இப்பவும் கேட்கிறேன். இவன் உனக்கு யார்?

சுசிலா: தம்பி. எனக்குத் தம்பி. எனக்குக் கூடப் பிறக்காத தம்பி.

சண்முகம் : *(கிண்டலுடன்)* தம்பியா?

சுசிலா: ஆமா. தம்பிதான். அழுக்கு மூளைக்கு இதன் அர்த்தம் புரியாது. பொம்பிளை, வெறும் உடம்புன்னு நினைக்கிற அழுக்கு மனசுக்கு இது புரியாது. பொம்பிளையை வச்சு ஸ்கூட்டர், கார் வாங்கிற மானம் இல்லாதவங்களுக்கு இது புரியாது.

சண்முகம் : இந்த ஆள், என் வீட்டுக்கு எப்படி வரலாம்?

சுசிலா: அவராத்தான் வந்தார். என் மேல் இருக்கிற அக்கறையால வந்தார்.

கண்ணன் : சண்முகம், என்னைப் பத்தி தப்பா நினைக்கிறீங்களா?

சண்முகம்: உன் மேல மதிப்பு இல்லை.

சுசிலா: அதுக்குக் காரணம், உன் தாழ்வு மனப்பான்மை. உன் மேல உனக்கு நம்பிக்கை இல்லை. எல்லாரையும் தப்பாவே புரிஞ்சுக்கிறே. இதைச் சொல்லத்தான் நான் இங்கு வந்தேன். சண்முகம், உன் கேவலமான எண்ணத்தை நான் நீதிமன்றத்திலே சொல்லத்தான் போகிறேன். நீ யார்னு உலகத்துக்குத் தெரியணும். உன்னை மாதிரி லட்சம் பேர் இருக்கான். அவங்க முகமூடி கழன்று விழணும்.

சண்முகம் : *(எழுந்து நிற்கிறான்)* நீ இல்லன்னா, இன்னொருத்தி.

சுசிலா: உனக்கு மட்டும்தானா? உலகத்துல ஆம்பிளையே இல்லாமேப் போனாங்களா, எனக்கு மட்டும்? போப்பா...

(புறப்படுகிறாள், சுசிலா.)

வேதகிரி : புறப்படறியாம்மா?

சுசிலா: ஆமாம் மாமா. வர்றேன். திரும்பி அவரைப் பார்க்கிறாள். உங்களைப் பிரியறதுதான் மாமா வருத்தமா இருக்கு. *(அவரும், மௌனமாக நிற்கிறார்.)*

வேதகிரி : எனக்குக் கொடுத்து வைக்கலைம்மா... வேற என்ன சொல்றது. நீ நல்லா இருப்பே... தைரியமா இரு. *(அவர்கள் தெருவுக்கு வருகிறார்கள்.)*

கண்ணன்: நான் புறப்படறேன் சார்.

வேதகிரி : வாங்க தம்பி. மனசுக்குள்ள எதையும் வச்சுக்காதீங்க.

கண்ணன்: இல்லை சார். எனக்கு அக்காவைப் பற்றித்தான் கவலை. வேற எதுவும் இல்ல சார்.

தெருவில் இறங்கி நடக்கிறார்கள், சுசிலாவும் கண்ணனும்

சுசிலா: என்ன கண்ணா, வருத்தமா இருக்கா?

கண்ணன் : ஆமாங்கா.



• கடல் வெள்ளரி



• பளாச்சி மீன்



• மடக்கு இறால்



• நிலக் குறக்கை

தண்ணீரில் பறக்கும் ஹெலிகாப்டர்!

பாண்டிச்சேரி தாவரவியல் பூங்காவின் மணி மகுடம் அங்குள்ள அசத்தல் மீன் அருங் காட்சியகம். இங்கு அடிக்கடி புதிய வரவுகள் (வினோத மீன் வகைகள்) விருந்தாளிகளாக வந்து போவது வழக்கம். அப்படி வந்திருப்பது தெரிந்தால், முண்டியடித்துப் போய்ப் பார்த்துவிட்டு வந்தால்தான், பாண்டி வாசிகளுக்குத் தூக்கம் வருமாம். லேட்டஸ்ட் வரவு ஹெலிகாப்டர் மீன் என்று வேடிக் கையாக அழைக்கப்படும் பளாச்சி மீன். ஹெலிகாப் டரைப் போலவே, இறக்கைகளை அசைத்து தண்ணீ ருக்குள்ளேயே வட்ட மடித்துப் பறக்கிறது. பளாச்சி தவிர, ஸீ குக்கும்பர் எனப்படும் கடல் வெள்ளரி, மடக்கு இறால், மணலில் ஒளிந்து கொள்ளும் வண்ணமயமான நீலக்குறக்கை என்று பல புதிய வரவுகள் காரணமாக... இப்போது பாண்டி அருங் காட்சியகத்தில் திருவிழாக் கூட்டம்.

சுசீலா: எனக்கு இல்லை வருத்தம். நிம்மதியா இருக்கு. ஏதோ இந்த ஆள் பக்கம்தான் நியாயம் இருக்கிற மாதிரி, பேசினார் இல்லையா. அதை உடைக் கணும்னு தான் வந்தேன்.

கண்ணன் : உங்க கல்யாண வாழ்க்கை முறிஞ்சுடும் போல இருக்கே.

சுசீலா: முறிஞ்சுட்டுது. இன்னுமா உனக்குச் சந்தேகம். எனக்கு இது, எட்டு மாசத்துக்கு முந்தியே தெரியும். *(அமைதி யாக நடக்கிறார்கள்)*

கண்ணன் : கல்யாணம்கிறதே, அதிர்ஷ் டச் சீட்டு வாங்கற மாதிரி ஆயிடுச்சு இல்லை?

சுசீலா: சீட்டு விழுந்தா வீட்டுக்கு. இல்லை நாட்டுக்குன்னு சொல்லுவாங்க. என் சீட்டு, எதுக்கு. எனக்கு என்னைப் பத்திக் கவலை இல்லைப்பா. இனி கல்யா ணம் பண்ணிக்கப் போற பெண்களைப் பத்திதான். *(அமைதியாக நடக்கிறார்கள்)*

சுசீலா : கண்ணா

கண்ணன் : என்னக்கா?

சுசீலா : கீதாவைக் கட்டிக்கப்பா. நல்லா இருப்பே. அருமையான பொண்ணு.

கண்ணன் : வேண்டாம்கா. எங்களுக் குள்ள அந்த மாதிரி எண்ணம் இல்லை.

சுசீலா: ஆச்சர்யமா இருக்கு.

கண்ணன் : இதுல ஆச்சரியம் எனக்கா. சிநேகம், பெரிசு இல்லியா?

சுசீலா: எதையும் விட பெரிசப்பா.

பஸ் ஸ்டாப்பில நிற்கிறார்கள். பஸ் வரு கிறது. ஏறி அமர்கிறார்கள். பஸ் புறப் படுகிறது.

(தொடரும்)



வீரமணி விவகாரத்தில் போலீஸ் தரப்பில் என்ன சொல்கிறார்கள் என்று அறிய சென்னை நகர போலீஸ் கமிஷனர் விஜயகுமாரைச் சந்தித்தோம்.

"வீரமணி சுட்டுக் கொல்லப்பட்டதை யடுத்து உங்களுக்கு வரும் ரியாக்ஷன்கள் எப்படி இருக்கின்றன?"

"ஒரு ரௌடியைச் சுட்டுக் கொன்றதாக வரும் பாராட்டுகளே அதிகம். எத்தனை பாராட்டுத் தந்திகள் காவல் துறைக்கு வந்து கொண்டிருக்கின்றன தெரியுமா? ஆனாலும் மனித உரிமை ஆர்வலர்கள் தங்கள் ஆட்சேபணையைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கருத்தை நான் மதிக்கிறேன்.

"ஒரு வீரமணியைச் சுட்டுக் கொல்வதன் மூலமாக ஒட்டு மொத்தமாக ரௌடியிசத்தை ஒழித்ததாக ஆகிவிடுமா?"

"காவல் துறை, எப்போதுமே, ரௌடிகளைக் கண்காணித்துக் கொண்டுதான் இருக்கிறது. நாங்கள் ரௌடிகளை ஏ, பி, சி என மூன்று பிரிவுகளாகப் பிரித்திருக்கிறோம். 'ஏ' பிரிவு ரௌடிகள் சாதாரண ரகம். ஒவ்வொரு போலீஸ் ஸ்டேஷனிலும் உள்ள கான்ஸ்டபிள்கள் இவர்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். 'பி' பிரிவு ரௌடிகள் உதவி கமிஷனர்களால் கண்காணிக்கப்படுகிறார்கள். 'சி' பிரிவு, மோசமான ரௌடிகள். இவர்கள் அந்தந்தப் பகுதி டெபுடி கமிஷனர்களின் தீவிர கண்காணிப்பில் இருப்பார்கள். ரௌடிகள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாமல் தடுப்பதிலும், அப்படி ஈடுபடுபவர்களைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி, தண்டனை வாங்கிக் கொடுப்பதிலும் தீவிரமாக இருக்கிறோம். கடந்த இரண்டாண்டுகளில் குற்றம் நிரூபணமாகி, தண்டனை பெற்ற ரௌடிகளின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருப்பதைப் புள்ளி விவரங்களுடன் நிரூபிக்க முடியும்.

"ரௌடிகளைச் சீர்திருத்தி


பழி தீர்த்துக் கொண்டதா போலீஸ்?



படம் உதவி : நக்கீரன்

ஆக்கபூர்வமான பாதைக்குத் திருப்புவது என்பது நல்லவிஷயம் தானே? வீரமணிகூட திருந்திவிட்டதாகக் கூறியிருக்கிறானே! அதை ஏன் போலீஸ் ஒரு பொருட்டாக மதிப்பதில்லை?''

"ரௌடிகளைத் திருத்துவதிலும், சமூக அக்கறை கொண்டவர்கள் அவர்களைச் சீர் திருத்துவதிலும், போலீசுக்கு ஆட்சேபணை யில்லை. ஆனால் ஒரு தீவிரமான ரௌடி, தான் திருந்திவிட்டதாகச் சொன்னால், அதை அப்படியே நம்பி, அவனைக் கண் காணிக்காமல் இருக்க முடியாதே! அவன் உண்மையில் திருந்தி, ரௌடித்தனம் செய்ய வில்லையெனில், சமுதாயத்துக்கும் நல்லது தானே? சிலர், திருந்துவதாகச் சொல்லிவிட்டு, திரை மறைவில் பழையபடியே தொடர்ந் தால், போலீஸ் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாதில்லையா? வீர மணிக்கும் இது பொருந்தும். அவனுக்கு எதிராக எழுத்து மூலமாக தைரியமாய் யாரும் புகார் தரவில்லை. நாங்கள் கண் காணித்துக் கொண்டே இருந்தோம். புகார்



எம்.பி. நிர்மலுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி!

ஜூலை இருபத்தி ஏழாம் தேதி. ஞாயிற்றுக் கிழமை காலையில், கேட லிஸ்ட் டிரஸ்ட் அமைப்பின் சார்பில் நடந்த கூட்டத்தில் எக்ஸ்னோரா நிறுவனர் எம்.பி.நிர்மல் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேச்சில், ரௌடிகளை மனம் மாற்றித் திருந்த வைத்து, அவர்களை ஆக்கபூர்வமான பாதைக்கு மாற்றும் தமது முயற்சியைப் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, இருக்கையில் சென்று அமர்ந்து கொண்டார். அடுத்த சில நிமிடங்களில் அவருக்கு ஒரு துண்டுச்சீட்டு வந்தது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த தகவலைப் படித்த வுடன் நிர்மலுக்கு அதிர்ச்சி! அந்தத் தகவலை வெளியிட்டபோது, அரங்கத்தில் அமர்ந் திருந்தவர்களுக்கு அதிர்ச்சி. தமது பேச்சில் யாரைப் பற்றிக் குறிப்பிட்டாரோ, அதே அயோத்தியாக்குப்பம் வீரமணி போலீஸ் என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டான் என்பதே அந்தத் தகவல்!

நிர்மலைச் சந்தித்து கருத்து கேட்டோம்...

''சுமார் ஆறு மாதங்களுக்குமுன், தம்மை போலீஸ், என்கவுண்டர் என்ற பெயரில் சுட்டுக் கொன்று விடுமோ'' என்று பயப்படுவதாக என்னைச் சந்தித்துக் கூறிய வீரமணி, தாம் 'ரௌடி' என்ற பேரெடுத்துவிட்டதற்காக மிகவும் வேதனைப்படுவதாகவும், எக்ஸ்னோரா இயக்கத்தில் சேர்ந்து ஆக்கபூர்வமாகச் செயல்படவிரும்புவதாகவும் கடிதம் எழுதிக் கொடுத்தார். மக்களை மிரட்டி, மரியாதை யைப் பெறுவதைவிட, அவர்களுக்குச் சேவைகள் செய்து, அன்பைப் பெறுவதில் உள்ள சந்தோஷத்தைப் பற்றி அவருக்கு விளக்கினேன்.

இந்தியாவின் மிகச் சிறந்த நீச்சல் வீரர் களை உருவாக்க அவரிடம் ஒரு திட்டத்தை ஒப்படைத்தேன். மூன்று வயதுக்குட்பட்ட இருபத்தைந்து மீனவக் குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு மிகச் சிறந்த பயிற்சியாளர்கள் மூலம் நீச்சல் பயிற்சி யளித்து, அகில உலக அளவில் போட்டி களுக்கு அனுப்பும் திட்டம் இது. வீரமணியும் சந்தோஷமாய், ஏழெட்டு குழந்தைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வந்தார். நீச்சல் பயிற்சி ஏற்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்றார்.

"குற்றம் புரிந்தவர்கள்மீது சட்டபூர்வ நட வடிக்கைகள் எடுக்கப்பட்டு தண்டனை வழங்குவதுதான் சரி. அதில் இரண்டாவது கருத்தே இருக்கமுடியாது. ஆனால், அத்தகைய ஒருவர் உண்மையில் திருந்தி, ஆக்கபூர்வமான பாதையில் செல்ல விரும்பு கிறபோது அதை வரவேற்று, அவருக்கு வாய்ப்புக் கொடுக்கலாமே என்றுதான் நான் சொல்கிறேன். பல ரௌடிகளைத் திருத்தி, ஆக்கபூர்வமான பாதைக்கு மாற்றி இருக் கிறேன் நான். அந்த அனுபவத்தில்தான் இப்படிச் சொல்கிறேன்." என்றார் நிர்மல்.

வந்ததும், நடவடிக்கை எடுத்தோம். அவ்வளவுதான். 'திட்டமிட்ட என்கவுண்டர்' என்பதெல்லாம் கற்பனை.

வீரமணிமீது இப்படி ஒரு அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டதற்குப் பல்வேறு தரப்பிலும் முக்கியமாக மூன்று காரணங்கள் அரசல் புரசலாகச் சொல்லப்படுகின்றன.

முதலாவது காரணம் : தி.மு.க. நடத்திய பேரணியின்போது, இறுதிக் கட்டத்தில், தி.மு.க.வினர் மற்றும் பத்திரிகையாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் நாடறிந்தது. மேலிட உத்தரவின் பேரில் அயோத்தியா குப்பம் மற்றும் வீரமணியின் சொந்த ஊரிலிருந்து திரட்டி வரப்பட்ட ஆட்கள் தான் வன்முறையில் இறக்கிவிடப்பட்டார்கள். விரைவில் இதுபற்றி கோர்ட்டுக்கு வந்து சாட்சி சொல்ல இருந்த வீரமணி, அப்ரூவராக மாறி, சிலருக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தும்படியாய் ஏதாவது சொல்லக்கூடும். இது தவிர்க்கப்பட வேண்டும்.

இரண்டாவது காரணம் : ராணி மேரிக் கல்லூரி மாணவிகள் போராட்டத்தின் போது, பரிதாபப்பட்டு, அவர்களுக்கு வேண்டிய சாப்பாட்டுப் பொட்டலங்கள் அயோத்தியாக்குப்பத்திலிருந்து வந்ததாகத் தெரிகிறது.

மூன்றாவது காரணம் : புதிய தலைமைச் செயலகம் அமைக்கும் பணிகளுக்கு அயோத்தியாகுப்பம் மீனவர்களை அப்புறப்படுத்த வேண்டிவரும். அப்போது பிரச்னை ஏதும் வராமலிருக்க, இப்போதே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது...

இந்த மூன்று காரணங்களையும் சொல்லி, விஜயகுமாரின் கருத்தைக் கேட்டபோது, "மூன்று காரணங்களிலுமே துளியும் உண்மையில்லை. மக்களுக்கும், பத்திரிகைகளுக்கும் கருத்துச் சுதந்திரம் இருப்பதால், தம் இஷ்டம்போல எதற்கும் காரணம் கற்பிக்கலாம். ஆனால் அவையெல்லாம் உண்மையாக இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் ஏதுமில்லை" என்றார்.

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

வாசகர்களே எழுதுங்கள்.... நிர்மல் சொல்வதுபோல் வீரமணிக்கு வாய்ப்புத் தரப்பட்டிருக்க வேண்டுமா...?

குறையொன்றுமில்லை

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்

2

'ஆனால்', என்று பேச்சை ஆரம்பித்தாலே அனர்த்தம்தான். அதுவும் பீஷ்மாச்சார்யார் வாயிலேயிருந்து அப்படி ஒரு சொல் வருகிறது என்றால்...! கேட்டுக் கொண்டிருக்கும் துரியோதனனுக்குத் தயக்கம் வருகிறது. என்ன சொல்லப் போகிறாரோ என்று யோசனை வருகிறது.

"சர்வகாரணபூதனான பகவான் கிருஷ்ணன்-பரமாத்மா-அவர்கள் (பாண்டவர்கள்) பக்கத்தில் இருந்து உபகாரம் பண்ணாது போனால், பஞ்சபாண்டவர்களை ஒரே நொடியில் நாம் அழிக்க முடியும்" என்றார் பீஷ்மர்.

துரியோதனன் அவரைத் திரும்பிப் பார்க்காமலே புறப்பட்டுப் போய்விட்டான். பீஷ்மர் இனி மீதிப் பேரைப் பார்த்தால் என்ன, போனால் என்ன... கொன்றால் என்ன! ஒரு பிரயோஜனமுமில்லை என்று புறப்பட்டுப்போய்விட்டான்.

பஞ்ச பாண்டவர்களிடமிருந்து கிருஷ்ணனைப் பிரிக்க முடியுமா...!

சர்வம் விது: கிருஷ்ண: அந்த கிருஷ்ணனையே சர்வத்துக்கும் ஆச்ரயித்தார்கள் அவர்கள். அவர்கள் பக்கம் நின்றான் பகவான்.

மனு ஸ்ம்ருதி என்ன சொல்கிறது என்றால், 'ஆததாயி' என்று ஒருவன் அகப்பட்டால், விசாரிக்காமலே அவனைக் கொல்லலாம் என்கிறது.

விசாரணையே கிடையாது என்று சொல்லி விட்டது!

ஆததாயி என்றால் யார்...?

வீட்டிலே நெருப்பு வைக்கிறவன்; ஒருத்தரை விஷம் கொடுத்துக் கொல்கிறவன். கையிலே எப்போதும் ஆயுதம் தாங்கிக் கொண்டு பகைமை பாராட்டுகிறவன்; இதரான் பொருளை அபகரிக்கிறவன் - நில புலன்களை அபகரித்தல் போன்ற செயல்களில் ஈடுபடுகிறவன். இதில் ஏதேனும் ஒன்று பண்ணினாலே குற்றம். அவன் ஆததாயி ஆகிவிடுகிறான்.

ஒரு வீட்டுக்கு நெருப்பு வைக்கிறான் என்றால், எதற்காக வைக்கிறான் என்று கேள்வி உண்டா! ஒருவரை விஷம் கொடுத்துக் கொன்றால், எதற்குக் கொன்றாய்? என்று கேள்வியா கேட்டுக் கொண்டிருக்க முடியும்...?

பிறன் மனையாடல் என்கிற காரியம் ஒருத்தன் பண்ணலாமா! இவை எல்லாவற்றுக்கும் விசாரிக்காமலே கொல் என்கிறது மனுநீதி.

துரியோதனாதிகளோ இதிலே ஒரு பாதகம் மட்டும் பண்ணி நிறுத்தி விடவில்லை. மொத்தத்தையும் பண்ணியிருக்கிறார்கள் அவர்கள்.

அரக்கு மாளிகை கட்டி, அதிலே தீயை வைத்தார்கள். பீமசேனனுக்கு விஷத்தைக் கொடுத்தார்கள். பாண்டவர்களின் பொருளையெல்லாம் அபகரித்தார்கள். சூதாட்டத்திலே சொத்துக்களையெல்லாம் அபகரித்தார்கள். க்ஷேத்திரங்களை, நிலங்களை அபகரித்தார்கள். பத்னியையும் நடுசபையிலே வைத்து மானபங்கம் பண்ணினார்கள். எதைத்தான் அவர்கள் பண்ணவில்லை?

அந்த ஆததாயிகளின் பக்கத்திலே இருந்ததால் தாமும் ஆததாயிதான் என்ற முடிவு பீஷ்மாச்சார்யாருக்கு.

அதர்மமாக ஒருவர் நடந்து கொள்ளும்போது, அவர்களைத் திருத்துவதற்காக எடுத்துச் சொல்ல வேண்டாமா? 'நீ பண்ணுவது ரொம்பத் தப்பு' என்று எடுத்துச் சொல்ல வேண்டும். தெரிந்தும் சொல்லாமல் இருப்பது ரொம்பத் தப்பு. சொல்லியும் அவர்கள் கேட்கவில்லையானால், அவர்களை விட்டுவிட்டு தூர ஓடிப் போய்விட வேண்டும். அவர்கள் பக்கமே இருந்தால் அது அனர்த்தம். தர்மத்தைச் சொல்லாமல் போனால்



மகா பாவம்! தர்மத்தைச் சொல்வதற்கு நாம் யாரிடத்திலும் பயப்பட வேண்டியதே யில்லை.

விபீஷணன் பாருங்கள்... ராவணன் சபையிலே நின்று துல்லியமாகத் தர்மத்தைச் சொன்னான்.

ஆகவே தர்மத்தைச் சொல்ல யாரும் பயப்பட வேண்டியதில்லை. அதர்மத்தைச் சொல்லத்தான் பயப்பட வேண்டும்.

ஆகவேதான் துரியோதனன் பக்கத்தி லிருந்தும், வாயை மூடிக் கொண்டிருந்த தம்மையே ஆததாயி என்று பழித்துக் கொள்கிறார் பீஷ்மர். அதற்கு மேலும் ஒன்று சொல்கிறார்...

"இந்த கோபஸ்த்ரீகள் பண்ணின உயர்ந்த விஷயம்போல் வேறு உண்டோ! அவர் களுடையது போன்ற பக்தி உலகிலே வேறு வருமோ!" என்று கேட்கிறார்.

நாராயண பட்டாத்ரி சொல்கிறார் : "கோபிகாப்யோ நமோஸ்து".

'சாஸ்திரக் கூட்டங்களையெல்லாம் குப்பையிலே போடு' என்கிறார். உத்தமரான அவரே சொல்கிறார், தூக்கிப் போட்டுவிடு என்று...

சாஸ்திரங்களெல்லாம் எதற்கு...? இந்த மாதிரி பக்தி பார்த்ததுமில்லை; கேட்டது மில்லை. "கோபிகா பக்தி அன்யத்ரசம்" - வேறெங்கும் அதுபோன்ற பக்தி பார்க்க முடியாது என்று பொருள். அப்படியொரு விசேஷமான பக்தி அது. பகவானையே இழுத்துவிட்டார்கள் அவர்கள்.

யதிராஜ சப்ததி என்று ஒரு ஸ்தோத்திரம். அதிலே சுவாமி தேசிகன் சொல்கிறார். அழகாகச் சொல்கிறார் :

"பிரும்மாவைப் போய்ச் சரணடைந்து அவரிடத்திலே பற்றலாம் என்று போனேன். பிரும்மா என்னடாவென்றால், பெரிய ஸ்த்ரீ லோலனாக இருக்கிறார். வாக்கிலேயே சரஸ்வதியை வைத்துக் கொண்டிருக்கிறார்.

"அடுத்து கைலாசத்துக்குப் போனேன். அங்கே பரமசிவன் பாதி சரீரத்தையே ஒரு ஸ்த்ரீக்குக் கொடுத்துவிட்டு அர்த்தநாரீஸ் வரனாய் இருந்து கொண்டிருக்கிறார்.

"சரி இனிமேல் எங்கே போவது... என்று யோசித்தபடி வைகுண்டம் போனேன். போய்ப் பார்த்தால், இவர்கள் இரண்டு பேருமே பரவாயில்லை போலிருக்கிறது... அது இன்னும் மோசம்! இவர்களாவது பத்னியோடு இருக்கிறார்கள். அங்கே, ஆளையே காணவில்லை. வைகுண்டத்திலே எங்கே காணோமே என்று தேடிவிட்டுப் போய்ப்பார்த்தால், கோபி ஜனஸ்ய வசமாய் இருக்கிறார். மும்மூர்த்திகளே இந்தக் கதியிலே இருந்தால் நான் என்ன பண்ணு வது...? யதிராஜனாகிய உன் திருவடியைப் பற்றுவதுதான் வழி. அதைப் பற்றியவர் களுக்குக் காமம் உள்ளே புகுமா? காமத்தைப் போக்கக் கூடிய உயர்ந்த திருவடியல்லவா அது!" என்று கேட்கிறார் சுவாமி தேசிகன்.

இதிலே தத்துவம் என்னவென்றால், கோபிகா பக்திக்குப் பரமாத்மா ஓடி வந்து அங்கே நின்று, அவர்களுக்கு விசேஷ அனுபவத்தைக் கொடுத்தான். ஆகையி னாலே, ஆய்ச்சியரோடு கலந்து, இடக்கை வலக்கை தெரியாது ஆடிப் பாடி மகிழ்ந்தானே பரமாத்மா...

அந்த வழியைத்தான் ஆண்டாள் பின்பற்றினாள்.

'கோபிகாப்யோ நமோஸ்து' என்று சொன்னது இதனால்தான். அவன் பண் ணியதையே பண்ணி, இந்த கோபஸ்த்ரீகள் எல்லோரும் மோக்ஷத்தை அடைந்திருக் கிறார்கள்.

ஒருத்தி (ஒரு கோபஸ்த்ரீ) என்ன பண்ணினாளாம்... பீஷ்மாச்சார்யார் சொல்கிறார் :

ஒருத்தி ஜடை பின்னலைப் பிடித்து ஓர் இழு இழுத்தாளாம்! நீதான் காளிய ஸர்ப்பம் - நான் உன்மேல் ஏறி நாட்டியம் ஆடுவேன்... என்று அவள் தலைமேல் ஏறி நின்று நாட்டியம் ஆட ஆரம்பித்தாளாம்! இன் னொரு கோபஸ்த்ரீ, வேறொருத்தியைக் கீழே தள்ளி, 'நீதான் பூதனை! உன்னை நான் சம்ஹாரம் பண்ணுகிறேன்' என்று சொல்லி



அவள் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டு விட்டாளாம்...

இப்படியெல்லாம், கிருஷ்ணன் பண்ணியதையே பண்ணி, மோக்ஷத்தை அடைந்துவிட்டார்களாம் கோபிகைகள். ஆகையினாலே அனுகாரத்துக்கும் பயன் இருக்கிறது - ஆண்டாள் இதேபோல்தான் அனுகரித்தாள். இதைத்தான் ஆசார்யர்கள் சொல்கிறார்கள். அந்த தனுர்மாஸ பூஜையை அவள் அனுகாரம் செய்தாள் - அவர்கள் (கோபிகைகள்) பண்ணியதை இங்கே நடத்திக் காட்டினால், பகவான் அதற்கு விசேஷ பலனைக் கொடுக்கிறான்.

அப்பேர்ப்பட்ட உயர்ந்த கதியை அந்த கோபிகைகள் எல்லோரும் அடைந்தார்கள். ஆகையினாலேதான் பீஷ்மாச்சார்யர் கோபிகைகளை உதாரணம் சொல்லிப் பேசுகிறார்.

புதுசு அங்கில்லை!



சிறந்த இலக்கியம் ஒன்றைத் திரும்பப் படித்தீர்களானால் அதில் முதலில் படித்ததைவிடப் புதியதாய் ஒன்றும் பார்க்க மாட்டீர்கள். ஆனால் உங்களினுள் முன்பு பார்க்காததை இப்போது பார்ப்பீர்கள்!

- கிளிஃப்டன் பாடிமன்

தகவல் : ஜரீனாபானு

குருக்ஷேத்தர பூமி இருக்கிறது பாருங்கள்... அது எல்லா க்ஷேத்திரங்களைக் காட்டிலும் உயர்ந்தது.

பிரயாகை என்று ஒரு க்ஷேத்திரம்; காசி என்று ஒரு க்ஷேத்திரம் இருக்கிறது. காசி, பிரயாகை முதலான க்ஷேத்திரங்களைக் காட்டிலும் குருக்ஷேத்திரத்துக்கு ஓர் ஏற்றம்.

காசியிலே ஸ்ரார்த்தத்துக்குத்தான் கௌரவம். ஜலத்திலே மரித்தால் முக்தி கிடையாது. அந்த ஸ்தலத்திலே மரணம் அடைந்தால், அந்த காத்யாயனி காமுகன் பரமசிவன் என்ன பண்ணுகிறார்... அந்த விச்வேச்வரன், அந்த ஜீவனுடைய வலது செவியிலே வந்து ராம தாரக மந்திரத்தை இன்றைக்கும் சொல்லிக் கொண்டிருக்கிறார். எவ்வளவு ஆதரவு பாருங்கள்! நான்கு தடவை இந்தத் தாரக மந்திரத்தை அவர் சொல்லுவதாக ஆதிசங்கரர் சொல்கிறார்.

ஆகவே, காசியிலே மரணமானால் முக்தி. பிரயாகை இருக்கிறது பாருங்கள்... அதிலே ஸ்ரார்த்தத்திலும் முக்தி கிடைக்கும் தீர்த்தத்திலேயும் முக்தி கிடைக்கும்.

குருக்ஷேத்திரம் இருக்கிறது பாருங்கள். ஸ்தலம், தீர்த்தம், அந்தரிக்ஷம் - மேலே ஆகாசம், என்று மூன்றிலும் முக்தியைக் கொடுக்கும்! ஆகாசமா?... அப்படியென்றால்...?

பீமசேனன் யுத்தம் பண்ணுகிறபோது ஒரு யானையின் காலைப் பிடித்து அப்படியே தூக்கி, சுழற்றி மேலே போடுகிறான். இன்றைக்குக் கதை சொல்கிறவரைக்கும் அது திரும்பி வந்து விழவில்லை! தூக்கிப்போட்டது போய்க் கொண்டேயிருக்கிறது.

மேலே போனது புவி ஆகர்ஷண சக்திக்கு உள்ளே வந்தால், வந்து விழுந்து விடும். இது ஆகர்ஷண சக்தியைத் தாண்டிப் போய்விட்டது! அந்த வேகத்தில் போயிற்று என்றால் அதற்குப் பிராணன் இருக்குமோ...? அது எங்கே போயிற்று என்று கேட்டால், நேரே மோக்ஷத்துக்கே போய்விட்டது. ஆகவே, குருக்ஷேத்திரத்தில் மரித்தால் அந்தரிக்ஷத்திலேயும் மோக்ஷம்! தர்ம க்ஷேத்திரம் என்று அதற்குப் பெயர். தர்மம் கொஞ்சமும் குறையவிடாமல் காக்கிற க்ஷேத்திரம். காசி, பிரயாகை, இவற்றையெல்லாம் விட உயர்ந்த க்ஷேத்திரம் குரு க்ஷேத்திரம்.

வாஜபேய மகா யக்ஞத்தில் எழுந்தருள்கிற மாதிரி எம்பெருமான் அந்தக் குருக்ஷேத்திரத்தில் குதிரைகளை ஓட்டிக் கொண்டு வருகிறான். அர்ஜுனன் அம்புகளால் அடிக்கிறான்... அடிக்கிறபோது எல்லோரும் விழுகிறார்கள். பகவானைப் பார்த்துக்கொண்டே விழுகிறார்கள் அவர்கள். மோக்ஷம் உடனேயே கிடைத்து விடுகிறது.

அப்போதுதான் பீஷ்மாச்சார்யார் சொல்கிறார். "அந்திமக் காலத்திலே, யாரைப் பார்க்க வேண்டுமோ அப்படிப்பட்டவனைப் பார்த்து, அவர்கள் எல்லோரும் மோக்ஷம் அடைந்துவிட்டார்களே! சுவச்சந்த ம்ருத்யுவாக இருப்பதனாலேதானே நான் இன்னமும் இருந்துகொண்டு கஷ்டப்படுகிறேன்...!" என்று வருத்தப்படுகிறார்.

(வளரும்)

நீங்கள் கேட்டவை-தராசு

● **எம். சிவகுருநாதன், தஞ்சாவூர் - 4.**

? 'ஜெ. பிரதமராக இருந்திருந்தால் அயோத்தி பிரச்னைக்குத் தீர்வு கண்டிருப்பார்' என்று சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் விச்வ ஹிந்து பரிஷத் பொதுச் செயலாளர் தொகாடியா கூறியிருப்பது பற்றி...?

! தொகாடியா ஐஸ் வைத்த உடனே அம்மாவும் அயோத்தியில் ராமர் கோயிலுக்கு ஆதரவு தெரிவித்துவிட்டாரே!

● **ஒய்.எஸ்.ப்ரீதா, சென்னை - 12.**

? லாரல் - ஹார்டியுடன் கவுண்டமணி - செந்திலை ஒப்பிடலாமா...?

ராப்ரியின் டீ செலவு பதினேழு லட்சமாமே!



• காலமும்...



• கட்டாயமும்!

! லாரல் - ஹார்டி நகைச் சுவை ரொம்ப உயர்தரம் என்று சொல்ல முடியாது. ஆனால், அதில் கீழ்த்தரமான இரட்டை அர்த்த வசனங்கள் கிடையாது. அந்த அளவில் அவர்களுக்கு ஒரு மரியாதை உண்டு. திரை உலக சரித்திரத்தில் இடமும் உண்டு.

● **எஸ். சுவாமிநாதன், மன்னார்குடி.**

? தமிழகத்தில் 2.3 லட்சம் பி.எஸ்.என்.எல். போன்கள் 'சரண்டர்' செய்யப் பட்டிருப்பது பற்றி...?

! எதிர்பார்த்ததுதானே! தனியார் துறை கட்டணங்கள் மலிவாகி வருகின்றன; சேவை, அரசுத் துறையைக் காட்டிலும் சிறப்பாயிருக்கிறது. பி.எஸ்.என்.எல் யோசிக்கும் நேரத்தில் தனியார் சாதித்து விடுகிறார்கள்!

● **ஆர்.பி.ஜெயச்சந்திரன், பூனாம்பாளையம்.**

? ''கண்ணகி சிலைக்காக தி.மு.க. போராடுவதைப் போல்தான் ராமர் கோயிலுக்காக பா.ஜ.க போராடுவதும்'' என்று இல.கணேசன் சொல்கிறாரே...?

! ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லா தவற்றை முடிச்சுப் போட்டு ஒப்பிடுவதில் தாம் எந்த அரசியல்வாதிக்கும் சளைத்தவரல்ல என்று நிரூபித்துள்ளார்.

● **த. குணசேகரன், ஈரோடு.**

? "போராட்டத்தில் பங்கேற்காத அரசு ஊழியர்களுக்கு, அரசு சம்பள உயர்வு அளிக்க வேண்டும்'' என்று தமிழக முதல்வருக்கு இல. கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளாரே..?

! இந்த 'மேலான' யோசனையை ஏற்காமலிருந்தால் முதல்வர் அரசு ஊழியர்களை மேலும் விரோதித்துக் கொள்வதைத் தவிர்க்கலாம்.

● **கு. கணேசன், மறைமலைநகர்.**

? தமிழ்நாடு மின்சார வாரியம்தான் நாட்டிலேயே 'நம்பர் ஒன்' என்று மத்திய மின்துறை செயலகம் அறிவித்துள்ளதே?

! அதனால்தான் ஜெனரேட்டர் வரி

போட்டுத் தனியார் நிறுவனங்களைத் தாளித்தெடுக்க திட்டமிடுகிறது போலிருக்கிறது தமிழக அரசு!

● **ஆர்.எஸ். சந்திரசேகர், சென்னை - 53.**

? அரசு ஊழியர் பிரச்னை 'பிள்ளையார் பிடிக்க குரங்கு ஆனது பற்றி...?'

! தப்புங்க; அது கிணறு வெட்டப் போய் பூதம் புறப்பட்ட கதைங்க.

● **என். பாலகிருஷ்ணன், மதுரை - 1.** ❒

? 'தி.மு.கவும் அ.தி.மு.கவும் ஒரே குட்டையில் ஊறிய மட்டை' என்று அன்று காமராஜர் கூறியதற்கும் இன்று ப.சிதம்பரம், 'தி.மு.கவும் அ.தி.மு.கவும் ஒன்று' என்று கூறுவதற்கும் என்ன வித்தியாசம்...?

! காமராஜ் காலத்து காங்கிரஸ் தனித்துப் பலம் வாய்ந்ததாயிருந்தது. இன்றைய காங்கிரஸ் / காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை / த.மா.கா. யாவுமே முதுகு சவாரி செய்ய வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளன.

● **லெ.நா. சிவகுமார், சென்னை - 33.**

? அருணாசலப் பிரதேசம் இந்தியாவுக்குச் சொந்தமில்லை என்றொரு குண்டைத் தூக்கிப் போடுகிறதே சீனா...?

! திபெத் சீனாவைச் சேர்ந்தது தான் என்று முந்திக் கொண்டு அங்கீகாரம் தந்ததற்குக் கிடைத்துள்ள மூக்குடைப்பு!

● **வி. ஷியாம், சென்னை - 78.**

? வைரமுத்துவுக்கு ஐந்தாவது தடவையாக தேசிய விருது கொடுக்காமல் ஏன் வேறொருவருக்குக் கொடுத்திருக்கக் கூடாது? மூன்று தடவைக்குமேல் ஒருவருக்குப் பரிசு கொடுக்கக் கூடாது என்று விதி கொண்டு வந்தால் என்ன...?

! அது விதியாகாது; சதியாகிவிடும்! மேலும், அடுத்த முறை வேறு யாரேனும் விருது வாங்கினால், ஐந்தாண்டுகளாக வைரமுத்து ஆக்கிரமித்த ஒரு கோட்டையைப் பிடித்த பெருமையும் கிடைக்கும் அல்லவா!

● **த.நா.இராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்.** ✱

? பீஹார் முதல்வர் ராப்ரி தேவியின் டீ செலவு பதினேழு லட்சமாமே...?

! விருந்தினருக்குத் தங்கக் கோப்பையில் டீ கொடுத்து, அதை வீட்டுக்கும் கொண்டு போக அனுமதி வழங்கியிருப்பாரோ



• கேட்டதும்....





• யோசனைமேல்...

• ... யோசனை



• ... கொடுப்பவர்!





• தேனீரும்...

• ...தீனியும்!





• ...காணுமா?...





• சாதனை...



• ...சந்தோஷம்

❑ ரூ. 100/- பரிசு பெறுபவர்:

என். பாலகிருஷ்ணன்,
இந்தியன் வங்கி,
டவுன் ஹால் ரோடு கிளை,
மேல மாசி வீதி, மதுரை - 625 001.

• ரூ. 50/- பரிசு பெறுபவர்:

த.நா. இராஜேஸ்வரன்,
தெற்கு வீதி, மொரட்டுப்பாளையம்,
ஈரோடு - மாவட்டம்,
638 752

! புலி பசித்தால் புல்லைத் தின்னும் என்பது நிருபணமாகியிருக்கிறது.

● டி. சுப்ரமணியன், மேலையூர்.

? செரினா...?

! பரபரப்புக்கு அலையும் பத்திரிகைகளுக்குத் தீனி!

● முகவை முத்துசாமி, தொண்டி.

? சமீபத்திய சந்தோஷம்...?

! நூர்.

● பொன்விழி, அன்னூர்.

? இளம் வயதில் அரியணை ஏறியவர் யார்...?

! ஆப்பிரிக்காவிலுள்ள டோரா நாட்டில் தயிம்பா கபாம்பா இருகு ருகிடி IV தான், மிக இளம் வயதில் அரியணை ஏறியவர் என்கிறது கின்னஸ் புக் அஃப் ரெகார்ட்ஸ்.

● கே.எல்.கந்தரூபி, மேலகிருஷ்ணபுதூர்.

? அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை தற்போது மக்கள் சேவை செய்யவில்லை; அவர்கள் அரசியல் சூதாட்டங்கள்தான் நடத்துகிறார்கள் என்பது உண்மையா...?

! அரசியல் சூதாட்டமல்ல, திட்டமிட்ட முதலீடு வியாபாரம் - கொள்ளை லாபம். மற்றபடி மக்கள் சேவையாவது புண்ணாக்காவது! அதெல்லாம் அந்தக் காலம்!

● எம். ரேவதி, மன்னார்குடி.

? நீங்கள் கண் விழித்தவுடன் முதலில் பார்க்கும் பொருள் எது...?

! அலாரம் கடிகாரம்.

என்னவோ!

● ப. காளிதாசன், வேட்டனூர்.

? அன்பைவிட உயர்வானது எது...?

! அதைச் செலுத்தும் மனம்.

● ஜெயா ஸ்ரீனி வாஸ், சென்னை - 92.

? 'ஜெயலலிதாவிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்கிறேன்' என்று என்.ஜி.ஓ. தலைவர் சூரியமூர்த்தி சொல்லியிருப்பது பற்றி..?

எள்ளளவும் பிசகாமல் பலன் சொல்ல உரிய உயரிய

ஜோதிடப்பயிற்சி

(தபால் வழி போதனா முறை)

நாளைய வாழ்வு அனைத்துமே பிறந்து முதல் மூச்சுவிடும் கால அளவையில் கிரகங்கள் பிழையின்றி எழுதி வைத்து விடுகின்றன. கிரகங்களின் சக்தியும் அதன் இயக்கங்களும் தான் மனிதரது வாழ்வை செதுக்கி உருவாக்குகின்றன. முதல் மூச்சுவிடும் நேரம் தான் அவதரித்த காலம் அதனை சரியாக மட்டும் கணித்துவிட்டால் வாழ்வில் ஒவ்வொரு நாளும் என்ன விதத்தில் நடக்கும் என்று கிரகங்கள் சித்தரித்துவிடுங்கள். அத்தகைய திசயவல்லமை கிரகங்களுக்கு அந்த கணக்கை அப்பியாசம் செய்து அறிவதுதான் ' ஜோதிடக்கலை' .

அந்த அரிய கலையை - அரிச்சுவடி முதலாக ஆதியந்தம் வரை கற்று ஒரு ஜாதகத்தை பார்த்தவுடன் அது தவறாக எழுதப்பட்டு இருக்கின்றதா, சரியா என்பது முதலாக, என்ன படிப்பு, என்ன இயல்பு, என்ன பட்டம், என்ன பதவி - சம்பாத்திய வழியில் அரசனா அல்லது அல்லலுறும் ஆண்டியா - அறிவாற்றல் மிக்கவனா அல்லது அசடு வழியும் அற்பனா என்பது முதலாக - குடும்ப வாழ்வு, வாரிசு வழி, வரும் வாழ்வில் வாழ்வாங்கு வாழும் வகையினனா? பெண் வழியில் எத்தகைய இயல்பு - நல்ல மனையாட்டியுடன் நறுவாழ்வு வாழ்வானா, நாடோடி நாயகனாய் - நல்லிந்த வாழ்வு கொள்வானா என்ற வரலாறு அனைத்தும் கண்டிடலாம். நெறி முறைகள் காத்து நீதிபதி யாவானா? நெஞ்சுருக பேசி நேச மிக்க பக்தர் வழி வந்து பலரையும் காப்பானா? தொழில் வழியில் செல்வமீட்டி, மாட மாளிகை கூட கோபுரம் கட்டி கோடீஸ்வரன் ஆவானா. என்றெல்லாம் எள்ளளவும் பிசகின்றி சொல்லிட 250 உதாரண ஜாதகங்களிட்டு பலன் சொல்லும் வழிகள் விளக்கிடப்பட்ட பாடங்கள்.

எவ்விதம் எப்பிசகுமின்றி ஜாதகத்தை கணிப்பது என்ன சூழ்நிலையில் இக்குழந்தை பிறந்திருக்கும் என்ற உறுதி பார்த்து கணிக்கின்ற வழி முறைகள், என்ன என்ன பாவகத்தில் இன்ன இன்ன கிரகங்கள் எவ்வித வழிப்பெற்று நின்றிருந்தால் என்ன பலன். எவ்விதம் ஆயுளை அளவை செய்வது. இனிதான இல்லறத்தை ஏற்கின்ற ஜாதகமா? பெண்களுக்கு நல்ல நாயகன் வாய்ப்பானா விவாக வயதில் பிள்ளை பேறு உண்டாகுமா?ஆண்கள் நல்ல வேலை வாய்ப்பினை அடைந்து காலம் முழுவதும் கஷ்டமின்றி வாழும் நிலை அடைவானா? என்ற எல்லா சரிதத்தையும் பார்த்த மாத்திரத்தில் கண்டறியும் விதத்தில் கற்பிக்கப்படும்.

வாழ்நாள் முழுவதும் எவ்வித காலங்களில் எவ்விதம் இயக்கம் இருக்கும் என்பதையும் ஈன்ற மக்களால் இனிதான நலங்களா அல்லது இழிநிலை தான் வழியா என்ற நிலைகள் அத்தனையும் சற்றும் பிசகாது கண்டறியும் விதமாக ஜோதிட தந்தை வராகமிகிரர் வழிவகை வந்த கிரந்தங்கற்ற எமது வாரிசு வழியினரால் ஆக்கப்பட்ட 63 பாடங்கள் ஆக்கப்பட்டிருக்கும் அனைத்தையும் கற்று கடைசி பாடவினாக்களுக்கு சரியாக விடையீர்த்தார்க்கு சான்றிதழும் 'ஜோதிடக்கலைஞர்' என்ற பட்டமும் தருவோம்.இதுவரை கற்றார் அனைவரும் இதன் வழியாக சரியாக பலன் சொல்லும் வல்லுநர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர். தமிழர்கள் எங்கெங்குள்ளாரோ அங்கெங்கெல்லாம் கற்று சான்றிதழ் பெற்று தொழிலாக செய்து தனவந்தர்களாகவும் ஆகி இருக்கின்றனர்.

இதனை கற்றிட விரும்புவோர்க்கு - இந்த ஞான சித்த அருளை வராது தடுக்கும் மதுபானம் செய்தல், புகை பிடித்தல், பொடி, புகையிலை போடும் பழக்கம் இருக்கக்கூடாது. கிரகத்தை தினசரி வணங்கிடும் வழக்கம் வேண்டும். இவை முக்கியம். எனவே விரும்புவோர் ஜாதக நகலுடன் 18-09-2003 தேதிக்குள் 'ஜோதிட கலை கற்றிட விரும்புகின்றேன்' என எழுதி மனு செய்திடுக. கிடைத்தவுடன் விபர படிவம் அனுப்புகின்றோம். எமது பூரண ஆசிகள்.



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி

இராஜயோக பயிற்சியாளர்

பிளாட்எண்: 204, அண்ணாநகர் மதுரை - 625 020 தமிழ்நாடு

(0452) 2533412 2650576

கிராமம் நகரம் மாநகரம்

நா.முத்துக்குமார்

இன்னும்
நாதி கழுவாத
இப்போது தான்
புதிதாகப் பிறந்த
குழந்தையின்
பழைய சட்டை என்று
ஏதும் இல்லை
மெல்லத் திறக்கும் கண்களால்
எந்த உலகை
புதுசாக்க வந்தாய்
செல்லக்குட்டி, அதை எப்படி ஆக்குகிறாய்
என் தங்கக்குட்டி

- தேவதச்சன்

('அத்துவான வேளை' தொகுப்பிலிருந்து)





குழந்தைகள் அழுதுகொண்டே பிறக்கின்றன. பூமி சிரித்துக் கொண்டே வரவேற்கிறது. பால்யம் தன் முதல் முரணை ஆரம்பிக்கிறது.

குழந்தைகள் ஒரு எழுதப்படாத சிலேட்டைப் போல் மண்ணில் வந்து விழுகின்றன. பால்யம் தன் முதல் புதிரை இறுக்குகிறது.

குழந்தைகள் ஒரு பென்சில் மரம் வளர்க்கின்றன. பால்யம் தன் முதல் வன்முறையைக் கூர் தீட்டுகிறது.



குழந்தைகள் ஒரு பிரம்மாண்டத்தின் கதவைத் திறக்கின்றன. பால்யம் தன் முதல் கேள்வியைக் கேட்கிறது.

குழந்தைகள் ஒரு நிர்வாணத்தை எதிர்கொள்கின்றன. பால்யம் தன் முதல் அதிர்ச்சியை ஆரம்பிக்கிறது.

குழந்தைகள் ஒரு சக பயணியை இழக்கின்றன. பால்யம் தன் முதல் மரணத்தை அறிமுகப்படுத்துகிறது.

நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு உறைந்து போன நதி இருக்கிறது. அது நம் பால்யங்களின் நதி.

அதன் கரைகளில் நாம் கூழாங்கற்கள் பொறுக்கியிருக்கிறோம். அதன் சுழிகளில் நாம் மூச்சுத் திணறியிருக்கிறோம். அதன் அலைகளை எதிர்த்து நாம் நீச்சல் பழகியிருக்கிறோம்.

ஆகாயமும், சூரியனும், நிலவும்,



நட்சத்திரங்களும் அந்த நதியில் அசைந்து அசைந்து சென்றிருக்கின்றன.

'ஒரு மனிதனின் முழு வாழ்க்கையும் அவனுக்குக் கிடைக்கும் பால்யத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகிறது' என்கிறார்கள் சிக்மண்ட் ஃப்ராய்ட் போன்ற உளவியலாளர்கள்.

மூன்று வயது முதல் பதினைந்து வயது வரை உள்ள அனுபவங்களும், அலைகழிப்புகளும் தான் நம் ஆளுமையை உருவாக்குகின்றன. இன்றைக்கும் உலக இலக்கியங்கள் பல, பால்யத்தில் இருந்துதான் தன் மூலப் பொருளை எடுத்துக் கொள்கின்றன.

2

பனங்காயில் வண்டி செய்து

பம்பாய்க்குச் செல்கிறேன் என்று சொல்லி பசுமாட்டுத் தொழுவத்தைச் சுற்றுவதில் ஆரம்பிக்கிறது கிராமத்தின் பால்யம். முதல் எதிர்பார்ப்புடனும், முதல் ஏமாற்றத்துடனும், முதல் சமரசத்துடனும், அந்த வண்டி வயதின் பாதைகளில் இன்னமும் உருண்டு கொண்டிருக்கிறது.

கொட்டாங்குச்சிச் சிறையில் பொன் வண்டுகள் அடைபடுகின்றன. முதல் சிறை அங்கு உருவாகிறது.

விர்ரென்று காற்றில் அலைந்து அனுமதிக்கப்பட்ட நூல் உயரத்தில் பறக்கின்றன பொன்வண்டுகள்.

எங்கிருந்துதான் முளைக்கின்றன இந்த பொன்வண்டுகள்? வசிகரிக்கும் வண்ணங்களுடன் எப்படி வந்து முள் மரங்களில் படர்கின்றன?



''உங்க நர்சரி ஸ்கூலை ஏன் நைட்ல வச்சிருக்கீங்க?''

''எல்லாரும் பகல் கொள்ளை அடிக்கறோம்னு சொல்றாங்க...''

- சோழபுரம் யாக்கோப்

கொரிகலிக்காய் தழைகளைத் தின்றுவிட்டு பச்சை நிறத்தில் கழிவுகளும், மஞ்சள் நிறத்தில் முட்டைகளுமாய் எவ்விதம் நிறம் பிரிக்கின்றன?

கைக்கெட்டும் தூரத்தில் கருவண்டுகள் இருந்தாலும், பொன்வண்டுகள் தான் நமது இலக்கு. முதல் நிற வேற்றுமை இங்கு தொடங்குகிறது.

கார்த்திகை தீபத்திற்கு மாவளி சுற்ற பனை மரம் ஏறி... வண்ணாங்காய் பறித்து.... பன்னத்தில் கணப்பூட்டி.... கருகக் கருக அரைத்து... தீச்சுடர் தீர்ந்த மட்டைகளை அடுத்த வருடத்திற்கு என முருங்கை மரத்தில் கட்டுகையில்... முதல் தீ கனல்கிறது.

ஜலதோஷ கஷாயத்திற்காய், பரந்த புல்வெளிகளில் தும்பைப்பூ தேடுகையில் முதல் மருத்துவம் தொடங்குகிறது.

தண்ணீர்ப் பாம்புகளும், தவளைகளும் அதிர்ச்சியில் பொந்துகளில் பதுங்க, கிணற்றுக்குள் குதித்து, அடி மணலை உள்ளங்கையில் எடுத்து மேலே வந்து, மூச்சு வாங்குகையில் முதல் சவால் தொடங்குகிறது.

அடித்து வந்த ஆற்று வெள்ளத்தில் புடைவையை வலையாய் வீசி, தலைப்பிரட்டைகளை மீன் என நினைத்து பிடிக்கையில், முதல் சாயல் முகம் காட்டுகிறது.

'கண்ணாமூச்சு ரே ரே' வில் முதல் தொலைதல். கபடி கபடியில் முதல் வியூகம். பம்பரத்தில் முதல் ஆக்கர். சிலம்பில் முதல் தற்காப்பு. பம்புசெட் மறைவுகளில் மேலா? கீழா? என்று கோலிகளைக் காட்டி ஆடும் பட்டறை விளையாட்டில் முதல் சூது.

மாறாக, நகரம் மற்றும் மாநகரங்களின் பால்யம் வேறு விதமானது.

தடித்த கம்பிகளை வெறித்துக் கொண்டிருக்கிறது ஒரு குழந்தை. அடுக்கு மாடிக் குடியிருப்பின் ஜன்னல்களில் காயவைத்த துணிகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. ஒரு சட்டை கையை ஆட்டி ஆட்டிக் கேட்கிறது.

''குட்டிப் பாப்பா.. இப்படியே காத்துல பறந்து போலாமா?''

குழந்தை சொல்கிறது.

''ஹோம் ஒர்க் எழுதணும், மிஸ் அடிப்பாங்க.''

மாநகரத்தில் காத்தாடிகள் பறக்கின்றன. தாழப்பறக்கும் விமானங்களுக்கு அவை சவால் விடுகின்றன. மாநகரம் வால் இல்லாத காத்தாடிகளை உற்பத்தி செய்து கொண்டே இருக்கிறது. வால் என்பது காட்டு மிராண்டிகளின் சின்னம்.

கலர் கலரான காத்தாடிகள். அதன் நூல்கள் கண்ணாடித் துகள்களையும் மஞ்சளையும் கலந்து உறுதியாக்கப்பட்டிருக்கின்றன. மற்ற காத்தாடிகளை வம்புக்கு இழுக்கின்றன.

நூல் அறுந்த காத்தாடிகள் பறந்து பறந்து மின்சாரக் கம்பிகளில் இளைப்பாறுகின்றன. டீசல் புகை படிந்த காற்று, காத்தாடிகள் மீது உக்கிரமாக மோதுகிறது. காலங்காலமாய் காற்றுக்கும் காத்தாடிக்குமான யுத்தம் தொடர்கிறது. குழந்தைகள் தங்கள் கனவுகளைப் பறக்கவிட்டபடி, மொட்டை மாடியில் நிற்கிறார்கள்.

(சந்திக்கிறேன்)

ரங்கசாமிக்கு எதிராகக் கொடி தூக்கி விட்டார்கள் காங்கிரஸ்காரர்கள். அமைச்சர்கள் கருத்தரங்கம், மாநாடு என்று டில்லிக்குப் பறக்க, உள்ளூர்ப் பத்திரிகைகள் ஏதோ ஆட்சியே கவிழ்ந்துவிடும் போல போஸ்டர்களில் பட படக்க, முதல்வரைப் பார்க்க, அவரது வீட்டுக்குப் போனால், உதவியாளர் கூலாக "டீ சாப்பிடப் போயிருக்கிறார்" என்று சொல்லி நம்மை அமர வைக்கிறார். முதல்வரை டீக்கடையில் சென்று பார்க்கலாம் என்று கிளம்பிச் சென்றால், அங்கிருந்தும் பொடி நடையாக ஜூட் விட்டு தொகுதியில் உள்ள ஏரியின் கரைகளைப் பார்வையிடச் சென்று விட்டார் ரங்கசாமி.

சாவகாசமாக ஒன்றரை மணி நேரம் கழித்து வந்தவரை "என்ன ஸார் கலாட்டா?" என்று தோழமையுடன் விசாரித்தோம். கூட இருந்த முதல்வரின் நண்பர் முன்னாள் எம்.எல்.ஏ. கந்தசாமி "முன்னாள் முதல்வர்கள்'' என்று துவங்கி அவர்களது செயல்பாடுகளை விமர்சிக்கத் துவங்க, ''சும்மாயிருங்க'' என்று அவரை அடக்கி விட்டு, ''ஒண்ணும் நடக்கலை. எல்லாம் சரியாத்தான் இருக்கு" என்று பேச்சைத் திசை திருப்பும் வகையில் சொன்னார் முதல்வர். "நம்மால் முடிந்ததைச் செய்வோம். வேற ஒன்றும் பேச வேண்டாம்" என்றார்.




'காம்'ராஜ்

சமீபத்தில் கல்வி இலாகா சம்பந்தப்பட்ட ஒரு கூட்டத்திற்கு, சம்பந்தப்பட்ட அமைச்சரை அழைக்காமல் முதல்வர் கூட்டத்தை நடத்தியதால்தான், சில காங்கிரஸ்காரர்களுக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. ஆனால் ரங்கசாமியைப் பொறுத்தமட்டில் அவருக்குள்ள மிஸ்டர் க்ளீன் இமேஜும், எளிமையும் அவரைப் புதுவையில் காமராஜராக, இல்லை யில்லை, 'காம்' ராஜாவாக உயர்த்தி விட்டிருக்கின்றன.

புதுவையில் உள்ளாட்சித் துறை தேர்தல்கள் நடந்து பல வருடங்களாகின்றன. பாண்டிச்சேரிக்கு மேயர் என்பது பழங்கதை ஆகிவிட்டது. இது பற்றிக் கேட்டால் "வழக்கு இருக்கு. அது முடிந்தவுடன் தேர்தல் வரும்" என்கிறார் முதல்வர்.

முழங்கைக்கும் கீழே தொள, தொளவென்று தொங்கும் கதர் சட்டையைப் பார்க்கும்போது, 'தையல்காரர் முதல்வருக்கு இரட்டை அளவு எடுத்துத் தைப்பாரோ' என்ற தேவையில்லாத சந்தேகம் வந்து தொலைக்கிறது.



ஜொல்லு மல்லு
—கதிர்
நேத்து ராத்திரி ஒரு கெட்ட கனவு.
என்னடா?
உன்னை உலக அழகியா தேர்ந்தெடுக்கற மாதிரி...
அது கெட்ட கனவா?
பின்னே. ஒரு வருஷத்துக்கு இதே முகத்தை பேப்பர்லே, டி.வி.யிலன்னு எல்லாத்திலேயும் காட்டுவாங்களே.
கனவுலே நான் எப்படி... தலையிலே கிரீடத் தோடவும் கண்ணுல ஆனந்தக் கண்ணீரோடவும் தேவதை மாதிரி இருந்தேனா?
அதான் இல்ல. நீ விழுந்து விழுந்து சிரிக்கிற. ஆனா பாரு.. ஆடியன்ஸ் எல்லாரும் தேம்பித் தேம்பி அழறாங்க.
நீ வேணும்னா பாரு. ஒரு நாள் நான் உலக அழகியா ஆகி உன் மூஞ்சில கரி பூசறேனா இல்லையான்னு?
அதுக்கு நீ கஷ்டப்பட்டு உலக அழகியா ஆகணுமா! கடையில காசு கொடுத்தா கரி கிடைக்குமே...

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / PMG (CCR) 572 / 03 - 05
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 358 * Registered as a Newspaper in Srilanka